www.padippakam.com

# பூவும் புல்லிதழும்




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பூவும் புல்லிதழும்

அனலை ஆறு. இராசேந்திரம்

வெளியீடு:
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
*2000*


படிப்பகம்

www.padippakam.com

# POOVUM PULLITHAZHUM

**Author: Analai Aru. Rajendram**


| | |
|---|---|
| தலைப்பு: | பூவும் புல்லிதழும் (திருக்குறள் உரைகள் மீதான ஒப்பீட்டுக் கட்டுரைகள்) |
| நூலாசிரியர்: | அனலை ஆறு. இராசேந்திரம் |
| பதிப்பாசிரியர்: | திருமதி தே. இராசேந்திரம் |
| முதற்பதிப்பு: | தை 2000 |
| பதிப்புரிமை: | ஆசிரியருக்கே |
| அச்சமைப்பு/ வடிவமைப்பு: | இ. அன்பரசி |
| அட்டை அமைப்பு: | கருணா (digi Graphics & Studios) |
| வெளியீடு: | கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் |
| அச்சுப்பதிப்பு: | விவேகா அச்சகம் |

Publisher: Mrs. T. Rajendram
Tel: (416) 439-7819




படிப்பகம்

www.padippakam.com



கல்வியறிவூட்டி வளர்த்து
எம்மை ஆளாக்கி
மறைந்த
அருமைத் தந்தையார்
பொன்னடிகளுக்கு இந்நூல்
காணிக்கை.


படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

ஒரு நூலுக்கு அணிந்துரை எழுதவேண்டுமாயின் அதனை ஒருமுறை முழுமையாக வாசிக்கும் முன் பேனாவையே தொடுவதில்லை என்ற விரதம் என்னிடம் உண்டு. நண்பர் அனலை இராசேந்திரம் அவர்களின் "பூவும் புல்லிதழும்" என்ற நூலை ஒருமுறையல்ல. இருமுறைகள் வாசித்த பின்னரே இதனை எழுதத் தொடங்கினேன். நூலில் உள்ள இருபத்தி ஆறு கட்டுரைகளையும் நான் வாசித்துக் கிரகிக்க எடுத்த நேரம் மிக அதிகம். உண்மையைச் சொல்வதென்றால், இந்நூலினை நான் வாசித்தமையால் புதிய பல தகவல்களைப் பெற்று எனது அறிவினை விசாலிக்கமுடிந்தது.

திருக்குறளுக்கு இதுநாள்வரை நூறுக்கும் அதிகமான தெளிவுரை, விளக்கவுரை, விருத்தி உரை, புதியஉரை, தெரிவுரை என பல உரைகள் வெளிவந்துள்ளன. இவை தவிர ஜியூ போப் பாதிரியார் தொடக்கம் பல கிறிஸ்தவப் பாதிரியார்கள், வா.வெ.சு ஐயர், இராஜாஜி, பி.எஸ் சுந்தரம் போன்றோர் ஆங்கிலத்திலும் மொழி ஆக்கம் செய்துள்ளனர். அண்மையில் ஹவாயில் உள்ள சற்குரு சிவாய சுப்பிரமணியசுவாமி அவர்களின் *Himalayan Academy* அமெரிக்க ஆங்கில வெளியீடாக அறத்துப்பாலையும், பொருட்பாலையும் மாத்திரம் *Weaver's Wisdom* எனும் நூலாக வெளியிட்டுள்ளது காமத்துப்பாலை அவர்கள் மொழிமாற்றம் செய்யாதகுறையினைப் போக்க, பெரியார்தாசன் காமத்துப் பாலை மாத்திரம் புதுக் கவிதையாகத் தந்துள்ளார். யாருக்குத் தெரியும் "பூவும் புல்லிதழும்" வெளியீடாவதற்கு முன்னர் இன்னும் ஒன்றோ இரண்டோ தெளிவுரைகள் வெளிவந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. சற்குரு சுப்பிரமணியசுவாமி அவர்கள் கூறுகிறார்கள், தாம் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யத் தொடங்கி அச்சிட்டு முடித்த காலத்திலே, மேலும் மூன்று



படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்புக்கள் வந்துள்ளனவாம்.

ஆம். இதுவே திருக்குறளின் சிறப்பாகும். அன்றைய மணக்குடவரிலிருந்து இன்றைய கலைஞர் கருணாநிதி வரை, பண்டைய சமய ஆசார சீலரிலிருந்து இன்றைய நாத்திகவாதிகள் வரை, முதலாளித்துவ சித்தாந்திகள் தொடக்கம் கம்யூனிச விசுவாசிகள் வரை யாபேரும் தமக்கு உற்ற துணையாகப் பற்றி நிற்கும் ஒரே இலக்கியம் திருக்குறளே. சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமி அவர்கள் *'Weaver's Wisdom'* என்ற நூலின் அறிமுகத்தில் பின்வருமாறு கூறுகிறார். *"yes, It is only fitting that, the Thirukkural play a dynamic part in today's world for through all our experience we have discovered no other work from any culture, from any time in history, from any place on earth that even the least way holds a candle to the Thirukkural. It is one of a kind, a gift from up down a spiritual, intellectual, emotional guide map for all man kind".* சொன்னவர் தமிழர் அல்லர் என்பதால் இவை சத்தியமான வார்த்தைகள் ஆகும்.

சுஜாதா அவர்கள் தனது "திருக்குறள் புதிய உரை" என்ற நூலில் கீழ் உள்ளவாறு கூறுகிறார். "திருக்குறளுக்குத் தமிழில் உரை எழுதிய பெரும்பாலோர், ஒவ்வொரு குறளையும் பதத்திற்குப்பதம் எடுத்து அவைகளின் கருத்தை உரைநடையில் தந்துள்ளார்கள். இவ்வாறான முயற்சிகள் பல மணக்குடவர், பரிமேலழகரின் நூலைச்சார்ந்து இருந்தாலும் உரைகளே ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. காரணம் திருக்குறள் மிகவும் சுருக்க மான பாக்களைக் கொண்ட நூல். ஒவ்வொரு குறளிலும் இருக் கும் அடர்த்தி, வார்த்தைச் சிக்கனம், சில சமயங்களில் அவை களைத் தப்பாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக்கூடிய வாய்ப்பைத் தருகிறது. மேலும் குறள் வெண்பாவின் அமைப்பு, அதன் எது கைக் கட்டாயங்கள். தமிழ் மொழியில் ஒரு வார்த்தைக்குப் பல பொருள்கள் இருப்பது; இவை அனைத்தும் ஒத்துழைத்து குறளின் தவறான புரிதல்களை அதிகரிக்கின்றன." *"With sujects*



படிப்பகம்

www.padippakam.com

*of predicates often only implied the reader is left to intuit the meaning and the the result is a wide range of legithmate interpretation"* எனச் சற்குரு கூறுகிறார். இயலறிவான பொருள் *(Intuitive Meaning)* சொல்பவர்கள் குறளைமுழுமையாக எடுத்து விளக்கம் தருவார்கள் அல்லது முழுமையான அதிகாரத்தின் பின்னணியை நோக்கி பொருளைக் கூறுவார்கள். அனலையார் தேர்ந்தெடுத்த அறுவரில் கலைஞர் உரைமட்டும் இவ்வகையின தாகும். ஏனைய மணக்குடவரும், பரிமேலழகரும், பரிதியாரும், பாரதிதாசனாரும், நெடுஞ்செழியனும் பதத்திற்குப் பதம் உரை சொல்கிறார்கள். பாரதிதாசன் உரை அறத்துப் பாலுக்கு மட்டுமே நூல்வடிவு பெற்றுள்ளது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து" என்கிறார் அமரகவி. வள்ளுவன் அத்தகை உணர்வுடன்தான் திருக்குறளை எழுதியிருக்க வேண்டும். அவனது முதிர்ந்த பட்டறிவும், பரந்த சிந்தனையும், உயர்ந்த குறிக்கோளும், நிறைந்த நன்னெறிகளும் 1330சிற்றணுக்களுள்ளே திணிக்கப்பட்டு உலகப் பொதுமறையாய், எக்காலமும் பொய்க்காத பொய்யா மொழியாய் அமைய வேண்டும் என்பதால் தானோ இயலறிவான பொருள் கொள்ளும்படி பாக்களை யாத்தான்.

இருபத்தி ஆறு கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூ லின் முதலாவது கட்டுரை "பூவும் புல்லிதழும்" ஆகும். அங்கே பரிமேலழகர் உரையில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறி சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் நடுநிலை நின்று குறை களிலும் நிறைகள் அதிகமானவை எனக்கண்டு பரிமேலழகர் உரையே மேம்பட்டு நிற்கிறது என கூறுகின்றார். இராசேந்திரம் வள்ளுவர் வாக்கின்படி, திறனறிந்து சொல்லுபவர், என்பதை வள்ளுவரின் முதலாவது குறளுக்கே பரிமேலழகர் உரை விளக்கம் தவறுடைத்து எனத்தீர்ப்பு வழங்குவதால் உணரமுடி கிறது. தேர்ந்த ஒருசட்டத்தரணிபோன்று நிறையவே மேற்கோள் காட்டி வாதிட்டு, நடுநிலை நிற்கும் நீதிபதியாய், இரண்டும்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றாய் நின்று தீர்ப்பு வழங்குதல், "அறனும் பொருளும் அதனினூஉங் கில்" எனக் காட்டுகிறது.

ஏனைய உரை ஆசிரியரோடு பரிமேலழகர் உரையை ஒப்பிடுவது ஒருவகை இலக்கியப் பயிற்சி என விதந்துரைக்கும் ஆசிரியர் அந்தப் பயிற்சியினூடே எம்மையும் அழைத்துச் செல்கையில் இலக்கியப் பூங்கா ஒன்றின் எழில் தரு வனப்புக்களை பாங்குற எடுத்துக் காட்டிக் கொண்டு போகிறாரே அப்பொழுது ஏற்படும் சுவையே தனி. தொல்காப்பியம், குறுந்தொகை, கலித்தொகை, திரிகடுகம், கம்பராமாயணம், நளவெண்பா, சமய இலக்கியம், இன்னோரன்ன எழில்தரு தருக்கள் அனலையார் அழைத்துச் செல்லும் பூம்பொழிலில் பாங்குற நிற்கின்றனவே. என்னே காட்சி.

அடுத்துவரும் ஐந்து கட்டுரைகளில் மணக்குடவர், பரிதியார் போன்ற அன்றைய அறிஞர் உரைகளையும், பாரதி தாசன், நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி போன்ற இன்றைத் தமிழ் அறிஞர்களின் உரைகளையும் தனித்தனியே பரிமேலழகர் உரையுடன் ஒப்பிட்டு இலக்கிய ஆய்வொன்றை நடாத்துகிறார். காலத்தால் முந்திய மணக்குடவர் உரையையும் சைவ உரை யாகிய பரிதியார் உரையையும் பரிமேலழகர் உரையுடன் ஒப்பிட்டு குறிப்பிட்ட சிலபாக்களுக்கு அவர்களின் உரை பரிமேலழகரினதி லும் சிறந்து விளங்குகின்றன என ஆதாரத்துடன் அறைந்து கூறுகையில் நாம் அதை ஏற்கவே வேண்டும். அடுத்த மூவரும் பகுத்தறிவாளர் எனப்படும் திராவிட இயக்கத்தினர். முதல் அதிகாரத்திற்குப் பரிமேலழகரின் கடவுள் நம்பிக்கைக்கும் சமயக் கருத்துக்களுக்கும் மாறாக மெய்யுணர்வை முதன்மைப்படுத்தி பாவேந்தர் தீட்டியுள்ள உரைகள் வலிந்து அமைக்கப் பட்டன வாய் உள்ளன" என்கிறார் ஆசிரியர். ஏற்கவேண்டியதே. இதே குறை ஏனைய பகுத்தறிவாளர் உரையிலும் நிரம்பவே உள்ளது. பாரதிதாசன் உரைபற்றிய முடிவுரையில் ஆசிரியர், "சிலகுறள் களுக்கான உரைகளில் அவர் நுண்மாண்நுழைபுலம் வெளிப்படு



படிப்பகம்

www.padippakam.com

கிறது. பரிமேலழகரை நிகர்த்த தமிழிலக்கண இலக்கியப் பெரும் புலமை உடையவரான பாரதிதாசனாரின் நூல் முழுமைக்குமான உரை கிடைத்திருக்குமானால், சில நூறு குறள்களுக்காவது அறிவுக்கும், காலத்துக்கும் பொருந்தும் உரையினைப் பெற்றி ருப்போம் என நம்பலாம்" எனக்கூறும் இடத்தே ஆசிரியரின் இலக்கியத் தாகம் புலப்படுவதைக் காணமுடிகிறது.

அடுத்து நாவலர்; நாவலர் தமது உரையின் முன்னு ரையில் கூறுவார். "மதியின்கண் மறு இருப்பது போல் பரிமேல ழகரின் வடமொழி நூலாரின் கொள்கைப் பற்றும், வைணவ சமயப்பற்றும், வர்ணாச்சிரம சனாதன தருமப் பற்றும் சார்ந்த கருத்துக்கள் வள்ளுவர் வற்புறுத்திய சான்றோர் மரபுகளுக்கும் பொதுப் பண்பாட்டியலுக்கும் உலகியலுக்கும் உண்மையியலுக் கும் பொது அறத்திற்கும் முரண்பாடான முறையில், அவரால் உரையின் சிற்சில பகுதிகளில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டுள் ளன." பரிமேலழகர் மாட்டுக் குறைகாணும் நாவலர் "கடவுள் வாழ்த்து" எனும் முதல் அதிகாரத்தின் பெயரையே "அறிவன் சிறப்பு" எனப் பெயர்மாற்றி அவ்வதிகாரத்தின் குறள்களுக்கு உரை கூறுகிறார். அனலையாரின் தீர்ப்புத்தான் யாது? "திருவள் ளுவரின் கடவுட் கொள்கைகளை மறுத்து நாவலர் கூறும் காரணங்கள் இலக்கிய நோக்கில் பலமானவை அன்று; இலக்கண ஆதாரங்களுடனும் இலக்கிய எடுத்துக் காட்டுகளுடனும் முதல் அதிகாரத்திற்கு நாவலர் வழங்கியுள்ள தெளிவுரை அவர்தம் தமிழ்ப் புலமையின் வெளிப்பாடாகக் கொள்ளப்படத் தக்கதாயினும் கொள்கைக்காக வலிந்து ஆக்கியதாகவே விளங்குகிறது. மிக்க சரியான வாதம்; மறுப்பதற்கில்லை. நாவலர் உரையினிலே சில இடங்களிலே பொருட் சிறப்பின்மையை நறுக்கென எடுத்துக் காட்டும் அனலையார் வேறுசில உரைகளில் நாவலரை நயக்கவே செய்கிறார். நாவலரின் இலக்கிய இலக்கண அறிவு, பேச்சு வன்மை பற்றியும் விதந்துரைத்துள்ளார்.

கலைஞர் உரையில் கடவுள் வழிபாடு, இல்வாழ்க்கை,



படிப்பகம்

www.padippakam.com

பெண் வழிச்சேறல், ஊழ் போன்ற அதிகாரங்களில் நிறையவே இயலறிவான பொருள் இடம்பெறுகிறது. எனவே, ஏனைய ஐவரிலும் பார்க்க அனலையாரால் கூடுதலாகவே சாடப்படுபவரும் கலைஞரே. கலைஞர் உரையைக் காய்தல் உவத்தல் இன்றி நோக்குவதே தனது நோக்கமெனக் கூறும் அனலையார் இறுதி வரை அதைக் கடைப்பிடிக்கவே செய்கிறார். கடவுள் வாழ்த் துக்கு கலைஞர் உரைசொல்லப் போகையில் அவர் இயலா மையை தெள்ளென அனலையார் காட்டுகிறார். "வள்ளுவரைக் கடவுள் நம்பிக்கையாளர் என்றோ, கடவுள் மறுப்பாளர் என்றோ துணிய முடியாத திரிசங்கு சுவர்க்க நிலையில் கலைஞர் இவ்வுரையை ஆக்கப்புறப்பட்டுள்ளார் என்பது தெளிவு. இதன் வெளிப்பாடாகப் பல குறட்பாக்களுக்கு ஐயம் திரிபற உரை வழங்க முடியாது அவர் இடர்ப்படுவதை நூலைக்கூர்ந்து நோக்குவோர் காணமுடியும்" என்கிறார் இராசேந்திரம். இங்கே அவரின் நெஞ்சுரம், அறிவு சார்ந்ததா, கொள்கை சார்ந்ததா என்ற தீர்ப்பினை உங்களுக்கே விட்டு விடுகிறேன். கலைஞர் சில இடங் களில் சறுக்கவே செய்கிறார். "வள்ளுவன் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள் அவை குறித்து அவரது பார்வை ஆகியவற்றுக்கு மாறுபடாமலும், வலிந்து என் கருத்து எதை யும் திணிக்காமலும், குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு இதுவரை உரையாசிரியர்கள் கொண்டுள்ள பொருளன்னியில் தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்கிற உண்மை நிலையைக் கடைப்பிடித்து, நான் எண்ணுவதுபோல் அவர் எண்ணினாரா என்று நோக்காமல் அவர் எண்ணி எழுதியது என்ன என்பதை மட்டுமே அக்கறை கொண்டு என் அறிவிற்கும் ஆற்றலுக்கும் எட்டிய வரையில் இப்பொன்னாடையை நெய்துள் ளேன்" எனக் கலைஞர் தன்முன்னுரையில் வடித்துள்ளார். அதற்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் நன்னன் அவர்கள் கூறுவார். "வள்ளுவர் ஈடற்ற முறை ஒன்றைப் பின்பற்றி அறம் உரைத் தாராயினும், மக்கள் அறிவுநிலை வேறுபாட்டால் அதனை உண ரும் திறன் அற்றவர்கள் ஆயினர் என்பதைவிட ஆக்கப்பட்டனர்



படிப்பகம்

www.padippakam.com

என்றுரைப்பதே சரி. அதனாற்றான் குறளுக்கு முதலில் தோன்றிய பத்து உரைகளோடு இன்றுவரை எத்தனையோ உரைகள் வந்துள்ளன. அவற்றுள் இக் காலத் தேவையைச் சரியாய் ஈடுசெய்ய வல்லதாய் எழுந்ததே கலைஞர் உரை." இரண்டு பேர்களது கூற்றுக்களையும் உன்னிப்பாய் நோக்கினீர்களாயின் சிறு முரண்பாடு இருப்பதைக்காணமுடியும். அனலையார் கலைஞர்உரையை நன்றாகவே அலசியுள்ளார். தெளிவான பார்வையின்றி கலைஞரால் ஆக்கப்பட்டது இவ்வுரை நூல் என்கிறார். எனினும் இல்வாழ்க்கையில் உள்ள குறள்களுக்குக் கலைஞர் தந்த விளக்கம் அனலையாரையும் கவர்ந்து நிற்பது தெரிகிறது. "மரபும் பகுத்தறிவும்" என்ற அடுத்த கட்டுரையில் மரபு வழி உரைக்காரருக்கும் பகுத்தறிவு உரைக்காரருக்குமிடையே உள்ள வேறுபாடுகள் காரணங்களுடன் எடுத்தியம்பப்படுகின்றன. உரையாசிரியர்கள் இன்னின்ன வகையைச் சார்ந்தவர்கள் என்று இனம் காணப்படுகிறது. பகுத்தறிவு உரைக்காரர்களில் சிலர் பதத்திற்குப் பதம் உரைகூறினாலும் அவர்களை வழிநடத்துவது இயலறிவான பொருள் கூறலே. அவர்கள் அங்கே தேடுவது தமது பகுத்தறிவுக் கொள்கைக்கு சார்பாக வள்ளுவனை வக்காலத்து வாங்க வைப்பதே. இதில் முழுமையான வெற்றி அடைந்தனர் என்று சொல்வதற்கில்லை. பகுத்தறிவு உரைகள் சில சமயங்களிலே காலத்துக் கேற்றவையாய் அமைந்துள்ளதையும் மெச்சி விதந்துரைக்கிறார் ஆசிரியர்.

அடுத்து, ஏறக்குறைய இருபது குறட்பாக்களை எடுத்து அவை ஒவ்வொன்றிற்கும் பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை விபரமாக ஆராய்ந்து எது சிறந்த உரை என அடையாளம் காட்டுகிறார். இது அவ்வளவு எளிதான காரியமன்று. "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை" என பாரதி கூறினான் என்றால், அப்படிக் கூற அவனுக்குத் தகுதி இருந்தது பலமொழிகளைத் தெரிந்திருந்தான். பலபுலவரைப் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

அறிந்திருந்தான். எனவே நெஞ்சுரத்தோடு நின்று அறைகூவினான். நம்மால் சொல்லமுடியாது. எமக்கு அத்தகுதியில்லை. இதே போன்றுதான், இந்தக் குறளுக்கு இவரது உரை சிறந்தது எனக் கூறும் தகுதி ஆசிரியருக்கு நிறையவே உண்டு. அவரது ஆழ மான தமிழ்ப்புலமை, இங்கே கை கொடுக்கிறது. திருக்குறளுக் குப் பல்லோரும் எழுதிய உரைகளோடுள்ள பரிச்சயம் நெறிப் படுத்துகிறது. தெளிவான, சீர்தூக்கிப்பார்க்கின்ற சிந்தனை தீர் மானிக்கிறது. எனவே அனலையார் உயர்ந்து நிற்கிறார்.

இத்தகைய ஒப்புநோக்குகள் திருக்குறளுக்கு இன்னும் சில உரைகள் வெளிவர வழிவகுக்கலாம் என்கின்றார் ஆசிரியர். சுஜாதாவின் உரை ஓரளவிற்கு இன்றைய காலத்திற்கேற்றதாய், எளியதாய் உள்ளது. ஆனால் கலைஞர் உரைக்கு முன் அது வந்துவிட்டமையால், கலைஞரின் சில புதிய ஏற்கக்கூடிய உரை அங்கு இல்லை. எனவே இன்னொன்று புதிதாய் வரவேண்டும் அதனை ஆக்கக்கூடிய அறிவு ஆற்றல் அர்ப்பணிப்பு அனலை இராசேந்திரத்திடம் நிறையவே உண்டு. எதிர்பார்க்கலாமா?

அனலையாரின் இந்நூலினை முழுமையாக நான் விமர்சிக்கவில்லை, எதை விடுவது எதைச் சொல்வது என்ற சிக்கல் காரணமாக. நான் பெற்ற இன்பம் உங்களுக்கும் கிடைக்க வேண்டும். நூலை ஒருமுறை வாசித்தீர்கள் என்றால் நான் சொல்வது சத்தியமான உண்மை என்பது தெரியும்.

**பொ. கனகசபாபதி**
பல்கலாச்சார ஆலோசகர்
தொரன்ரோ பாடசாலைகள் சபை
கனடா



படிப்பகம்

www.padippakam.com

# வெளியீட்டுரை

"திருக்குறள் உரைவேறுபாடுகள்" பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அனலைஆறு. இராசேந்திரம் அவர்களால் 1997ஆம் ஆண்டிலிருந்து 1999 நடுப்பகுதிவரை 'நம்நாடு' பத்திரிகையில் வெவ்வேறு தலைப்புக்களில் அவ்வப்போது வெளிவந்தவை.

ஆரம்ப கட்டுரைகள் சிலவற்றைப் படித்த அளவிலேயே அவற்றின் அருமையை உணர்ந்து, தொடர்ந்து எழுதி நூலாக வெளியிடவேண்டும் என்றும் நூல் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வெளியீடாக வரல்வேண்டும் என்றும் கட்டுரை ஆசிரியரிடம் அப்பொழுதே கூறிவைத்தேன். அவர் இணையம் தொடங்கப்பெற்ற காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்து வருபவர்; அதன் வளர்ச்சியில் அதிகஅக்கறை காட்டுபவர்; இணையத்தின் வெளியீடாகத் தமது நூல் வெளிவருவதைப் பெருமையாகக் கருதிச் சம்மதத்தையும் உடன் தெரிவித்தார். இப்பொழுது அவர் எழுதி முடித்த 26 கட்டுரைகளையும் தொகுத்து நூலாக வெளியிடும் வாய்ப்பு இணையத்துக்குக் கிடைத்துள்ளது.

ஆறுமுகம் இராசேந்திரம் அவர்கள் அனலைதீவைச் சேர்ந்தவர். அருமையான மரபுக் கவிதைகள் பல எழுதியுள்ளார். கனடாவில் பல கவியரங்கங்களில் பங்குபற்றியவர். பத்திரிகைகளிலும் பல சிறப்பு மலர்களிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன. வெளிவரவிருக்கும் "தமிழர்ஆற்றுப்படை" என்னும் சிற்றிலக்கியம் இவரது கவி வளத்துக்குப் பெருஞ்சான்று.

தமிழிலக்கியங்களை ஆழ்ந்து நோக்கும் இயல்பினர் அனலை ஆறு இராசேந்திரம் அவர்கள். ஓரிரு குறள்களுக்கு உரையாசிரியர் தரும்உரைகளும் விளக்கங்களும் பொருந்துவதாக இல்லை என்பதைக் கண்டறிந்தபோது குறள்களின் உரைகளை முறை யாக ஆராயவேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கு மேலிட்டது. விளைவு: "பூவும் புல்லிதழும்" என்னும் இந்நூல்.



படிப்பகம்

www.padippakam.com

திருவள்ளுவ நாயனார் மகா ஞானி; மனித இயல்புகளையும் வாழ்க்கை நியதிகளையும் உய்த்து உணர்ந்த உன்னதமான உளவியலாளர்; நீதி நியாயங்களை நன்கறிந்த நிகரற்ற நீதிபதி; மனிதகுலம் மாண்புற வாழவேண்டும் என்னும் இனிய எண்ணம் கொண்ட சமாதானத் தந்தை. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் சொல்லவரும் பொருளை எல்லவரும் உணர விரித்துரைக்க வல்ல ஒப்பற்ற ஆசான்.

அவரது திருக்குறள் வாழ்க்கைப் பொருட்குறள்; தமிழர்க்கன்றி உலகத்தவர்க்கும் பொருந்தும் நிகரற்ற நீதிநூல்; இனம், சாதி, மதம், நாடு, நகர், காலம் என்னும் வேறுபாடுகளைக் கடந்து வையத்து மக்கள் அனைவரையும் வாழ்வாங்கு வாழ வைக்கும் பொதுமறை. இதன் இயல்பையும் பெருமையையும் வியந்து போற்றாத அறிஞர்கள் இல்லை; விரித்துரைக்காத சொற் பொழிவாளர்கள் இல்லை; மேற்கோள் காட்டாத எழுத்தாளர்கள் இல்லை. புகழ்ந்துபாடாத புலவர்கள் இல்லை. அந்த நாட்களி லேயே எழுந்த சில பாடற் சான்றிதழ்கள் பின்வருமாறு:

**எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்**
**பரந்தபா வாலென் பயன் வள்ளுவனார்**
**சுரந்தபா வையத் துணை.** -மதுரைத் தமிழ்நாகனார்

**ஓதற்(கு) எளிதாய் உணர்தற்கு அரிதாகி**
**வேதப் பொருளாய் மிகவிளங்கி - தீதற்றோர்**
**உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு.** -மாங்குடி மருதனார்

**அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.** -அவ்வையார்

அளவாற் குறுகிய பாடல்கள் கடல்போற் பரந்த பொருள் களைக் கொண்டிருப்பதால் அவற்றை விளக்கிச்சொல்ல வேண்



படிப்பகம்

www.padippakam.com

டிய தேவை எழுந்தது. பத்து அறிஞர்கள் இதற்கு உரை எழுதியதாகப் பின்வரும் பழம்பாடல் தெரிவிக்கின்றது:

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்.

இவர்களுள் மணக்குடவர், பரிதியார் பரிமேலழகர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஐவரது உரைகளே கிடைத்துள்ளன. ஏனையவை அழிந்துபோயின. கிடைக்கப்பெற்றவற்றுள்ளும் பரிமேலழகர் உரையே பெரிதும் போற்றப்பட்டது என்பதனை

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலிற்
பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த வுரையாமோ தெளி

என்னும் பெருந்தொகைப் பாடலால் அறியலாம்.

பரிமேலழகர் முதலாக ஏனைய மணக்குடவர், பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள் போன்றோரின் உரைகளையும் புதிதாக எழுந்த டாக்டர் மு.வரதராசனார், கலைஞர் மு.கருணாநிதி, நாவலர் இரா.நெடுஞ்செழியன் என்போர் செய்த உரை விளக்கங்களையும் துணையாகக் கொண்டு, அறிஞர்கள் மத்தியில் பொதுவாக ஐயப்பாடுகளை விளைவித்துவரும் பல திருக்குறள் கருத்துக்களைத் தெளிவுபடுத்த முயன்றிருக்கின்றார் அனலை ஆறு. இராசேந்திரம் அவர்கள்.

கனடியத் தமிழருக்குத் திருக்குறளை எழுத்துமூலம் அறிமுகப்படுத்தியவர் இவரைப் போன்று வேறு எவரும் இலர். இந்தச் சேவையைப் பாராட்டி, கனடாவில் முதன் முறையாக உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்-கனடா கிளை 1998ல் நடத்திய திருவள்ளுவர் மகாநாட்டில், பொற்பதக்கம் சூட்டி,



படிப்பகம்

www.padippakam.com

பாராட்டி இவர் கௌரவிக்கப்பட்டதை இவ்விடத்தில் மகிழ்ச்சியு டன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இத்தகைய பெருமகனின் திருக்குறள் பற்றிய இந்த ஆய்வுநூல் ஓர் ஒப்பீட்டுத் திறனாய்வு. உரையாசிரியர்களின் மயக் கத்துக்கு உள்ளான பல குறள்களைத் தெரிவு செய்து, அவற்றுக் குப் பலரும் செய்த உரைகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமை களை எடுத்துக்காட்டி, காய்தல் உவத்தல் இன்றி அவற்றின் பொருத்தப்பாடுகளைச் சீர்தூக்கி, திருத்தமானவற்றைத் தெரிவு செய்யும் இவரது ஆய்வுத்திறன் அறிஞர்களுக்கு நல்ல விருந்தா கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு ஆய்ந்து ஆன்ற அறிஞரும் மஹாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபருமாகிய திரு. பொ. கனகசபாபதி அவர் கள் அணிந்துரை வழங்கியிருக்கின்றார்கள்.

நூலாசிரியரை அறிமுகம் செய்திருப்பவர் பிரபல கவிஞரும் "நம்நாடு" செய்திப் பத்திரிகையின் ஆசிரியருமான தீவகம் வே. இராசலிங்கம் அவர்கள்.

திருக்குறள் செல்வரின் இந்தப் பயன்மிகு நூலை வெளி யிடுவதில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் மகிழ்ச்சியடை கின்றது.

எமது முன்னைய வெளியீடாகிய கலாநிதி க.செ. நடராசா அவர்களின் "உள்ளதான ஓவியம்" என்னும் காவியத்தை நன்கு வரவேற்ற அறிஞர்கள் இந்நூலையும் மதித்து ஆதரவு நல்குவர் என்ற நம்பிக்கை இணையத்துக்கு உண்டு.

**வி. கந்தவனம்**

தலைவர்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்



படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

திருப்பனந்தாள் காசிமடம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்ட 'திருக்குறள் உரைக்கொத்து' என்னும் நூல் என் கைக்கு எட்டியது பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார் என்னும் ஐவர் உரைகளையும்கொண்ட அரிய வெளியீடு அது. குறள்களையும் ஐவர் உரைகளையும் ஒருங்கே படித்தபோது, அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை எளிதில் தெரிந்துகொள்ள முடிந்தது. இவ்வேறுபாடுகளையிட்டு சிறிது ஊன்றிச் சிந்தித்தபோது சில உரைகள் திருக்குறளுக்கு மிகச் சிறந்த உரையினையும், தன் முடிவுகளுக்கான மிகச்சிறந்த விரிவுரையினையும் எழுதித் தமிழிலக்கிய உலகு உச்சிமேல் வைத்து மெச்சும் பெருமை கொண்டவரான பரிமேலழகர் உரையினும் சிறந்தனவாய்க் காணப்பட்டன.

ஈழகேசரியை உணர்ச்சிக்கவிஞர் நண்பர் தீவகம் வே. இராசலிங்கம் அவர்கள் ஆரம்பித்தபோது, அவ்வார ஏட்டிற்கு விரும்பும் ஒருபொருள் பற்றித் தொடர்ச்சியாக எழுதவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் அன்பு வேண்டுகோளைத்தட்ட முடியவில்லை. மேற்சொன்ன பழம்பெரும் உரைகளுடன் தற்காலத் தமிழறிஞர்களான புலவர் குழந்தை, மொழிநூலறிஞர் ஞா.தேவநேயப் பாபாணர், முனைவர் மு. வ, வாகீச கலாநிதி கி.வா.சகந்நாதனார் ஆகியோர் உரைகளையும் சேர்த்து ஓர் ஒப்பீட்டுத் தொடர் எழுத எண்ணினேன். பெரிதும் முயன்றும் புலவர், மொழிநூலறிஞர், வாசீககலாநிதி ஆகியோரின் உரை நூல்கள் கைக்கு எட்டில.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் திருக்குறள்-தெளிவுரை நூல் கிடைத்தது. பகுத்தறிவு நோக்கில் அமைந்து வேண்டிய இடத்தே விரிவுரையும் கொண்டிருந்தமையான் இதனையும் சேர்த்துக்கொள்வதெனத் தீர்மானித்தேன்.

பழம்பெரும் உரைகளுடன் முனைவர் மு.வ, நாவலர்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியோர் தெளிவுரைகளையும் கொண்டு திருக்குறள் உரை வேறுபாடுகள் என்னும் தலைப்பில் கட்டுரைத்தொடர் ஆரம்பமாயிற்று. ஈழகேசரி தடைப்பட்டபோதும் 'நம்நாடு' தொடர்ந்துகளம் அமைத்துக் கொடுத்தது. இவ்வேளை திருக்குறள் கலைஞர் உரை வெளி வந்தது. இதன்பின் இயன்றவரை தொடரில் அவர் உரையையும் எடுத்தாளலானேன்.

தொடர் சிலவாரங்கள் ஓடியது. கவிநாயகர் உயர்திரு வி.கந்தவனம் அவர்கள் என்னுடன் தொடர்புகொண்டு கட்டுரைகளை விதந்ததோடு, அவற்றின் குறைகளையும் சுட்டிக்காட்டி, தொடர்ந்து கட்டுரைகொண்டு செல்லப்பட வேண்டிய பாங்கினையும் விளக்கினார். தமிழிலக்கியத்தின் அனைத்துத் துறைகளும் கைவந்த வல்லாள ரும், கவிதை நாடகம் இலக்கிய ஆராய்ச்சி போலும் துறைகளில் தனித்துவம் மிக்கவருமான கவிநாயகரின் ஆலோசனைகள் தொடர்வாசகர்களிடையே சிறந்தவரவேற்பைப் பெற உதவியது.

பரிமேலழகரும் கலைஞரும் என்னும் கட்டுரையில் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அறிவு, ஆற்றல், தனித்துவம், முதலிய பண்புகளை வியந்து எழுதிய யான் மறுபுறமாக அரசியல் வாழ்வில் அவரிடம் கண்ட சிலகுறைகளையும் குறிப்பிட்டேன். இதுகண்ட அறிவியற்றுறைப் பேராசானும், தெல்லிப்பளை மகாசனக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபரும், கலை இலக்கிய அரசியல் ஆராய்ச்சித் துறை வித்தகருமான உயர்திரு பொ.கனகசாபாபதி அவர்கள் "இலக்கியக் கட்டுரைக்கு ஒருவரை அரசியற் கண்ணோடு நோக்குவது தேவையற்றது" என்றும் "இதுகட்டுரையின் நடுநிலைத் தன்மைக்கு ஊறுசெய்யும்" என்றும் குறிப்பிட்டார். இதே கருத்தை நண்பர் திரு.க. இராசரெத்தினம் அவர்களும் என்னிடம் தெரிவித்தார். இருவர் கருத்தையும் ஏற்று நூலுருவாக்கத்தின் போது அப்பகுதியைத் தவிர்த்துக் கொண்டேன்.

அதிபர் உயர்திரு பொ. க. அவர்களிடம் திருக்குறள் - பாரதிதாசன் உரைநூல் பெற்று, பரிமேலழகரும் பாரதிதாசனாரும்


படிப்பகம்

www.padippakam.com

என்னும் கட்டுரையை எழுதினேன். இது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கக் கனடாக் கிளையினர் 1998இல் எடுத்த திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலருக்காக எழுதப்பட்டது."பெய்யெனப் பெய்யும்" மழை தமிழ்மகள் திங்கள் இதழுக்காக யான் எழுதியது. இருகட்டுரைகளும் நம்நாடு இதழில் மறு பிரசுரமாயின.

யான் சோர்ந்திருந்த வேளைகளில் எழுதுங்கள் எழுதுங்கள் என்று ஊக்கியதோடு பத்திரிகையில் கட்டுரைகளை பிரசுரித்து மகிழ்வுற்றவர் நண்பர் தீவகம் வே. இராஜலிங்கம் அவர்கள். அன்னாருக்கு என் நன்றிகள் என்றும் உரியனவாகும். பூவும் புல்லிதழும் என்னும் இந்நூல் உருவாகி, கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வெளியீடாகவர என் நெஞ்சத் தளத்தில் அடிக்கல் இட்டவர் கவிநாயகர் அவர்களே. அப்பெருந்தகைக்கும், நூலை வெளியிடும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கும் நன்றிகளை முன்வைக்கின்றேன்.

நம் அதிபர் உயர்திரு பொ.க. அவர்கள் இந்நூலுக்கு சிறந்தவோர் அணிந்துரை வழங்கியிருப்பது யாம் செய்த பெரும் பயனே. கல்விக்குரிசில் அவருக்கு நன்றி சொல்லுதலும் ஒல்லுவதோ? திருக்குறட் கருத்துக்களை இந்நாட்டில் எழுத்துமூலம் பரப்பியவன் என்றவகையில், தாம் 1998ல் எடுத்த திருக்குறள் மாநாட்டில் பொற்பதக்கம் சூட்டி என்னைச் சிறப்புச் செய்த உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கக் கனடாக் கிளையினர்க்கு இவ்விடத்தே நன்றிகூறத் தவறின் செய்தி கொன்றவனாவேன். மின்கணனி அச்சமைப்பை அழகுறச் செய்துதவிய செல்வி அன்பரசி இராசலிங்கம் அவர்களுக்கும், நூலின் முகப்பு அட்டையை வடிவமைத்துத்தந்த கருணா(digi Graphics & Studios) அவர்களுக்கும் நூலை அச்சிட்டு வழங்கிய விவேகா அச்சகத்தினருக் கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் என்றும் உரியவாகும். சொல் எண்ணம் செயல் என்னும் மூன்றாலும் நல்லாசியும் உதவியும் புரிந்தோர் அனைவர்க்கும் என் நன்றிகள் உரித்தாகட் டும். எழுத்தாளரின் எதிர்காலம் வாசகர் கைகளிலேயே தங்கியுள்ளது.

**-அன்பன் அனலை ஆறு. இராசேந்திரம்**



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளுறை

பக்கம்


1. பூவும் புல்லிதழும் ... 01
2. பரிமேலழகரும் மணக்குடவரும் ... 09
3. பரிமேலழகரும் பரிதியாரும் ... 15
4. பரிமேலழகரும் நாவலரும் ... 21
5. பரிமேலழகரும் கலைஞரும் ... 34
6. பரிமேலழகரும் பாரதிதாசனாரும் ... 47
7. மரபும் பகுத்தறிவும் ... 55
8. தாமரைக் கண்ணான் ... 67
9. தோன்றல் ... 72
10. பெய்யெனப் பெய்யும் மழை ... 75
11. எச்சம் ... 79
12. பிறவாழி ... 82
13. இருமை ... 85



படிப்பகம்

www.padippakam.com


14. நத்தம் ... 88

15. குடம்பை ... 91

16. கேடு ... 94

17. ஆபயன் ... 97

18. அறப்பெற்றானை ... 101

19. நாடுதல் ... 104

20. அதுவல்லது ... 107

21. அழுக்கறுப்பான் ... 110

22. அவரன்ன ஒப்பாரி ... 113

23. எவ்வம் உரையாமை ஈதல் ... 116

24. வித்துமிடல் வேண்டுங்கொல்லோ ... 118

25. சாவாமருந்து ... 121

26. கணமேயும் காத்தல் அரிது ... 124




படிப்பகம்

www.padippakam.com

# பூவும் புல்லிதழும்

திருக்குறளுக்கு உரையெழுதிய பழம்பெரும் உரையாசிரியர் பதின்மர். அவர்கள் மணக்குடவர், பரிதி, பரிமேலழகர், பரிப்பெருமாள், காலிங்கர், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர் என்று ஓர் தனிப்பாடல் கூறும். இவர்களில் முதல் ஐவரைத்தவிர ஏனையோர் உரைகள் வழக்காறின்றி அழிந்து போயின. இவற்றில் அன்றுதொட்டு இன்றுகாறும் பயிலப்பட்டு வருவதும் அறிஞர்கள் விதந்து போற்றும் சிறப்புக்குரியதாக விளங்குவதும் பரிமேலழகர் உரையாகும். மணக்குடவர் உரை அது தோன்றிய காலத்தில் சிறந்ததாக கணிக்கப்பெற்றிருந்தது. அதனைத் திருத்தி பரிப்பெருமாள் அமைத்த உரை, அவர் காலத்திலும் அதன் பின்பும் சிறந்ததாக விளங்கியது. பரிமேலழகர் உரை தோன்றியபின் அதன்முன் நிற்கமுடியாது பல உரைகள் சிறப்புக் குன்றின. சில வழக்காறு ஒழிந்து அழிந்து போயின. இதனால்,

> **நூலிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன்**
> **தெரித்த உரையாமோ தெளி**

என்னும் சிறப்பு அவர் உரைக்கு ஏற்பட்டது. உமாபதி சிவாச்சாரியார் என்னும் சைவப்பெரியார் தமிழின் சிறந்தநூல்களைக் கூறும்போது திருக்குறளையும், அதற்குப் பரிமேலழகர் செய்த உரையையும் தனித்தனி நூல்களாகவே குறிப்பிடுகிறார்.

**வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே**
**தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை- ஒள்ளியசீர்**
**தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
**தண்டமிழின் மேலாம் தரம்.**

பரிமேலழகர் உரையும் ஒருதனித்த நூலாக இங்கு குறிக்கப்பட்டுள்ளமை அதன் தலையாய சிறப்பு நோக்கியேயாகும்.


படிப்பகம்

www.padippakam.com

பரிமேலழகர் உரை ஒரு இலக்கண உரையாகும். சிறந்த சட்டவாதி ஒருவன் மன்றில் கருத்தை வழங்கும்போது சட்டத்தையும் அதற்குமுன் நீதிவான்கள் அளித்த தீர்ப்புக்களையும் தன் சார்பாக எடுத்துக்காட்டுவான். அவ்வாறே, பரிமேலழகரும் குறளுரைகளுக்கான விளக்கத்தில் இலக்கண ஆதாரங்களையும் இலக்கிய மேற்கோள்களையும் எடுத்துக்காட்டித் தன்கருத்துக்கு அரண் செய்கிறார். பரிமேலழகர் தமிழ் அறிவில் இமயத்திற்கு நிகரானவர். அவர்தன் உரையில் எடுத்தாண்ட நூல்களின் பட்டியல் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை, திருவாய் மொழி, முத்தொள்ளாயிரம், திருக்கோவையார், அகநானூறு, சீவக சிந்தாமணி, நாலடியார், சிலப்பதிகாரம், பொருநர் ஆற்றுப்படை, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, பதிற்றுப்பத்து என நீண்டுகொண்டே செல்கிறது. அழிந்துபோனதும், ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றுமான வளையாபதியையும், யாம் கேட்டறியாத ஏரம்பம் என்னும் நூலையும் தன்னுரையில் குறிப்பிடுகிறார்.

நாம் வாழும் காலத்தின் சிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரும், கடவுள்மறுப்புக் கொள்கையாளரும், சமயக் கோட்பாடுகளின் வழிநின்று பரிமேலழகர் குறட்பாக்களுக்கு அமைத்த உரையை ஆரம்பகாலம் தொட்டே மறுத்து மேடைதோறும் அவற்றுக்குப் புதுஉரைகளும், புது விளக்கங்களும், கூறி வருபவருமான நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பரிமேலழகர்தம் அறிவின் ஆழத்தைக் கண்டு வியப்படைகிறார்.

"அவர்(பரிமேலழகர்) தமது உரையில் இருநூற்று முப்பதுக்கு மேற் பட்ட இலக்கிய இலக்கணச் செய்யுள்களை மேற்கோளாகக் காட்டுகிறாரென்றால், அவரது தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை, தெளிவாக உணரப்படும். ஒவ்வொரு குறளுரையிலும் இலக்கண அமைதியை செம்மையுறக் கூறிச் செல்லும் பாங்கு தனிச்சிறப்பு உடையதாகும். அத்தோடு மட்டுமல்லாமல், அவர் சமயவியல், தருக்கவியல், அரசியல், பொருளியல், மருத்துவவியல், உளவியல், இசையியல் போன்ற துறைகளிலும் தேர்ந்த அறிவுபெற்று விளங்கியிருக்கிறாரென்பது பலஉரை



படிப்பகம்

www.padippakam.com

விளக்கங்களிலிருந்து தெளிவாகப் புலனாகிறது. பரிமேலழகர் குறட் பாக்களின் உண்மைப் பொருள் விளக்கத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாத முறையில் சிற்சில கருத்துக்களை ஆங்காங்கு கூறியிருந்தாலும் இலக்கிய நயம் மிளிர, பொருளாழம் தோன்ற, காரண காரிய விளக்கமொளிர, இலக்கண நுட்பம் தெளிவுற பற்பல குறட்பாக்களைப் பொறுத்து அவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துக் கள் மிகவும் சிறப்புடையனவாகும்.''

கொள்கைவழி முற்றிலும் மாறுபாடுடையவரான நாவலர் நடுநிலை நின்று கூறும் இவ்வார்த்தைகளைவிட பரிமேலழகர் அறிவாற்றலுக்கு வேறு சான்றும் வேண்டுவதோ? இவ்வாறு பரிமேலழகர் அறிவுத்திறத்தையும் உரைநலத்தையும் பாராட்டும் நாவலர் ''மதியின்கண் மறு இருப்பதுபோல அவர் உரையினும் குறைபாடுகள் உள்ளன.'' என்றும் கூறிச்செல்கிறார். பெரும்புலவ ரும் திருவள்ளுவர் நூல்நயம் எழுதியவருமான பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் அந்நூலில் ''புல்லிதழ் பூவுக்கிருப்பது போல பரிமேலழகர் உரையினும் குறைகள் உள்ளன'' என்பார். இவ்வகையில் பரிமேலழகர்தம் உரைக்குறைபாடுகள் சிலவற்றை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

* * *

கடவுள் வாழ்த்து என்னும் பெயரிலான முதல் அதிகாரத்திற்கு பரிமேலழகர் எழுதியுள்ள முகவுரை பின்வருமாறு அமைந்துள்ளது. ''அஃதாவது, கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ் வாழ்த்து ஏற்புடைக்கடவுளை என அறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான், அம் மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின் இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென உணர்க.''

இவ்வாறு கூறும் பரிமேலழகர்,



படிப்பகம்

www.padippakam.com

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்னும் குறளுரைக்கான விளக்கத்தில் "இப்பாட்டான் முதற் கடவுளதுண்மை கூறப்பட்டது" என்பார். முதற் கடவுள் ஒருவரேயன்றி மூவரல்லர். அவர் முக்குணங்களையும் கடந்தவர். ஆதலின், சத்துவ இராசச, தாமச குணங்களையுடைய மால், நான்முகன், உருத்திரன் ஆகிய மூவர்க்கும், பொதுப்பட வாழ்த்துக் கூறுதல் வள்ளுவர் நோக்கம் என பரிமேலழகர் கூறுவது தவறுடைத்தாம்.

இதனால் முதலாவது அதிகாரத்திற்கு முன்னுரையாகக் கூறியது பின் முதற் குறளுக்கு எழுதிய விளக்க உரைக்கு முரணாக அமைந்துவிட்டமை தெளிவாகும்.

* * *

**மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்**

இக்குறளுக்கு "மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார், எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வர்" என்று உரையெழுதுகிறார் பரிமேலழகர். இங்கே, நிலமிசை என்பதற்கு வீட்டுலகின்கண் என்று பொருள் கொள்கிறார் அவர்.

சைவநெறி வழிநின்று திருக்குறளுக்கு உரை யெழுதியவரும், பழம்பெரும் உரையாசிரியர்களில் ஒருவருமான பரிதியார் இக்குறளுக்கு அமைத்த உரை பின்வருமாறு காணப்படு கிறது. "பக்த சனங்களிட்ட புஷ்பத்தின் மேல் எழுந்தருளியிருக்கும் சிவன் ஸ்ரீபாதத்தை மனசிலே பற்ற வைத்தார் பூமியின்கண் சகல பாக்கியமும் அனுபவிப்பர்."

நிலமிசை என்பதற்கு பூமியின் கண் என்றே பரிதியார் பொருள்கொள்கிறார். வீட்டுலகக் கொள்கையை மறுப்பவரா யினும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் நடுநிலை நின்று நிலமிசை



படிப்பகம்

www.padippakam.com

என்பது வீட்டுலகில் எனப் பொருள்படாது என்கிறார். எனவே, எடுத்தாண்ட குறளுக்கு, பரிதியார் கருத்துக்கமைய "மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளை இடையறாது தொழுவோர், பூமியின்கண் (நீடு வாழ்ந்து மறைந்த பின்னும் புகழுடம்புடன் மக்கள் நெஞ்சங்களில்) என்றும் வாழ்வர்" என்று பொருள்கொள்வதே பொருத்தமாகும்.

* * *

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில

"இல்லறத்தோடு பொருந்தி வருவது இன்பமாவது. அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம் இன்பமாயினும் துன்பத்தினிடத்த. அதுவேயும் அன்றி புகழுமுடையவல்ல." மேற்படி உரையில் அறத்திற்கு இல்லறம் எனப்பொருள்கொள்கிறார் பரிமேலழகர். அதற்குத்தக இல்வாழ்வில் கிடைக்கும் காமநுகர்ச்சியே இன்பம் என நலிந்து விரிவுரை செய்கிறார்.

வள்ளுவர் இக்குறளில் இம்மை, மறுமை இன்பங்களையும், வீடு பேறாகிய பேரின்பத்தையுமே இன்பம் எனக் குறிப்பிடுகிறார். "இல்வாழ்வில் கிடைக்கும் காமநுகர்ச்சி மட்டும் இன்பமன்று. ஈந்துவத்தலும் குழந்தை மழலை கேட்டலும் மனமகிழ்ச்சி முதலானவையும், அங்கு கிடைக்கும் இன்பங்களே." என்பார் பாவேந்தர்.

துறவறமும் வாழ்வின் ஈடேற்றத்திற்குரிய ஒரு நெறியே. அது மனம் புலன்வழிப் போகாதடக்கி பேரின்ப நிலையை அடைவிக்கும் தன்மைத்து. மிகப்பரந்த பொருளில் வள்ளுவர் கையாண்ட அறத்தை இல்லறம் என குறுகிய அளவில் பொருள்கொண்டு தவறு செய்கிறார் பரிமேலழகர். இங்கே அறத்தை பொதுவுற அறமென்றும், இன்பம் என்பதை இம்மை மறுமை வீடு பேற்று இன்பங்கள் என்றும் கொள்வதே பொருத்தமாகும்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் அமைத்தவையே இக்குறளுக்கான சிறந்த உரைகளாக விளங்குகின்றன. பரிதியாரும் அறத்தை பொதுவுற அறமென்றே கொள்கிறார்.


படிப்பகம்

* * *

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

இக்குறளுக்கு "இருவகை அறத்தினும் நூல்களான் அற னென்று சிறப்பித்துச்சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. ஏனைத் துறவறமோ எனின் அதுவும், பிறனாற் பழிக்கப்படுவது இல்லை யாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக நன்று" என்று உரை எழுதுவார் பரிமேலழகர்.

இங்கே "துறவறம் பிறனாற் பழிக்கப்படுவது இல்லையா யின் அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக நன்று" என்கிறார் பரிமேலழகர். அவ்வாறாயின், "இல்லறம் பிறனாற் பழிக்கப்படினும் நன்று" என்னும் கருத்துப்பெறப்படுகிறது. இருவகை நெறிகளும் பழிப்புடையவாக அமையின் சிறப்பில என்பதே உண்மை நிலைப் பாடாகும்.

"பிறர் பழிப்புக்கிடமில்லாத இல்வாழ்க்கையே அறன் எனச் சிறப்பித்துச்சொல்லத்தக்கது" என்பதே வள்ளுவர் கூறவந்த கருத்தா கும். இத்தவறு அது என்பதற்கு துறவறம் எனப்பரிமேலழகர் பொருள் கொள்வதாலேயே ஏற்படுகிறது. மணக்குடவர், பரிப் பெருமாள், பரிதியார், மு.வ, நாவலர், கலைஞர் போன்றோர் அது என்பது (முதலிற் கூறப்பட்ட) இல்வாழ்க்கையையே சுட்டுவதாகக் கொண்டு பின்வருமாறு கருத்துரை வழங்குகின்றனர். "பழிப்புக் கிடமில்லாத இல்வாழ்க்கை அறனெனச் சிறப்பித்துப் போற்றப்படும்".

* * *

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்.**

இக்குறளுக்கு பின்வருமாறு உரை எழுதியுள்ளார் பரிமேல ழகர். "தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும் தன்

www.padippakam.com

மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்டதாய்...'' இவ்விடத்தே சான்றோன் என்பதற்கு கல்வி கேள்விகளான் நிறைந்தான் என்று பரிமேலழகர் பொருள் கொள்வது தவறாகும். மணக்குடவர் பரிப்பெருமாள், காலிங்கர், மு.வ. கலைஞர், நாவலர் போன்றோர் சான்றோன், சால்புடையான், நற்புண்பு நிறைந்தவன், நல்ல மகன் எனக்கூறும் பொருட்களே சான்றோ னுக்குப் பொருத்தமானவையாம். பரிதியார் அறிவினாற் பெரியன் என்று பொருள் கூறுவதால் பரிமேலழகருடன் உடன்பாடு டையவ ராகவே தெரிகிறார்.

மேலும், கேட்டதாய் என்பதற்கு விரிவுரை நிகழ்த்த வந்த பரிமேலழகர் ''பெண்ணியல்பான் தானாக அறியாமையிற் கேட்டதாய் என வள்ளுவர் கூறினார்'' என்பார். இதனால் பெண்கள் கல்வி அறி வும் இயற்கை அறிவும் உடையரலர் எனப் பரிமேலழகர் கருதினார் எனக் கொள்ள இடமேற்படுகிறது.

அவ்வையார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார் முத லிய பெண்புலவர்கள் பிறந்து, நீதியும் இலக்கியங்களும் படைத்த காலத்தின் பின்வாழ்ந்தவரான பரிமேலழகர் ஏன் இவ்வகையிற் தவறிழைத்தார் என்பது விளங்குவதற்குரியதாக இல்லை.

தாய் தன் மகன்பால் வைத்த பேரன்பால் அவனியல்புகளை உள்ளவாறு அறியும் திறனுடையளல்லள். ஆகவே அறிஞர் அவனை சான்றோன் எனப் பாராட்டுவதைக் கேட்டு பேருவகை அடைவாள் என்பதே பொருத்தமான விளக்கமாகும்.

* * *

**தாமின் புறுவ துலகின்புறக் கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

''தாம் இன்புறுவதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன் புறுதலால் அச்சிறப்புநோக்கி, கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர்.'' இவ்வாறு மேற்கண்ட குறளுக்கு உரையெழுதினார் பரிமேலழகர்.


படிப்பகம்

www.padippakam.com

இவருரை வள்ளுவர் தம் உள்ளக் கருத்தை வெளிக் கொணர்ந்ததாக அமையவில்லை.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பழந்தமிழ்ச் சான்றோர் கொள்கை இக்குறளிற் கூறப்படுகிறது. அதாவது கற்றறிந்தார் தாம் பெற்ற கல்வியை பிறர்க்குக் கற்பித்து அதன் மூலம் தம்மைப்போன்று உலகமும் பயனுறும் வகை செய்தல் வேண்டும் என்பதே பொருத்தமுடைய கருத்தாகும். இதன் மூலம் கற்றறிந்தார் தாம்பெற்ற கல்வியை உலகத்தார்க்கும் பங்கிட்டு தம்மைப்போன்று அவர்களும் அக்கல்வியினால் இன்பம் அடையும் நிலைகண்டு மிக்க மகிழ்ச்சி அடைவர்" என்று எடுத்தாண்ட குறளுக்கு பொருள் கொள்வதே சரியாகும்.

இதுவரையில், பரிமேலழகர் உரைக்குறைபாடுகள் சில வற்றை நோக்கினோம். ஏனைய உரையாசிரியரோடு பரிமேலழகர் உரையை ஒப்பிடுவது ஒருவகை இலக்கியப் பயிற்சியேயாகும். கூர்ந்த அறிவும் சீரிய சிந்தனையும்மிக்க பரிமேலழகர்தம் குறை பாடுகள் நம்மனோர்க்கு இன்பம் பயக்கும் இலக்கிய ஆக்கங்களாய் விளங்குவது நமது பெரும்பேறாகும். இவ்வகையானும் தமிழுலகு பரிமேலழகர்க்கு என்றும் கடப்பாடுடையதே. எவ்வகையிற் பார்த் தாலும் "பாரிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி" என்பது என்றும் பொருள் பொதிந்த மொழியாகும். தங்கத்தில் குறையிருந்தாலும் அதன் தரம் குறைத்து மதிப்பிடப்படுவதில்லை. மதியின்கண் மறு இருந்தபோதும் மங்கையர் முகத்திற்கு உவமைகூற கவிஞர் தயங்கியதே இல்லை. பூவில் புல்லிதழ் இருந்தபோதும் அது புறக்கணிக்கப்படுவதில்லை. அதேபோல், சிறு குறைகள் இருந்தபோதும் பரிமேலழகர் உரை பாரில் உயர்ந்தே நிற்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# பரிமேலழகரும் மணக்குடவரும்

திருக்குறளுக்கு ஆகி, எம்கைக்குக் கிடைத்தவற்றுள் காலத்தால் முந்தியது மணக்குடவர் உரையாகும். இதற்கு அடுத்துப் பரிப்பெருமாள் உரையும், அதைத்தொடர்ந்து முறையே, பரிதியார், காலிங்கர், பரிமேலழகர் உரைகளும் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும். மிகச்சிறந்த உரை விளக்கப்படைப்பினைப் பரிமேலழகர் திருக்குறளுக்கு எழுதிப் பேரும் புகழும் பெற உறுதுணையாய் இருந்தது மணக்குடவர் ஆகும். கிட்டத்தட்ட நூறு குறட்பாக்களுக்கான விரிவுரையில் மணக்குடவர் பொருள் கொண்ட விதம் பற்றி குறிப்பிடுகிறார் பரிமேலழகர். இருவர் கொண்டிருந்த பாட வேறுபாடுகளையும் அவ்வப்போது அவர்குறித்துச் செல்கிறார். 'பிறரெல்லாம் இவ்வாறு பொருள் கொண்டனர்' என்று பெரும்பாலான இடங்களில் இவர் குறிப்பிடுவது மணக்குடவரையே ஆகும். அவற்றில் தனக்கு உடன்பாடில்லாத கருத்துக்களைப் பல இடங்களில் பரிமேலழகர் மறுத்துச் செல்கிறார். பெரும்பாலான இடங்களில் மணக்குடவரை பரிமேலழகர் மறுத்துச் செல்வது ஏற்கத்தக்கதாயினும் சிறுபான்மை அவர் மறுப்புக்கள் தவறு உடையனவாகவே தெரிகின்றன.

இவ்வகையில் மணக்குடவரும் பரிமேலழகரும் வேறுபடும் இடங்களில் ஒன்றிரண்டு குறட்பாக்களைத் தவிர ஏனையவற்றில் கருத்துமாறுபாடு கிடையாதாயினும் அவரிருவர் பொருள்கொண்ட விதம் பற்றி நோக்குவதும் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதும் சிந்தைக்கு அறிவும் இன்பமும் பயக்க வல்லனவாம்.

* * *


படிப்பகம்

www.padippakam.com

**மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ**
**டியைந்து கண்ணோடா தவர்.**

இக்குறளுக்குச் "சுதை மண்ணோடு கூடச்செய்த மரப் பாவையோடு ஒப்பார், ஒருவன் கண்ணோடு தங்கண் கலந்த பின்பு கண்ணோட்டத்தைச் செய்யாதவர்." என்று பொருள் உரைத்தார் மணக்குடவர்.

பரிமேலழகர் "ஓடுதற்குரிய கண்ணோடு பொருந்தி வைத்து அஃதோடாதவர் இயங்கா நின்றாராயினும் மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை ஒப்பர்." என்று பொருளுரைத்தார்.

இங்கே, மண்ணோடியைந்த மரம் என்பதற்கு இருவர் உரையாசிரியரும் வேறுபட்ட பொருளையே தருகின்றனர். மணக்குடவர் மக்கு எனப்படும் சுதை மண்ணும் மரமும் கொண்டு செய்யப்படும் மரப்பாவையை அது குறிப்பதாகக் கொள்கிறார். பரிமேலழகர் மண்ணில் வளர்ந்து நிற்கும் மரத்தை அது குறிப்பதாகச் சொல்கிறார்.

**அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்**
**மக்கட் பண்பில்லா தவர்**

என்னும் குறளில் மக்கட் பண்பில்லாதவருக்கு மரத்தை ஒப்பிடும் வள்ளுவர்,

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று.**

என்னும் குறளில் நுண்மாண் நுழைபுலம் இல்லானுக்கு மண்மாண் புனைபாவையை ஒப்பிடுகிறார்.

இருவர்உரையாசிரியர் கொள்ளும் பொருள்களும் வள்ளுவர் கருத்துக்கு ஏற்புடையவே என்பதில் மாறுபாடு கிடையாது.

மரம் என்னும் போது அது மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தையே குறிப்பதாகும். இது இப்படியிருக்க "மரத்திற்கு மண்ணோடியைந்த என்னும் அடை கொடுத்து வள்ளுவர்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிட்டிருப்பாரா? ஏழே ஏழு சீர்கள் கொண்டவையான குறட் பாக்களில் இத்தகைய தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களுக்கு வள்ளுவர் இடம் கொடுப்பாரா?'' என ஊன்றிச் சிந்திக்கும் போது மண்ணோடியைந்த மரம் என்பதை மண்ணில் பொருந்தி நிற்கின்ற மரம் தவிர்ந்த வேறு ஒரு பொருளிலேயே பிரயோகித்திருப்பார் என்னும் முடிவுக்கு வரவேண்டியதே பொருத்தமாகும். இவ்வகையில், ''சுதைமண்ணோடு கூடச் செய்த மரப்பாவை'' என மணக்குடவர் உரைத்த பொருள் சிறப்பானதாய்த் தோன்றுகிறது.

பரிமேலழகர் விரிவுரையில் ''மண்ணோடியைந்த மரம் என்பதனைச் சுதை மண்ணோடு கூடிய மரப்பாவை என்பாரும் உளர். காணப்படும் கண்ணானன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒரு சாருள்ளீட்டாற் கூறினமையானும் அஃது உரையன்மை காணப்படும்'' என மணக்குடவர் உரையை மறுப்பார்.

தெளிவோ வலுவோ சிறிதுமே இல்லாத காரணத்தால் அவர் மறுப்பை வலிந்து செய்யும் ஒன்றாகவே கொள்ள வேண்டி இருக்கிறது. இக்குறளுரையில் பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள் ஆகியோர் மணக்குடவரையும், புத்துரைகாரர்களான பேராசிரியர் மு.வ, நாவலர், கலைஞர் ஆகியோர் பரிமேலழகரையும் ஆதரிக்கின்றனர்.

* * *

**மனத்தது மாசாக மாண்டார் நீராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

''மாசு மனத்தின் கண் உண்டாக வைத்து மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு பொருந்தாத இடத்திலே மறைந்தொழுகும் மாந்தர் பலர்'' என இக்குறளுக்கு உரையெழுதினார் மணக்குடவர்.

பரிமேலழகர் ''மாசு தம் மனத்தின் கண்ணதாக, பிறர்க்குத் தவத்தான் மாட்சிமை உடையராய் நீரில் முழுகிக்காட்டி தாம் அதன் கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர்'' என எழுதுவார். இக்குறளுரையில் மாண்டார் நீராடி என்பதற்கு


படிப்பகம்

www.padippakam.com

தவத்தான் மாட்சிமை உடையராய் நீரில் முழுகிக்காட்டி எனப் பொருள் கொள்வார் பரிமேலழகர். இவர் நீராடி, நீர் சக ஆடி எனக் கொண்டார்.

மணக்குடவர் நீராடி என்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையைப் பூண்டு எனப் பொருள் கொள்வார். இவர் நீராடி, நீர்மை சக ஆடி எனக் கொண்டார்.

தவம் கைக்கொள்ளுவார் தூயதுறைகளில் நீராடுவது மாத்திரமன்றி தலைமயிரை மழித்தும் சடைவளர்த்தும் தண்டு கமண்டலம் தாங்கியும் காவியாடை உடுத்தும் நீறு உருத்திராக்கம் தரித்தும் இன்னோரன்ன பிற புறக்கோலங்களைப் பூண்டும் விளங்குவர்.

நீராடி என்பதற்கு மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு என மணக் குடவர் கொண்டபொருள், தவம் கைக் கொள்ளுவோர்தம் அனைத்துப் புறக் கோலங்களையும் அவர்தம் பண்புகளையும் செயல்களையும் ஒருங்கே குறித்து நிற்பதால் பரிமேலழகரினும் விரிந்த பொருள் தந்து சிறப்புடையதாய் விளங்குகின்றது.

* * *

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

இக்குறளுக்கு மணக்குடவர் "பொய்யாமையை பொய்யாமற் செலுத்து வானாயின் பிற அறங்களைச்செய்தல் நன்றாம் அல்லது தீதாம்." என்று உரை வரைந்தார்.

"ஒருவன் பொய்யாமையே பொய்யா மையே செய்யவல்லனாயின் அவன் பிற அறங்களை செய்யாமையே செய்யாமையே நன்று" என்று பொருள் சொன்னார் பரிமேலழகர்.

இங்கே பொய்யாமை பொய்யாமை ஆற்றின் என்பதற்கு பொய்யாமையை பொய்யாமற் செலுத்துவனாயின் என்று பொருள் கொண்டுள்ளார் மணக்குடவர். பொய்யாமையைப் பொய்யாமற்



படிப்பகம்

www.padippakam.com

செலுத்துதலும் பொய்யாமை பொய்க்குமாறு செலுத்துதலும் என இரு நிலைப்பாடுகள் இல்லை. பொய்யாமை பொய்க்குமாயின் அது பொய்யாமை ஆகாது. எனவே பொய்யாமை பொய்யாமை ஆற்றின் என்பதற்கு மணக்குடவர் சொல்லும் பொருள் சிறப்பிலது என்பது தெளிவாகிறது. இவ்வாறு செய்யாமை செய்யாமை என்பதைச் செய்தல் எனக் கொள்கிறார் மணக்குடவர். செய்யாமை சக செய் யாமை சமன் செய்தலே என்பதில் மாறுபாடு கிடையாது. ஆனால் சொற்செறிவும் பொருட்சிறப்பும் மிக்கதான திருக்குறளில் "இத்தகைய வார்த்தைக்கோலங்களுங்கு வள்ளுவர் இடம் கொடுப் பாரா?" எனச்சிந்திக்கும் இடத்து எதிர்மறை விடையே கிடைக் கிறது. எனவே இப்பொருளும் சிறப்பிலது தெளிவாகிறது.

பரிமேலழகர் விளக்க உரையில் "அடுக்கு இரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று. ஏனையது துணிவின் மேற்று" என்று தான் பொருள் கொண்டதற்கான இலக்கணக் காரணத்தைச் சொல்கிறார்.

பொய்யாமையை இடைவிடாது ஒருவன் செய்ய வல்லனா யின் உறுதியாக அவன் பிற அறங்களைச் செய்யவேண்டியதில்லை. என்னும் அவர் கருத்துரை பொலிவும் சிறப்பும் மிக்கதாம்.

* * *

**அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர் அல்லார் முன்கோட்டி கொளல்.**

"நல்லார் தம் இனத்தாரல்லார் அவைக்கண் ஒன்றனையும் சொல்லற்க. சொல்லின் அது தூய்தல்லாத முற்றத்தின் கண் உக்க அமிழ்தினை ஒக்கும்" என்று இக்குறளுக்குப் பொருள் எழுதினார் பரிமேலழகர்.

"அங்கணத்தின்கண் உக்க அமிழ்தம் போல இகழப்படுவர் தம்முடைய இனத்தாரல்லாதார் முன்னர் ஒன்றைச் சொல்வாராயின்" என்று பொருளுரைத்தார் மணக்குடவர். இவ்விடத்தே கொளல் என்பதை கொள் சக அல் எனக்கொண்டு சொல்லற்க எனும் எதிர்


படிப்பகம்

www.padippakam.com

மறைப் பொருள்காண்கிறார் பரிமேலழகர். நாவலர் நெடுஞ்செழியனும் பரிமேலழகரைப் போன்று சொல்லற்க எனும் எதிர்மறைப்பொருளே கொள்கிறார்.

"பிறரெல்லாம் கொளல் என்பதனை தொழிற்பெயர் ஆக்கி உரைத்தார். அவர் அத்தொழில் அமிழ்து என்னும் பொருளுமை யோடு இயையாமை நோக்கிற்றிலர்." என்று மணக்குடவரை மறுப்பார் பரிமேலழகர்.

மணக்குடவர் இக்குறளைத் "தங்கணத்தர் அல்லார் முன் கோட்டிகொளல் அங்ஙணத்துள் அமிழ்து உக்க அற்றால்" எனக் கொண்டுகூட்டி. உக்க என்பதனை கடைக்குறைந்த தொழிற் பெயராகக் கொண்டார். உக்க உக்கல் என்பதன் கடைக் குறைந்த வடிவமாகும். அத்தொழிற்பெயர், கொளல் என்னும் தொழிற்பெயரோடு இயைந்து செல்வது தெட்டத் தெளிவாகிறது.

இருவர் உரையாசிரியர்களும் எடுத்தாண்ட குறளுக்கு அமைத்த உரைகள் சரியானவையேயாயினும் பரிமேலழகர் மணக் குடவரை மறுப்பது வலிந்து செய்யும் ஒன்றாகவே தெரிகிறது.

பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள், மு.வ, கலைஞர் ஆகியோர் உக்க என்பதனை தொழிற்பெயராகவே கொள்கின்றனர் என்பது இவ்விடத்தே நோக்கற் பாலதாம்.



படிப்பகம்

www.padippakam.com

# பரிமேலழகரும் பரிதியாரும்

திருக்குறளுக்குப் பரிதியார் எழுதியது ''சைவ உரை'' என்று வழங்கப்பெறும். சிவநெறிக் கருத்துக்களுக்கு முதன்மை கொடுத்துத் தீட்டிய உரையாதலால் அது அவ்வாறு சிறப்பித்துச் சொல்லப்படும். கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இடம்பெறும் வாலறிவன், மலர்மிசை ஏகினான், இறைவன், அறவாழி அந்தணன், எண்குணத்தான் ஆகியன சிவபிரானையே குறிப்பதாக அவர் உரை சொல்கிறது. உதாரணத் திற்கு ஒரு குறளை நோக்குவோம்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும்.**

இக்குறளுக்குப் பரிதியார் பின்வருமாறு உரைசொல்கிறார். ''செங்கோல் முறைமைசெய்து உலகத்தைக் காக்கும் அரசன் உலகத்தை இரட்சிக்கிற பரமேஸ்வரன் என்று எண்ணப்படும்''

**'தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகம் என்று உணர்'**

என்பது ஓர் பழம்பாடல். இது திருக்குறளை சைவசமய நூல்களில் ஒன்று என்றவாறு கூறுகிறது. இக்கருத்தின் அடிப் படையில் தீட்டப்பட்டதே பரிதியார் உரையாகும். பொதுவான இந்துசமயக் கோட்பாடுகளின் அடிப்படையை விடுத்து, சைவ சமயத்திற்குரிய சிறப்புக் கோட்பாடுகளின் நோக்கில் திருக்குறளுக்கு எழுந்ததே பரிதியார் உரையாகும்.


படிப்பகம்

www.padippakam.com

குறட்பாக்களுக்கான பரிதியார் உரைகளிற் சில தவறுடைய வாகவும், சில முற்றிலும் பொருந்தாதவையாகும், சில வள்ளுவர் கூறும் பொருளினும் மிகைபடக்கூறும் குறையுடையவாகவும் விளங்குகின்றன. இதனால் இவருரை "திருக்குறட் கருத்தை ஓரளவே அறிந்துகொள்ள உதவும்" என்பர் அறிஞர். இக்குறைபாடு களை பரிதியார் புலமையின் குறைபாடாகக் கொள்வது என்றுமே பொருந்தாததாகும். உலகம் போற்றும் ஓர் ஒப்புயர்வுற்ற நூலுக்கு உரை எழுதப்போந்த பரிதியார் புலமையின் நிறைகுடமாகத் திகழ்ந் திருப்பார் என எண்ண இடமுண்டே அன்றி குறைகுடமாக விளங்கியிருப்பாரோ என ஐயுறுதலே தவறாகும். காலக் கழிவின் காரணமாக ஏட்டுப் பிரதிகளில் ஏற்பட்ட தெளிவின்மையும் சிதைவு களும், பிரதிபண்ணியோர் புலமைக்குறைபாடுகளும் கவனயீனமும் அவருரை குறையுடையதாய் ஆகக்காரணங்களாய் அமைந்திருக் கலாம் எனக் கொள்வதே பொருந்துவதாகும்.

எது எவ்வாறாயினும் சில குறட்பாக்களுக்கான உரைகளிற் பரிதியார் பரிமேலழகரினும் சிறந்து விளங்கக் காணலாம். அவ்வா றான உரைகள் சிலவற்றை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

* * *

**விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்**
**வைக்குந்தன் நாளை எடுத்து.**

"தனக்குச் சென்ற நாள்களை எடுத்து எண்ணி, அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன்" என்று இக்குறளுக்கு உரை சொல்வார் பரிமேலழகர்.

இங்கே, "போர்க்களத்தில் முகத்திலும் மார்பிலும் காயப்படாத நாட்களை எல்லாம் வீரன் ஒருவன் வீணாகிப் போன நாட்களாகக் கருதுவான்" என்கிறார் அவர்.

"வழுக்கினுள்" என்பதற்கு "வீணாகிப் போன நாட்களுள்" என்று அவர் பொருள் கொள்கிறார். மணக்குடவர், பரிப்பெருமாள்,



படிப்பகம்

www.padippakam.com

காலிங்கர் என்போர் "தப்பின நாளுள்ளே" என்றும் "வழுக்கிக் கழிந்த நாளுள்ளே" என்றும் கூறுவதாற் பரிமேலழகர் கொண்ட பொருளுடன் உடன்பாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர். தற்கால உரையாசிரியர்களான பேராசிரியர் மு.வ., நாவலர், கலைஞர் ஆகியோரும் "வீணான நாட்களுள்ளே" என்றே பொருள் கொள்கின்றனர். இவர்கள் அனைவர் உரைகளிலும் பொருட்சிறப்பின்மை காணப்படுகிறது.

பரிதியார் இக்குறளுக்கு "வீரன் நாள்தோறும் தன் சரீரத்திலே புதுமைப்புண் படாத நாள்களை உயிருடன் வாழாத நாளாக எண்ணுவான்" என்று உரை எழுதுவார். இவர் "வழுக்கினுள்" என்பதற்கு உயிருடன் வாழாத நாளாக" (அஃதாவது இறந்து பட்ட நாளாக) என்று பொருள் காண்கிறார். பேச்சு வழக்கில் ஒருவர் தவறிவிட்டார். வழுக்கி விட்டார், மோசம் போய்விட்டார் என்ற சொற்பிரயோகங்கள் அவர் இறந்துவிட்டார் என்னும் பொருளில் இன்றும் கையாளப்படுவதை நாம் அவதானிப்பின் மேற்படி குறளுக்குப் பரிதியார் உரை பொருட்சிறப்பு உடையதாய் விளங்குவதை உணரலாம்.

**எல்லாம் எவனோ பதடி வைகல்**
**அரிவை தோளிணை துஞ்சிக்**
**கழிந்த நாள் இவண் வாழும் நாளே.**

இக்குறுந்தொகைப் பாடல் அடிகளில் காதலியோடு மகிழ்வுற்ற நாட்களே உயிர்வாழ்ந்த நாட்களெனவும், அவளைப் பிரிந்து (வெளிக்களக் கடமைக்காகச்) சென்ற நாட்களெல்லாம் இறந்து பட்ட நாட்கள் என்றும் தலைவன் கூறுகிறான். காதலியைப் பிரிந்திருந்த நாட்களுக்கு பதடியை உவமை சொல்கிறான் அவன். பதர் அல்லது பதடி என்பது செத்துப்போன தானியத்தைக் குறிப்பதாகும்.

பரிதியார் உரையை மேற்படி குறுந்தொகைப் பாடற் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிறப்பு விளங்குவதாகும்.

* * *


படிப்பகம்

www.padippakam.com

**கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண் காமுற்றற்று.**

இக்குறளுக்கு, "கல்வியில்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை அவாவினாற் போலும்" என்று உரை எழுதியுள்ளார் பரிமேலழகர்.

இங்கே "முலையிரண்டும் இல்லாதாள்" என்பதற்கு இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதாள் ஒருத்தி" எனப்பொருள் காண்கிறார் அவர். மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், முதலிய பழம்பெரும் உரையாசிரியர்களும் போராசிரியர் மு.வ. நாவலர் ஆகியோரும் பரிமேலழகரைப் போன்றே பொருள் கொண்டுள்ளனர்.

இவர்கள் யாவரும் "இல்லாதாள்" என்பதை வினையாலணையும் பெயராகக்கொள்கின்றனர். பரிதியார் "இல்லாதாள்" முற்றெச்சம் எனக்கொள்கின்றார். ஓர் வினைமுற்று எச்சப்பொருளைத் தருமாயின் அது முற்றெச்சம் எனப்படும். "கல்லாதான் சொல்லைக் காமுறுதல் தனபாரம் இல்லாத பெண்ணைக் காமுறுதற்கு ஒக்கும்" என்பது பரிதியார் உரையாகும். இல்லாதாள் என்பது இல்லாத என, பெயரெச்சமாய் நிற்றலின் இது முற்றெச்சமாகும்.

"கல்லாதான் பிறர்க்கு அறிவுரை கூற ஆசைப்படுதல் ஆண் மகன் ஒருவன் முலையிரண்டும் இல்லாத பெண்ணை ஆசைப் பட்டதற்கு ஒப்பானதாகும்." இருவித ஆசைகளிலும் பயன் விளையாது என்பது பரிதியார் கருத்து. இக்குறளுரையில் கலைஞர் பரிதியாரையே பின்பற்றுவது குறிப்பிடத்தக்கது.

* * *

**உடம்பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போ டுடனுறைந் தற்று.**

"மனப் பொருத்தம் இல்லாதாரோடு கூட ஒருவன் வாழும் வாழ்க்கை ஒரு குடிலுள்ளே பாம்போடு கூட உறைந்தாற் போலும்" என்று இக்குறளுக்கு உரை வரைந்தார் பரிமேலழகர்.



படிப்பகம்

www.padippakam.com

ஏனைஉரையாசிரியர் அனைவரும் பரிமேலழகரைப் போன்றே பொருள் கூறிச் சென்றனர். ஆனாற், பரிதியார் உரை இவர்களிலும் வேறுபட்டு நய முடைத்தாய் விளங்குகிறது.

"உட்பகையானார் கூட்டுறவு ஒரு குடத்திலே பாம்பும் கருடனும் இருப்பதற்கு ஒக்கும்"

'பாம்பும் கருடனும் போல' என்னும் பழமொழியைத் தக்க இடத்தே புகுத்திப் பரிதியார் வரைந்துள்ள இவ்வுரை இலக்கிய நயம் வாய்ந்ததாய் விளங்குகிறது.

* * *

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.**

"கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும் ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின் அவை ஆராயப்படும்" என்று இக்குறளுக்கு உரை எழுதினார் பரிமேலழகர். ஏனை உரையாசிரியர்கள் அனைவரும் பரிமேலழக ரைப் போன்று 'பொறாமை கொண்ட நெஞ்சத்தவனின் வளர்ச்சியும் நல்ல நெஞ்சத்தவனின் அழிவும் ஆராயத்தக்கவை' என்னும் கருத் துரையே தந்து சென்றனர்.

இவர்கள் நினைக்கப்படும் என்பதற்கு நினைத்துப்பார்க்கத் தக்கது(அஃதாவது ஆராயத்தக்கது) என்று பொருள்கொண்டனர்.

பரிதியார் நினைக்கப்படும் என்பதற்கு (நினைக்க சக படும் எனக் கொண்டு) நினைக்கும் பொழுதே பட்டுப்போகும் என்று பொருள்காண்கிறார். நினைத்த அந்நொடியிலேயே பொறாமை நெஞ்சனின் வளர்ச்சியும் நல்ல நெஞ்சனின் கேடும் பட்டுப்போகும் என்பது அவர் கருத்து. இதனால், தன்னுரையைப் பின்வருமாறு வரைந்தார் பரிதியார்.

"அழுக்கு மனத்தன் பெற்ற ஆக்கமும் நல்ல மனத்தன் பெற்ற கேடும் இமைப்பிற்கெடும்". இமைப்பு, (இமைப் பொழுது) நொடிப்பொழுதைக் குறிக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

இதனால் அழுக்கு நெஞ்சனின் வளர்ச்சியும் நல்ல நெஞ்சனின் கேடும் நிலையானவை அல்ல என்பதும் அவை விரைந்து மாறி விடுவன என்பதும் கூறப்பட்டன. அழுக்கு நெஞ்சன் வளர்ச்சி குன்றி கெட்டுப்போவதும் நல்ல நெஞ்சன் கேடழிந்து ஆக்கம் பெறுவதும் விரைந்து நிகழவல்லவை என்னும் உண்மை பரிதியார் உரைமூலம் கூறப்பட்டது.

* * *

**மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ**
**டியைந்து கண்ணோடா தவர்.**

இக்குறளுக்கு "மண்ணோடு இயைந்த சித்திரத்தில் எழுதிப் பழுத்த மாமரத்துக்கு நிகராவன் கிருபைக் கண் இல்லாத அரசன்" என்று பரிதியார் வரைந்துள்ள உரை நயத்தற்குரியதாய் உள்ளது.

கனிகளை உடையதாய் வரையப்பட்ட மாமரத்தாற் பிறர்க்கு எவ்வாறுபயனில்லையோ அவ்வாறே கண்ணிருந்தும் கண்ணோட்டமில்லாத அரசனாற் பிறர்க்குப் பயனில்லையாம் என்னும் உண்மை இவ்வுரையால் விளக்கப்படுகிறது.

இவ்வாறாக, சில குறட்பாக்களுக்கான பரிதியார் உரை, பரிமேலழகரினும் சிறந்து விளங்கும் தன்மை அறிந்தின்புறத் தக்கதாம்.



படிப்பகம்

www.padippakam.com

# பரிமேலழகரும் நாவலரும்

ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் நாவலர் என்றால் எவ்வாறு ஆறுமுகநாவலர் அவர்களைக் குறிக்குமோ. அவ்வாறே தமிழகத்தில் நாவலர் என்பது இரா.நெடுஞ்செழியன் அவர்களையே குறிக்கும். தமிழறிஞர் ந.மு.வேங்கடசாமி நாட்டார். பேராசிரியர் முனைவர் சோமசுந்தர பாரதியார் போன்ற பெரும் புலமையாளர்கள். 'நாவலர் என்று அழைக்கப்பட்டனராயினும் அவர்கள் மறைவின் பின் அப் பெயர் இரா. நெடுஞ்செழியனுக்கே உரியதாகிவிட்டது. இளமைக் காலத்திலேயே சுயமரியாதை இயக்கத்தொடர்பும் பகுத்தறிவு நெறிப் பற்றும் கொண்டிருந்த நாவலர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளாற் கவரப்பட்டிருந்தார். தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதுமானிப் பட்டதாரியான அவர் ஆழ்ந்த தமிழறிவு படைத்தவர். தமிழிலக்கியங்களில் மாத்திரமன்றி இலக்கணங்களிலும் பெரும்புலமை மிக்கவர். எதனையும் அறிவியல், வரலாறு, பகுத் தறிவு, மொழிமரபோடு பொருந்த வைத்து நோக்கும் இயல்பினர். சிறந்த பேச்சாளரும், எழுத்தாளரும், நிருவாகியும், சீர்திருத்த வாதியு மான நாவலர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் தமிழகத்தின் அமைச் சராகப் பணியாற்றியவர். பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் இராமச்சந்திரன் ஆகியோர் மறைவின்பின் இருமுறை இடைக்கால முதலமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

ஆற்றொழுக்குப் போல் நாவிலிருந்து வார்த்தைகள் உருண்டுவரப் பேசும் ஆற்றல் நாவலருக்கே உரிய சிறப்பாகும். தமிழின் மிகச்சிறந்த வேகப் பேச்சாளர்களில் அவரும் ஒருவர். புள்ளி விபரங்களுடனும், அரசியல் வரலாற்று இலக்கிய ஆதாரங்களுடனும்


படிப்பகம்

www.padippakam.com

மேடையில் அரிமா போல் நின்று முழக்கமிடுவதைக் கண்டு வியந்த அண்ணா அவர்களே 'நாவலர்' என்றும் 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்றும் அவரைப் பட்டம்சூட்டி அழைக்கலானார். நேர்மை மிக்க அரசியல்வாதியாக கணிக்கப்பட்டிருந்த நாவலரின் பிற்கால அரசியல் வாழ்வு அவர்மீது மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் கீறல்களை பதித்துவிட்டது உண்மையே. எந்தத் திராவிட சமுதாயம் மூட நம்பிக்கைகளிலிருந்துவிடுபட்டு ஏற்றமும் எழுச்சியும் காண வேண்டுமென்று மேடைதோறும் பேசியும் ஏடுதோறும் எழுதியும் பணிசெய்தாரோ, அதே திராவிட சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அவரது சில அண்மைக்காலப் பேச்சுக்கள் தடைக்கல்லாக நின்ற உண்மையை யாரும் மறப்பதற்கில்லை. எவரையும் அரசியற் கண்ணோட்டத்தோடு நோக்குவது இக்கட்டுரைத்தொடரின் பணி அன்று என்பதாலும் அத்தகைய நோக்கு இவ்விலக்கியத் தொடருக்கு ஊறு விளைவிக்குமென அறிஞர் சிலர் அறிவுறுத்திய தாலும் அதனை அத்தோடு விடுவோம்.

தமிழன்னை திருவடிகளில் ஏறத்தாழ இருபது சிறந்த நூல்களைச் சூடியுள்ளார் நாவலர். இவ்வகையில் ஐந்து ஆண்டு களின் முன் வெளிவந்த 'திருக்குறள் நாவலர் தெளிவுரை' ஓர் குறிப் பிடத்தக்க படைப்பாகும். திருக்குறளுக்கு இதுவரை வெளிவந்த உரைகளிற் பெரும்பாலானவை கடவுள் நம்பிக்கையாளர்களினால் சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுதப்பட்டவையாகும். இத்தகைய உரைகளினின்று வேறுபட்டும், முழுதாக மாறுபட்டும் நாத்திக நோக்கில் உரை வரைந்துள்ளார் நாவலர். கடவுள், முற்பிறப்பு-மறுபிறப்பு, நரகம்-வீடுபேறு, விதி, வினைப்பயன் போன்ற கொள்கைகளை மறுக்கும் இவ்வுரைநூல் அத்தகைய நோக்கில் திருவள்ளுவரை நோக்குவார்க்குக் கிடைத்த ஒருசிறந்த படைப்பா கும். இதனாலேயே தமிழக அரசின் மிகஉயர்ந்த திருவள்ளுவர் விருது நாவலருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தன் உரை விளக்கத்திற்கு இலக்கண ஆதாரங்களையும் இலக்கிய மேற்கோள் களையும் எடுத்துக்காட்டும் சிறப்பும் நாவலருக்கு உண்டு. இவ்



படிப்பகம்

www.padippakam.com

வகையில் பரிமேலழகருக்குப்பின் எழுந்த இலக்கண உரையாகவும் இதுவிளங்குகிறது. திருக்குறளையிட்டும், திருவள்ளுவர் கொள்கை களையிட்டும் நாவலர் கொண்டுள்ள கருத்துக்களில் சில எமது சொந்த நோக்கிற்கு மாறுபாடானவையாயினும் அவர் உரையை காய்தல் உவத்தல் இன்றிப்பார்த்தலே இக்கட்டுரை எழுதுவதன் குறிக் கோளாகும்.

"தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலப்பகுதியில்தான் திருவள்ளுவரால் இயற்றப்பட்டு, அவரால் வழங்கப்பட்டு விட்டுச் சென்ற குறட்பாக்களில் எஞ்சி நின்ற ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களை யாரோ ஒருபெரும் புலவர் பெரிதும் முயன்று தொகுத்துள்ளார் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. பால், இயல் ஆகியவற்றின் பகுப்பு-அமைப்பு முறையும் குறட்பாக்களின் பகுப்பு-அமைப்பு முறையும் உரையாசிரியருக்கு உரையாசிரியர் வேறுபட்டு விளங்குவதைக்கொண்டே இந்தப் பகுப்பு அமைப்பு முறைகளை வள்ளுவரே செய்திருக்க முடியாது என்ற முடிவுக்கு வர வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது."

"மதியின்கண் மறு இருப்பது போல பரிமேலழகரின் வட மொழி நூலாரின் கொள்கைப்பற்றும், வைணவ சமயப்பற்றும், வர்ணாச்சிரம சனாதன தருமப்பற்றும் சார்ந்த கருத்துக்கள் வள்ளுவர் வற்புறுத்திய சான்றோர் மரபுக்களுக்கும் பொதுப் பண் பாட்டியலுக்கும் உலகியலுக்கும் உண்மையியலுக்கும் பொது அறத்திற்கும் முரண்பாடான முறையில், அவரால் உரையின் சிற்சில பகுதிகளில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டிருக்கின்றன."

"பயன்படாத சமயக்கோட்பாடுகளுக்கும், வடமொழியாளரின் கற்பனையான புராணக்கதைகளுக்கும், அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்திவராத கற்பனைக் கடவுட் கொள்கைக்கும், அயலார் நூல் கள் கூறும் பொருந்தாத தருமங்களுக்கும், தமிழர் பண்பாட்டிற்கு ஒத்துவராத சாத்திரங்களுக்கும், சுருதிகளுக்கும், சுமிருதி களுக்கும், வேதத்திற்கும் அவர் மதிப்பளிக்கவே இல்லை"



படிப்பகம்

"வள்ளுவர் அறிவாராய்ச்சிக்கும், நடைமுறை இயலுக்கும், உலகியலுக்கும் ஒத்தமுறையிலேதான் எல்லாச்சொற்களையும் கருத்துக்களையும் வழங்கியுள்ளார்."

தன்நீண்ட முன்னுரையில் மேற்கண்டவாறாக வள்ளுவர் கொள்கைகள் பற்றியும், பரிமேலழகர் உரைபற்றியும் கூறும் நாவலர் "கடவுள் வாழ்த்து" என்ற பெயரில் வழங்கிவந்த முதலதிகாரத்தை "அறிவன் சிறப்பு" என மாற்றிக்குறித்துள்ளார். "அறியாமை உலகத்தில் இருந்து அறிவுடைய உலகத்திற்கு மக்களை அழைத்து வருவதற்கு முன்னோடியாக இருந்து வழிகாட்டக்கூடிய சான்றோர் சிறப்பைக் கூறுவதே இவ்வதிகாரம்" என்பது அவர் கருத்தாகும்.

இதற்கு ஏற்பவே முதற்குறளுக்குப் பொருள் கூறுகிறார் நாவலர்.

* * *

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

"எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் என்ற எழுத்து எப்படி முதன்மையாக அமைந்திருக்கிறதோ அதுபோல அறிவால் வளர்ந்து வரும் உலகத்திற்கும் ஆவதற்குக் காரணமான அறிவாற்றல் மிக்க ஆன்றோர் முதன்மையாக அமைந்திருக்கிறார்கள்".

"இவ்விடத்தே ஆதி என்பது ஆதல், ஆவது என்னும் பொருளைத் தரக்கூடிய தொழிற்பெயர்ச் சொல்லாகும். பகவன் என்னும் பதத்திற்கு அறிவன் (அறிஞன்), ஆசிரியன், அருகன், புத்தன் போன்ற பலபொருள்கள் அகராதியில் உண்டு. இங்கு பகவனுக்கு அறிவன் என்பதே வள்ளுவர் கொள்ளும் பொருள் ஆகும். இதனால் ஆதிபகவன் என்பதற்கு 'மனித சமூகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமாவதற்குக் காரணமான அறிவன்' என்பது பொருளாகிறது. ஆதிபகவன் என்பதை ஆதியாகிய பகவன் என இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகப் பரிமேலழகர் கொண்டது தவறு" என்கிறார் நாவலர்.

www.padippakam.com

"நூல் இயற்றும்போது கடவுள் வாழ்த்தை முதலில் தொடங்கிவிட்டுப் பின்னர்தான் நூற்பொருளைக் கூறவேண்டுமென்ற மரபோ விதிமுறையோ தொல்காப்பியத்தில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவேயில்லை. தொல்காப்பிய இலக்கணப் பெருநூலின் தொடக்கத்திலே கூட கடவுள் வாழ்த்து காணப்படவில்லை. சங்க கால நூல்கள் எவையும் கடவுள் வாழ்த்தோடு தொடங்கப்பட்டதாகக் குறிப்புக்கள் எவையும் உறுதியாக இல்லை. வள்ளுவர் இயற்றிய குறட்பாக்களைத் திருக்குறள் என்ற நூல்வடிவில் பிற்காலத்தில் தொகுத்தவர்தான் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பினை இட்டிருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லை."

இப்படிக்கூறும் நாவலர் அறிவுடைச் சான்றோரையோ. ஆசிரியனையோ போற்றி. நூலைத்தொடரும் வழக்கம் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரத்தையும் எடுத்துக்காட்டத் தவறி விடுகிறார். பொருள். அமைப்பு. பகுப்பு முறைகளில் திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்கற்பாலதும். பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் பிறிதொன்றுமான நாலடியார் "வான் இடுவில்லின் வரவு அறியா வாய்மையால் கால் நிலம் தோயாக்கடவுளை" வாழ்த்தியே செல்கிறது.

மற்றைய குறட்பாக்களில் இடம்பெறும் வாலறிவன். மலர்மிசை ஏகினான். வேண்டுதல் வேண்டாமையிலான். இறைவன். ஐந்தவித்தான். தனக்குவமையில்லாதான். எண்குணத்தான். ஆகியவையும் ஆற்றல் அறிவுடைச் சான்றோரையே குறிப்பதாக நாவலர் உரையெழுதியுள்ளார்.

ஆற்றலும் அறிவுமுடைச்சான்றோர் திறத்தை நாற்பத்தி ஐந்தாவது அதிகாரமான பெரியாரைத் துணைக்கோடலில் வள்ளுவர் வெளிப்படையாகவே போற்றிப்பேசுவதால். இவ்வதிகாரமும் அவர்களையே சிறப்பிப்பதாகக்கொள்வது பிழையானதாகும். ஒரு பொருளை இரு அதிகாரங்களிற்பேசுவது. வள்ளுவர் கொள்கை அன்று என்பதை நாவலர் கவனத்திற் கொள்ளாதது ஏனோ?



படிப்பகம்

www.padippakam.com

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரையுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"

என்னும் சூத்திரம் தொல்காப்பியர் காலத்திலேயே கடவுள் நம்பிக்கை தோன்றி விட்டதற்கான தகுந்த ஆதாரமாகும். இந்நம்பிக்கை வளர்ந்து திருவள்ளுவர் காலத்திலோ அன்றேல் அதற்குச் சிறிது முன்போ வலுவடைந்திருக்கலாம் என்பதை நாவலர் மறுப்பதற்கில்லை.

ஆதிசிவன், ஆதிபரம்பொருள், ஆதிமூலம் என்பனபோல ஆதிபகவன் என்பதை இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக பரிமேலழகர் கொள்வது சரியானதே.

திருவள்ளுவர்தம் கடவுட் கொள்கைகளை மறுத்து நாவலர் கூறும் காரணங்கள் இலக்கிய நோக்கில் பலமானவை அன்று.

இலக்கண ஆதாரங்களுடனும் இலக்கிய எடுத்துக்காட்டு களுடனும் முதல் அதிகாரத்திற்கு நாவலர் வழங்கியுள்ள தெளிவுரை அவர்தம் தமிழ்ப்புலமையின் வெளிப்பாடாகக் கொள்ளப்படத் தக்க தாயினும் கொள்கைக்காக வலிந்து ஆக்கியதாகவே விளங்குகிறது.

இத்தொடரில் எடுத்தாண்ட எல்லாக் குறட்பாக்களின் ஒப்பீட்டின் போதும் ஆரம்பித்திலிருந்தே நாவலர் உரைகளையும் எடுத்துக்காட்டி, அவ்வப்போது அவர் உரை சிறந்து விளங்கும் இடங்களையும் யாம் குறிப்பிட்டுள்ளோம். இனித் தனித்து அவர்தம் உரை இயல்புகளைக் கவனிப்போம்.

* * *

**ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலும் கரி.**

என்னும் குறளைத் திரித்து "ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திறனே சாலும் கரி" என்று தன் தெளி



படிப்பகம்

www.padippakam.com

வுரை நூலிற் குறித்துள்ளார் நாவலர். அவ்வாறு குறித்த தற்கான காரணத்தை அவர் பின்வருமாறு சொல்கிறார்.

"பழைய ஓலைச் சுவடிகளில் வல்லின றகரத்திற்கும் இடையின ரகரத்திற்கும் வேறுபாடு காண்டல் அரிது. இவ்வறியா நிலையில் ஐந்திறம் என்பது ஐந்திரம் என எழுதப்பட்டிருக்கிறது என்று பண்டித அ.கி.நாயுடு அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதுபோல் இந்திறன் இந்திரன் என்று ஆகியிருக்கக் கூடும்.

இந்திறன் என்ற சொல் இந்திரன் என்று திரிபுற்றது றகர. ரகரப் போலியென்று கூறுவர். இதுபாட வேறு பாடாகவும் கொள்ளப்படும்." இவ்வாறு கூறும் நாவலர் இத்தகைய வேறுபாட்டை முன்னோர் எவரும் தம் பிரதிகளில் கையாண்டதாகக் காட்டத் தவறிவிடுகிறார். ஆகவே தமக்கு ஏற்புடையதான வழிச்சென்று உரை வழங்குவதற்காக நாவலர் இக்குறளின் மூல பாடத்திலேயே மாற்றம் செய்துள்ளார் என்பதே பொருத்தமாகும்.

ஐம்புலன்களையும் அடக்காமல் ஒழுக்கக்கேடனாக விளங்கிய தேவேந்திரனை வள்ளுவர் இவ்விடத்திற் குறிப்பிடவில்லை. என்று பழம் பெரும் உரையாசிரியர்கள் கூறிய உரையை மறுக்கும் நாவலர் தன் தெளிவுரையை பின்வருமாறு சொல்கிறார்.

"ஐந்து புலன்களாலாகும் அவாக்களைக் கட்டுப்படுத்தி அடக்கியவனுடைய வல்லமைக்குப் பரந்த வான்புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோனாகக் கருதப்படும் இனிய திறமை மிக்க அறிவாற்றலிற் சிறந்த சான்றோனாகக் கருதப்படும் அறிவனே தக்க சான்றாகும்."

இதைப்போன்றே "மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅய தெல்லாம் ஒருங்கு" எனும் குறளை "மடியிலா மன்னவன் எய்தும் மடியளந்தான் தாஅய தெல்லாம் ஒருங்கு" என்று மாற்றிக் குறித்துள்ளார். இத்தகைய பாட வேறுபாடு எந்தப் பிரதியிலும் இருந்ததாக யாருமே காட்டியது இல்லை. இதுவும் நாவலர் தன் கருத்தின் வழிஉரை சொல்வதற்காக தானே உருவாக்கிக் கொண்ட பாடவேறுபாடாகும். வழக்கத்தில் இருந்து



படிப்பகம்

www.padippakam.com

வந்த சில புராணக் கற்பனைக் கதைப்போக்குகளையும் வழக்கத்தில் இருந்த சிலசமயக் கற்பனைக் கருத்துக்களையும் வள்ளுவர் சிற்சில இடங்களில் குறிப்பபிட்டிருக்கக் கூடுமென்றாலும், அவற்றையெல் லாம் அவர் தம் கொள்கைகளாக ஏற்றுக்கொண்டார் என்று கொள்வதற்கில்லை. எடுத்துக் காட்டுகளாகவே குறிப்பிட்டுள்ளார்.'' என்று முகவுரையில் கூறும் நாவலர் மேற்காட்டிய இரண்டு குறட் பாக்களிலும் வள்ளுவர் எடுத்துக்காட்டுகளாகவே அச்சமயக் கற்ப னைக் கதைகளை உபயோகித்தார் என்று ஒப்புக்கொள்ளக் கூட மறுப்பதேனோ?

சமயக் கோட்பாடுகளை ஒட்டி வழங்கப்படும் உரைகளை எவ்விதத்தினும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் நாவலரின் மனப்பாங்கே மூலபாடத்தில் மாற்றம் செய்யவேண்டிய கையறு நிலைக்கு அவரை இட்டுச் சென்றிருக்கிறது.

***

தெய்வம், தேவர், வானோர், புத்தேளிர் ஆகிய வார்த்தை களை ஏறத்தாழ ஒரே பொருள் உடையனவாக நாவலர் கொள்கிறார். இவையனைத்தும் மேலானவர், சிறப்புக்குரியவர் பெருமைக்குரியவர், வான்புகழ் கொண்டவர், புகழ் மிக்கவர் எனப் பொருள் படுபவை என்பது அவர் கருத்து.

உதாரணமாக ''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் குறளுக்கு ''வான்புகழ் கொண்ட மேலான ஒருவர் என்ற காரணத் திற்காக வேறு எவரையும் பின்பற்றி நடக்காமல், தன் கணவனை மட்டுமே எண்ணி, அவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி நடப்பவள் பெய்ய வேண்டும் என்று விரும்பும் காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள்.'' என்று உரையெழுதுகிறார். இதே நாவலர் தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும் என்னும் குறளுக்கு வைதிகர்களின் கற்பனைப்படி தெய்வம் விதித்த விதி கருதிய பயன் ஏற்படவில்லையே என்று ஒருவன் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும் முயற்சியானது அவன்



படிப்பகம்

www.padippakam.com

தன் உடம்பை வருத்திய வருத்தத்தின் அளவிற்கு அவனுக்குக் கூலி கொடுக்கும் என்கிறார். முதற்காட்டிய குறளில் தெய்வம் என்னும் பதத்திற்கு மேலானவர் என்று பொருள் கொள்ளும் நாவலர் அடுத்த குறளில் அதே பதத்திற்கு கடவுள் என்றே பொருள் கொள் கிறார். இதுவும் கருத்தின்வழி உரைநிலை நாட்டும் அவர்தம் மனப்பாங்கின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை.

* * *

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந் தோம்புவான் இல்.**

"நல்ல விருந்தினராக வீடு தேடி வருபவரை முகமலர்ச்சி யோடு போற்றி வரவேற்கின்றவனுடைய வீட்டில் செல்வம் என்னும் திருமகள் மகிழ்ச்சியோடு வாழ்வாள்."

இங்கே, திருமகள் செல்வத்தைக் குறிப்பிடும் உருவகப் பெயர்களில் ஒன்று என நாவலர் குறிப்பிடுவது ஏற்கத்தக்கதாகும்.

**மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரை யினாள்.**

இக்குறளில் திருமகளைத் தாமரையினாள் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இது செந்தாமைரப் பூவில் திருமகள் வீற்றிருப்பதா கக் கூறப்படும் சமயக் கருத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். திருமகளுக்கான உருவகப் பெயர்களில் ஒன்றாக நாவலர் இதனைக் கூறுவது பொருந்தாததாகும்.

* * *

**உலகந்தார் உண்டென்ப தில்லென்பான்**
**வையத்துள்**
**அலகையா வைக்கப் படும்.**

இக்குறளில் இடம்பெறும் அலகை என்பது அச்சத்தை ஏற்படுத்தத் தக்க பயங்கர உருவம் என்று சொல்லும் நாவலர், "அச்சத்தின் உருவெளித் தோற்றத்தைத்தான் பேய் என்றும் அலகை



படிப்பகம்

என்றும் கூறுவது. இதுவும் நூல் வழக்காகும். பேய் என்றோ அலகை என்றோ உயிருள்ள பொருள் உண்மையில் இல்லை'' எனவும் தன் விரிவுரையில் கூறுகிறார்.

**கூற்றுஉடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்**
**ஆற்ற லதுவே படை.**

இக்குறளுக்கு ''சாவே உருக்கொண்டு வெகுண்டு எதிர்த்துப் போர் புரிய வந்தாலும். ஒன்றாகத் திரண்டு போர் செய்யும் வல்லமை உடையதே படையாகும்'' எனத் தெளிவுரை செய்கிறார் நாவலர். இங்கு கூற்று என்பதற்கு சாவு எனப்பொருள் கொள்கிறார் அவர்.

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு.**

தவம் செய்வோர் சாவை வென்று வாழமுடியும்.

கூற்று என்றாலும் கூற்றம் என்றாலும் உயிர் வேறு உடல் வேறு என்று கூறுபடுத்துகின்ற ஒன்று. அதாவது சாவு என்றுதான் பொருள்படும். அதனை ஆண்பாலாக உருவகப்படுத்திக் கூற்றுவன் என்று சொல்வதும் உண்டு. எருமைக் கடாமீது ஏறி உயிரைப் பறிக்க வருகிறவன் எமன் என்பதெல்லாம் வட நூலார் கட்டிய கற்பனைக் கதையாகும். மேற்படி வார்த்தைகளுக்கு நாவலர் கூறும் பொருளும் விளக்கமும் காலத்திற்கேற்ற சிறப்புமிக்கவையாக விளங்குகின்றன.

* * *

**பருவரலும் பைதலும் காணான் கொல் காமன்**
**ஒருவர்கண் நின்றொழு குவான்.**

காதலன்பை நுகர்வதற்குரிய ஆண் பெண் இருபாலாரிடத்திலும் ஒப்ப நில்லாமல் காதலரிடத்தே நின்று வருத்துகின்ற காமன் என்னுடைய துன்ப மிகுதியையும் பசலை நோயையும் அறியமாட்டானோ?

www.padippakam.com

**அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனம்குழை
மாதர்கொல் மாலும் என்நெஞ்சு.**

கனத்த காதணிகளை உடைய இப்பெண் வாட்டும் ஒரு அழகின் வடிவமோ? அல்லது ஒரு அழகான மயிலோ? அல்லது மங்கையோ? இவள் இன்னவள் என்றுஅறியமாட்டாமல் என்னுள்ளம் மயங்குகிறதே.

இவ்விரு குறள்களிலும் காமன் என்பதை மகளிரைக் காதல் வேட்கையினால் வருத்துகின்ற ஆடவராகவும், அணங்கு என்பதை ஆடவரைக் கவர்ந்து இழுக்கும் மகளிராகவும் நாவலர் கூறியுள்ள பொருள் நயத்திற்குரியதாகும். காமனைக் காதலுக்குரிய கடவுளாகவும் அணங்கு என்பதைப் பெண் தெய்வமாகவும் முன்னை உரையாசிரியர் கொண்டனர்.

* * *

அளறு என்பதை நரகம் என்றும் மேலுலகம் என்பதை சொர்க்கம் என்றும் கொள்வதை மறுக்கிறார் நாவலர். அளறு என்பதற்கு பெரும் துன்பத்தில் ஆழ்தல் என்று அவர் பொருள் கொண்டுள்ளார்.

**வரைவுஇலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு**

பொதுமகளிரின் மெல்லிய தோள்களானவை அக்குற்றத்தினை அறியும் அறிவில்லாத கீழ் மக்கள் வீழும் சேற்றுக் குழியாகும். முன்னை உரையாசிரியர் அளறு-நரகம் எனக்கூற நாவலர் தன் பகுத்தறிவுக் கொள்கைக்கிணங்க பெரும் துன்பத்தில் ஆழ்தல் எனப்பொருள் கொள்கிறார்.

மேலுலகம் என்பதை வீடுபேறு என முன்னை உரையாசிரியர் கொள்ள, நாவலர் 'இறந்தபின் எய்தும் புகழுலகம்' என்கிறார். "அருளிலார்க் கவ்வுலகம் இல்லை" என்பதற்கு அருளில்லாதவர்களுக்கு புகழ் உலகம் கிடையாது என்று சொல்கிறார்.

* * *



படிப்பகம்

www.padippakam.com

ஒருமை என்பது ஒரு தன்மை. ஒருநிலை, எனப் பொருள் படும். அவ்வாறே, இருமை இருதன்மை, இருநிலை, இரண்டு தலைமுறைகள் எனப்பொருள்படும் என்கிறார் அவர்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

வாழ்க்கையின் ஒரு நிலையிற் கற்றகல்வி எல்லா நிலையிலும் உதவும் என்பதாகக் கூறுகிறார் நாவலர். இவ்வுரையில் பொருட் சிறப்பின்மை தெரிகிறது.

**இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர் கொண்டனள்.**

"இந்த நிலையில் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று சொன்னபோது வேறுநிலையில் நான் பிரிந்துவிடுவேன் என்று கருதி கண்ணீர் வழிய அழுதாள்." இங்கும் நாவலர் உரையில் பொருட் சிறப்பின்மை காணப்படும்.

"இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியரோ எங்கணவர்
யானாகியரோ நின்நெஞ்சு நேர்பவளே."

இப்பாடல் அடிகளில் "இப்பிறப்பில் மாத்திரமன்றி மறுபிறப்பிலும் நீங்களே எனது கணவராக அமைய வேண்டும். யானே அங்கும் உங்கள் நெஞ்சில்நிறைந்தவளாக விளங்கவேண்டும்." என்று தலைவி சொல்லுவதாக உரை எழுதுவர் மரபுவழி ஆசிரியர்கள்.

இக்குறுந்தொகை அடிகளுக்கும் நாவலர் மேற்காட்டிய குறள் போன்று உரைகூறுவாராயின் தமிழர்தம் மனைவாழ்வின் மாட்சி அன்றோ நகைப்புக்குரிய தாகிவிடும்.

* * *

**தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான் என்றாங்கு**
**ஐம்புலத்தா றோம்பல் தலை**



படிப்பகம்

www.padippakam.com

தென் புலத்தார் என்பது தமது புலமையாற் சமுதாயத்திற்கு நன்மை செய்து வாழ்கின்ற தமிழ்ப் புலவர்களைக் குறிக்கும் என்ப தாகக்கொள்கிறார் நாவலர். இதற்கு ஆதாரமாக, "தென்புலம் வாழ்நர் கள் அருங்கடனிறுக்கும் பொன்போல் புதல்வர்" என்ற அடிக்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர் பாணர்க்கு மட்டுமல்லாமல் படித்தவர்க்கும் உதவிசெய்யும் கடமையை உன் மக்களும் கொள்ள வேண்டும் என விளக்கம் செய்வதை எடுத்துக் காட்டுகிறார். பழம் பெரும் உரையாசிரியர்கள் தென் புலத்தார் பிதுரர் எனக் கொள்ள, நாவலர் தமிழறிஞர் எனக் கொள்ளும் வேறுபாடு குறளை ஒரு குறுகிய வட்டத்திற்குள் சிறைப்படுத்தி விட்டதாயினும் நயத்திற் குரியதாய் உள்ளது.

* * *

ஊழ் என்பது வழிவழித் தலைமுறையாக ஒவ்வொருவரிட மும் இயற்கையாகவே படிந்து தலைமுறைக்குத் தலைமுறை தொடர்ந்து வந்துகொண்டிருக்கக் கூடிய இயற்கைப் பண்பறிவு என்பது நாவலர் கருத்து.

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.**

நூல்களைக் கற்றிருந்த போதும் அவனது உண்மையான உள்ளறிவே முன்வந்து மேம்பட்டு நிற்கும்.

இது ஊழுக்கு மணக்குடவர், பரிமேலழகர் முதலிய பழம் பெரும் ஆசிரியர்கள் எழுதிய உரைகளையே ஒத்திருக்கிறது. ஊழ் என்பது இயற்கை முறையாக வெளிப்படுவது என்பது நாவலர் கருத்து. அது(முன் வினைப்பயனாய்) இயற்கையாய் வருவது என்பது பழம்பெரும் உரையாசிரியர் கருத்து. இருதிறத்தார் உரை களையும் கூர்ந்து ஆராயின் ஊழ் என வள்ளுவர் குறிப்பிடுவது இயற்கையானது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இதுகாறும் நாவலர் உரை இயல்புகளை நோக்கினோம். விரிப்பிற் பெருகும் என்று அஞ்சி இத்தோடு முடித்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

# பரிமேலழகரும் கலைஞரும்

பரிதிக்கு மின்மினிப் பூச்சியின் அறிமுகவுரை எவ்வாறு வேண்டியதில்லையோ, அவ்வாறே கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் முகவுரை தேவையற்றதாகும். தலைசிறந்த தமிழறிஞராகவும் இந்தியாவின் முன்னணி அரசியல்வாதிகளில் ஒருவராகவும் கணிக்கப்பெறும் அவர் சிறந்த பேச்சுவன்மையாலும் எழுத்துத் திறத்தாலும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தனித்துவ முத்திரை பதித்தவர். தமிழ் நாட்டின் இன்றைய முதல் அமைச்சரான அவர் தன் இளமைக்காலத்தே தமிழ் மொழி ஏற்றங்காணவும் தமிழ் மக்கள் நல்வாழ்வுபெறவும் களம் பல கண்டவர். சிரித்த முகத்தோடு சிறைக் கம்பிகளை முத்தமிட்டு "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று சிந்து பாடியவர்.

தமிழ் மக்களின் அரசியல், சமய, சமூக, பொருளாதாரத் துறைகளில் மலர்ச்சியை ஏற்படுத்தி, அவர்தம் வாழ்வின் எழுச்சிக்கு வழிகாட்டத் தந்தைபெரியார் வழிநின்று பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தி.மு.கழகத்தை, இன்றுள்ள நிலைக்கு வளர்த்தெடுத்த பெருமையில் கலைஞருக்கும் முக்கிய பங்குண்டு. அரசியல்வாதிகளுக்கே உரியவாறு எதிரிகளின் வாயடங்கப் பேசுவதில் வல்லவர் கலைஞர்.

இலக்கியத்தின் கவிதை, கட்டுரை சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை வசனம் என்னும் பலதுறைகளும் கைவந்த வல்லாளர் அவர். "அடுக்கு நடைக்கு ஒரு அண்ணா. அந்த அண்ணாவுக்கு ஒரு அடுக்குநடைத் தம்பி" என்று சிறப்பிக்கப்பட்டாற் போல அவர் ஆக்கங்களில் எதுகையும் மோனையும் கலைநயமும் சிறந்து விளங்கும். பிரச்சாரத் தன்மை அவர் ஆக்கங்களின் பெரிய குறைபாடாகத் திறனாய்வாளர்களாற் கூறப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

நவீன இலக்கியங்களிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் புலமை மிக்கவரான அவர் எதனையும் தனக்கே உரித்தான அழகு நடையில் தரும் இயல்பினர். உரோமாபுரிப் பாண்டியன், பண்டார வன்னியன், குறளோவியம், சங்கத்தமிழ் என்பன தமிழன்னை திருவடி களில் கலைஞர்சூடிய சிறந்த அணிகளிற் சிலவாம். இவ்வகையில் இவ்வாண்டு நடுப்பகுதியில் வெளிவந்த "திருக்குறள் கலைஞர் உரை" குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பேச்சொன்றும், செயல் பிறிதொன்றுமாய்ச் செல்லும் கலைஞரின் இன்றைய அரசியலுடன் உடன்பாடிலம் ஆயினும், யாம் எழுதிவரும் திருக்குறள் உரைவேறுபாடுகள் தொடரின் ஒரு அங்கமாக அவர் உரையை காயீதல், உவத்தல் இன்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான்.....

வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவை குறித்து அவரது பார்வை ஆகியவற்றிற்கு மாறுபடாமலும், வலிந்து என்கருத்து எதையும் திணிக்காமலும், குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு இதுவரை உரையாசிரியர்கள் கொண் டுள்ள பொருளையன்னியில் தமிழில் மற்றொரு பொருளும் இருக் கிறது என்ற உண்மை நிலையைக் கடைப்பிடித்து, நான் எண்ணு வது போல் அவர் எண்ணினாரா என்று நோக்காமல், அவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதில் மட்டுமே ஆர்வம் கொண்டு என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டியவரையில் இந்தப் பொன்னாடையை நெய்துள்ளேன்." மேற்கண்டவாறாக முகவுரை வரையும் கலைஞர் "வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் என்னும் வாதத்திற்குள் சிக்கவைக்க நான் விரும்பவில்லை" என்றும் கூறுகிறார். இதன் மூலம் வள்ளுவரைக் கடவுள் நம்பிக்கையாளர் என்றோ, கடவுள் மறுப்பாளர் என்றோ துணிய முடியாத திரிசங்கு சுவர்க்க நிலையில் கலைஞர் இவ்வு ரையை ஆக்கப்புறப்பட்டுள்ளார் என்பது தெளிவு. இதன் வெளிப்



படிப்பகம்

www.padippakam.com

பாடாகப் பல குறட்பாக்களுக்கு ஐயம் திரிபற உரை வழங்க முடியாது அவர் இடர்ப்படுவதை நூலைக் கூர்ந்து நோக்குவோர் காணமுடியும். உதாரணமாகத் தூரத்தை அளக்கப்புறப்படும் ஒருவன் தசம அளவைத் திட்டத்தையோ, அன்றேல் பிரித்தானிய அளவைத் திட்டத்தையோ, அல்லது சாண் முழம் பாகம் என்னும் நம் முன்னோர் தம் தேவைக்குப்பயன்படுத்திய நாட்டு அளவு முறையையோ பயன்படுத்தலாம். அளக்கப்புறப்பட்டபின் எடுத்துக்கொண்ட அளவுத் திட்டத்தில் உள்ள சிறப்பு, குறைபாடுகள் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. இவற்றில் ஒன்றைப் பயன்படுத்தாது மூன்றையும் ஒரே நேரத்தில் பயன்படுத்தி அளப்பது எத்துணைத் தவறானதோ அத்தகையதே தெளிவான கொள்கையின்றிக் கலைஞரால் ஆக்கப்பட்டிருக்கும் இவ்வுரை நூலுமாகும்.

வள்ளுவரை ஆத்திகர் அல்லது நாத்திகர் என்ற வாதத்திற்குள் சிக்க வைக்க விரும்பாத கலைஞர் 'கடவுள் வாழ்த்து' என்னும் பெயரில் விளங்கும் திருக்குறளின் முதல் அதிகாரத்தை 'வழிபாடு' எனக்குறித்துள்ளார். இதன்மூலம் வள்ளுவர் கடவுள் நம்பிக்கையாளர் என்பதை மறுப்பவராகவே கலைஞர் காணப்படுகிறார். இது அவர் எழுதிய முகவுரைக்கே முரணானது. உரை எழுதத் தன் வலது காலை எடுத்து வைத்த கலைஞர் முதல் அடியிலேயே நன்னூலார் கூறிய மாறுகொளக் கூறல் குற்றத்திற்கு ஆளாகிறார்.

* * *

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்னும் முதற் குறளுக்கு "அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை. ஆதிபகவன் உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை' என்று உரை எழுதுகிறார். வள்ளுவர் ஆதிபகவன் என்று குறித்தது முழுமுதற் கடவுளையே என்பது பழம்பெரும் உரையாசிரியர்களான பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள் கருத்து மாத்திரமன்றி தற்கால உரையாசிரியர்களான பேராசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

கா.சு.பிள்ளை, முனைவர் மு.வரதராசனார், திருக்குறளார் முனுசாமி போன்றோரின் கருத்துமாகும். கடவுள் மறுப்பாளர்களாகிய பாவேந்தர் பாரதிதாசனும் நாவலர் இரா. நெடுஞ்செழியனும் ஆதி பகவன் என்பது முறையே "மெய்யறிவையும், உலகு முயற்சியால் முன்னேற்றம் ஆவதற்குக் காரணமான, அறிவாற்றலில் சிறந்த சான்றோனையும் குறிக்கும்." என்பதாக உரை எழுதியுள்ளனர்.

இக்குறளுக்கான உரையில் கலைஞர் பரிமேலழகர், மணக்குடவர் போன்றோரின் கருத்தை ஆதரிக்கிறாரா அல்லது பாவேந்தர், நாவலர் போன்றோரின் கருத்தை ஆதரிக்கிறாரா என்பது தெளிவாகவில்லை.

உரையினது பொது இலக்கணம் பற்றிக் கூறவந்த இடத்து நன்னூலார் (சூத்திரம்-21) "சந்தேகிக்க நின்றவிடத்து, இதற்கு இதுவே பொருளெனத் துணிந்து உரைத்தல் ஆசிரியன் பொறுப்பு" என்கிறார். இவ்வகையில் கலைஞர் உரையாசிரியருக்குரிய பெரும் பொறுப்பில் இருந்து தவறியவராகிறார். இதுகலைஞர் கொண்டுள்ள கொள்கைத் தடுமாற்றத்தின் ஒருவெளிப்பாடே என்பதில் ஐயமில்லை. முதல் அதிகாரத்தின் மற்றைய குறள்களில் வள்ளுவர் கூறும் பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், எண்குணத்தான் ஆகியன சான்றோரையே குறிப்பதாகப் பாவேந்தரையும் நாவலரையும் ஒட்டி உரை எழுதும் கலைஞர் ஆதிபகவன் சான்றோரையே குறிப்பதாக வெளிப்படையாக எழுதத்தயங்கியது ஏனோ? ஒரு அதிகாரத்தின் கருவாக ஒரு பொருளையே எடுத்தாள்வதும், தான் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஐயம் ஏற்படும் வகையில் பிறிதொரு பொருளைப் பற்றிப் பேசாது இருப்பதும் வள்ளுவர் கொள்கைகள் என்பதை கலைஞர் கவனத்தில் கொள்ளாதது ஏனோ?

* * *

**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான் நல்கா தாகிவிடின்.**


படிப்பகம்

www.padippakam.com

வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் இடம்பெற்ற இக்குற ளுக்கு "ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக்கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும்" என்று உரை எழு தும் கலைஞர் "மனிதசமுதாயத்தில் இருந்து புகழுடன் உயர்ந்தவர் களும், அந்த சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதா யம் வாழும்" என்னும் மேலதிக கருத்தையும் அங்கே சொல்கிறார். பதிப்புரை எழுதும் பேராசிரியர் மா.நன்னன் அவர்கள், இங்கே பிறிது மொழிதல் என்னும் அணியைக் கையாண்டு கலைஞர் புதுமை செய்திருப்பதாகச் சொல்கிறார். இது தவறாகும். எடுத்துக்கொண்ட கருத்தையோ உண்மையையோ, (நேரடியாகக் கூறாது) பிறிதொரு தக்க கருத்தையோ உண்மையையோ, கூறுவதின் மூலம் உய்த்து ணர வைக்கும் உத்தி பிறிது மொழிதல் என்னும் அணியாகும். இதனை நுவலா நுவற்சி, ஒட்டு, உவமைப்போலி என்றும் அணிநூலார் கூறுவர்.

"கருதிய பொருடொத்தது புலப்படுத்தற்
கொத்த தொன்றுரைப்பின்
அஃது ஒட்டென மொழிப" (தண்டியலங்காரம்)

உதாரணமாக சிறுவர் வளர்ப்புப் பற்றிய ஒரு கட்டுரையில், அத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் "முருங்கையினை முறித்து வளர்க்க வேண்டும்" என்று எழுதுகிறார். அதன்மூலம், சிறுவர்களைக் கண்டித்தும் தண்டித்தும் வளர்க்க வேண்டும் என்னும் தன் கருத்தை வெளிப்படுத்துகிறார் அவர்.

அதாவது சிறுவர்களை அடித்தும் கண்டித்தும் வளர்க்க வேண்டும் என்னும் தன் கருத்தை "முருங்கையினை முறித்து வளர்க்க வேண்டும்" எனப்பிறிதொன்றை மொழிவதன் மூலம் நம்மை உய்த்துணர வைக்கிறார். இவ்விடத்தில் முருங்கையினை முறித்து வளர்க்க வேண்டும் என்னும் அவர் கூற்று பிறிது மொழிதல் என்னும் அணியின் பாற்பட்டதாகும்.

ஆனால், மழைபற்றிப் பேசும் வான்சிறப்பு அதிகாரத்தில் இடம்பெறும் "நெடுங்கடலும்....." எனத் தொடங்கும் குறட்பா நேரடி



படிப்பகம்

www.padippakam.com

*யாகவே மழைபற்றிப்பேசுவதால் பிறிது மொழிதலென்னும் அணிக்கு அங்கே இடமில்லை. கட்டுரை கவிதை, சிறுகதை, நாடகம், தொடர் கதை போலும் துறைகளில் கைவண்ணம் காட்டும் திறமைமிக்க கலைஞர், வள்ளுவர் நூல் உரையிலும் தன் கைவண்ணத்தை "மனப்பழக்கம்" காரணமாகக் காட்டியிருக்கிறார். இது நன்னூலார் கூறும் மிகைபடக் கூறல் என்னும் குற்றத்தின் பாற்பட்ட தாகும்.*

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

**காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.**

*பிறிது மொழிதல் அணி விளங்க அமைந்த மேற்படி குறட் பாக்களுக்கானஉரைகளில் வள்ளுவர்நேரடியாகக் கூறவந்த கருத்தை எடுத்துச் சொல்லாதுவிடும் கலைஞர் தேவையற்ற இடத்தே தன் கருத்தை தேவையற்றுத் திணித்துச் செல்லும் குறைக்கு ஏனோ ஆளாகிறார்.*

* * *

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.**

*என்னும் குறளுக்கு "வானமே பொய்த்துவிடும் போது, அதன்பின்னர் அந்தவானத்தில் வாழ்வதாகச்சொல்லப்படுபவர்களுக்கு விழாக்கள் ஏது? வழிபாடுதான் ஏது?"என்று உரை எழுதியுள்ளார் கலைஞர். இங்கே 'வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுபவர்கள்' என்று யாரைக்குறிக்கிறார்? விழாக்கள் வழிபாடுகள் என்று எதைக் கருதுகிறார் என்பதில் தெளிவற்றதன்மையே காணப்படுகிறது.*

* * *

*அறன்வலியுறுத்தல் அதிகாரத்தில் இடம்பெறும்*

**அறத் தாறிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தான் இடை**


படிப்பகம்

www.padippakam.com

என்னும் குறளுக்குக் கலைஞர் தீட்டும் உரை பழைய உரையாசிரியர்களாகிய பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் உரைகளை ஒட்டிச் செல்வதாகவே இருந்தாலும் மாறுபட்ட விளக்கத்தையே தந்துசெல்கிறது. இவ்வுரையில் அற வழியில் நடப்பவர்களுக்கு பல்லக்கில் செல்பவர்களை உவமையாகச் சொல்கிறார் கலைஞர். பல்லக்கில் செல்பவர்கள் அதனைச் சுமப்பவர் களுக்குத்துன்பத்தை ஏற்படுத்துகிறார்கள். அறம் யாருக்கும் துன்பம் விளைக்கும் தன்மையது அன்று. அது குற்றமற்ற நிறை வானது. இவ்வகையில் மேற்படிகுறளுக்கு கலைஞர் வரைந்திருக் கும் உரை பொருத்தமானதாய் அமைந்திருக்கவில்லை. புத்துரை காரர்களும் சிறந்த சிந்தனையாளர்களுமான முனைவர் மு.வ. அவர்க ளும் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும் சமயக்கோட்பாடு களின் வழி நின்று உரைசொன்ன மேற்படி உரைகளை மறுத்து, அவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட உரைகளைச் செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கலைஞர், மு.வ. வையும் நாவலரையும் ஒட்டிச்செல்லாது பழைய உரையாசிரியர் வழிச்செல்வது ஏனோ புரியவில்லை.

* * *

**அருளிலார்க்கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

என்னும் குறளுக்கு "பொருள் இல்லாதவர்களுக்கு இல்லற வாழ்க்கை சிறப்பாகஇராது. அதுபோலவேகருணை உள்ளம் இல்லா தவர்களின் துறவற வாழ்க்கையும் சிறப்பாக அமையாது." என்று உரைஎழுதுகிறார் கலைஞர். இவ்வுலகம் என்பது (இல்லறமும் துற வறமும் கலந்ததாகிய) வாழ்க்கையைக்குறிக்கும் என்று பொருள் கொள்வது பொருத்தமாயினும், அதுதனித்து இல்லற வாழ்க்கையை மட்டுமே குறிப்பதாகக் கொள்வது பொருந்தாததாகும். இவ்வுலகம் என்பதற்கு இல்லறமும் துறவறமும் கலந்ததாகிய இவ்வுலக வாழ் க்கை என்று பொருள்கொண்டால் அவ்வுலகு என்பதற்குப் பொருத் தமான வேறுபொருள் கூறமுடியாத கையறு நிலையில் கலைஞர்



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பொருள் கொண்டாரா? என்று எண்ணத் தோன்றுகிறது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்னும் குறளுக்கு "அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கிவிடும்" என்று உரை எழுதுகிறார்.

அருள் என்னும் பதத்திற்கு புகழ் என்று பொருள் கொள்வது என்றுமே பொருந்ததாததாகும். இது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சியை ஒத்ததாகும்.

* * *

**மறப்பினும் ஒத்துக் கொள்ளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.**

"பார்ப்பனன் ஒருவன் கற்றதை மறந்துவிட்டால் மீண்டும் படித்துக் கொள்ளமுடியும். ஆனால் பிறப்புக்குச்சிறப்புச் சேர்க்கும் ஒழுக்கத்திலிருந்து அவன் தவறினால் அவன் இழிமகனே ஆவான்"

இங்கே கலைஞர், வள்ளுவர் பார்ப்பான் எனக்குறித்தது அந்தணரையே எனக்கொள்கிறார். நாவலர் இக்குறளுக்கான விளக்க உரையில் "பண்டைநாளில் பார்ப்பான் என்றால் நூல்களைப் பார்ப்பவன். நாழிகைக் கணக்குப் பார்ப்பவன். பருவநிலை பார்ப்பவன். நிமித்திகம் பார்ப்பவன் என்று பொருள், ஒருவகுப்பினரை அது குறிக்காது" என்று எழுதுகிறார்.

ஒழுக்கம் குறிப்பிட்ட சில வகுப்பினர்க்கே உரியதன்று. எல்லாம் வகுப்பினர்க்கும்-மக்கள் அனைவர்க்கும் ஒழுக்கம் வேண்டியதே. இவ்வகையில் வள்ளுவர் பார்ப்பனர்க்கு மாத்திரம் ஒழுக்கத்தை வலியுறுத்திச் சென்றுள்ளார் என்பதுபோலக் கலைஞர் தீட்டியுள்ள உரை சிறப்புடையது தானா?

* * *

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறைஎன்று வைக்கப் படும்.**



படிப்பகம்

www.padippakam.com

"நீதியுடன் அரசு நடத்தி மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்"

இவ்விடத்தே மன்னவன். இறை எனும் இருபதங்களுக்கும் ஒரே பொருளையே தருகிறார் கலைஞர். மன்னவன் என்னும் பதம் மன்னவனே என பிரிநிலை ஏகாரம் பெற்று வந்திருப்பின் கலைஞர் செய்திருக்கும் உரை பொருத்தமாய் அமையும். இவ் விடத்தே என்று என்னும் பதம் உவமை உருபாகக் கொள்ளப் படுவதே சரியாகும்.

* * *

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

"பெற்றெடுக்கும் மக்கள் பழிபடாத பண்புடையவர்களாக இருப்பின் ஏழேழு தலைமுறை எனும் அளவுக்குக் காலமெல்லாம் எந்தத் தீமையும் தீண்டாது". இங்கே எழுபிறப்பு என்பதற்கு ஏழுதலைமுறை எனப் பொருள் கொள்கிறார் கலைஞர்.

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு.**

"ஏழேழு தலைமுறைக்கு என்றும். ஏழேழு பிறவிக்கு என் றும் மிகைப்படுத்திச் சொல்வது போல ஒருவருடைய துன்பத்தைப் போக்கியவரின் தூய்மையான நட்பை நினைத்துப் போற்றுவதற்குக் கால எல்லையே கிடையாது.

**ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப்புடைத்து.**

"ஒரு தலைமுறையிற் பெறும்கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்"

**இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர் கொண்டனள்.**



படிப்பகம்

www.padippakam.com

"இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம் என்று நான் சொன்னவுடன் அப்படியானால் மறுபிறப்பு என ஒன்று உண்டோ? அப்போது நம்மிடையே பிரிவு ஏற்படுமெனக் கூறுகிறாயா? எனக் கேட்டுக் கண்கலங்கினாள் காதலி.

மேற்படி, குறட்பாக்களையும் அவற்றிற்கான கலைஞர் உரைகளையும் நோக்கும்போது அவர் பிறவிகளில் நம்பிக்கை அற்றவராகக் காணப்படுகிறார். வள்ளுவரும் வேறுபிறவிகளில் நம்பிக்கை அற்றவராயிருந்தார் என்பது போலவும் காட்ட முயல்கிறார்.

இக்கட்டுரையின் முற்பகுதியில் நாம் குறிப்பிட்டது போல், ஒரு கருத்தின் மீது தெளிவில்லையேல், அதில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. அதற்காக வள்ளுவரையும் கருத்துத் தெளிவற்றவராகக் காட்டமுற்பட்டிருப்பது கலைஞரின் தன் கருத்தைத் திணிக்கும் போக்காகும்.

வள்ளுவர் வாழ்வில் தான் தெளிந்த உண்மைகளையும், நம்பிக்கைகளையும் சொந்த அனுபவங்களையுமே குறட்பாக்கள் ஆக்கி வெற்றி கண்டார் என்பதில் யாருக்குமே ஐயம் வேண்டாம்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும்.

என்னும் வள்ளுவன் வாக்கை இவ்விடத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

* * *

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.**

"துறவற வாழ்வுக்குத் தகுதி உடையவராகச் செய்திடும் அனைத்தையும் கற்று உண்மைப்பொருள் உணர்ந்து அதன்படி ஒழுகுபவர் மீண்டும் இல்லற வாழ்க்கையை விரும்பமாட்டார்கள்."

துறவறம் என்பது பெண்ணைத் துறந்து வாழ்தல்



படிப்பகம்

www.padippakam.com

என்றும், அது இல்லறத்திலும் உயர்ந்தது என்றும் கருத்தெழத்தக்க வகையில் இவ்வுரையை கலைஞர் அமைத்துள்ளார். இருவித வாழ்வு நெறிகளுமே சமமானவை என்பதும் தீயன துறத்தலே துறவு என்பதும் கலைஞர் அறியாததோ?

* * *

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

**தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.**

மேற்படி குறள்பாக்களில் பிறரின் தெய்வநம்பிக்கைக்கு ஏற்ப, வள்ளுவர் அவற்றை யாத்ததாக எண்ணிடத் தக்க வகையில் கலைஞர் படைத்திருக்கும் உரைகள் அவரின் கொள்கை ஊசலாட்டத்திற்கு தக்க சான்றுகளாகும்.

இதுவரையும் கலைஞர் உரையின் குறைபாடுகளைக் கண்ட நாம், அவர் உரை சிறந்தோங்கும் சில இடங்களையும் நோக்குவோம்.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

"செய்யக்கூடாததைச் செய்யாததால் விளையும் நன்மையை விடப் பொய்கூறாத பண்பு பொய்த்துப்போகாமல் கடைப்பிடிக்கும் அறவழி நன்மை தருவதாகும்."

இதுவரை திருக்குறளுக்கு உரைவழங்கிய அனைவரினும் வேறுபட்டு நின்று, மிகச்சிறந்த உரையை இக்குறளுக்குக் கலைஞர் தந்திருக்கிறார்.

* * *

**மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரை யினாள்.**



படிப்பகம்

"திருமகள், மூதேவி எனப்படும் சொற்கள் முயற்சியில் ஊக்கமுடையவரையும் முயற்சியில் ஊக்கமற்ற சோம்பேறிகளையும் சுட்டிக்காட்டப் பயன்படுவனவாகும்."

இக்குறளுக்கு உரையாசிரியர் அனைவரும் சமயக் கோட்பாடுகளை ஒட்டி நின்றே உரை சொல்லிச்சென்றனர். கலைஞர் வள்ளுவர் கையாண்ட அதே பதங்களை உபயோகித்தே, தன்பகுத்தறிவு நோக்கிலானபுத்துரையை வழங்கியுள்ளார்.

* * *

**கல்லாதான் சொற் காமுறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண் காமுற்றற்று.**

கல்லாதவனின் சொல்கேட்க விரும்புவது மார்பகம் இல்லாத பெண்மீது மையல் கொள்வதற்கு ஒப்பானது.

இதுவரை வெளிவந்த மேற்படி குறளுக்கான உரைகளில் கலைஞர் உரையும் பரிதியார் உரைகளுமே சிறப்பானவையாய்த் தெரிகின்றன.

* * *

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பந் தரும்.**

சிறுமைத் தன்மையற்ற இனியசொல் ஒருவனுக்கு அவன் வாழும்போதும் வாழ்ந்து மறைந்தபிறகும் புகழைத்தரக்கூடியதாகும்.

* * *

**நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை**
**பூ அன்ன கண்ணா ரகத்து.**

மலர்விழி மகளிர் நெஞ்சில் விளையும் ஊடலே பண்பார்ந்த நல்ல காதலர்களுக்கு அழகு சேர்க்கும். பேராசிரியர் நன்னன் சொல்வது போல் இங்கே கவித்துவச் சிறப்போடு கலைஞர் உரை திகழ்கிறது.

www.padippakam.com

* * *

**புகழ் புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்
முன் ஏறுபோற் பீடுநடை.**

புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள் தம்மைப் பழித்துப்பேசுவோர் முன்பு தலைநிமிர்ந்து நடக்க முடியாமற்குன்றிப் போய்விடுவார்கள்.

இவ்விடத்தே ஏனை உரையாசிரியர் அனைவரும் இல் என்பதற்கு இல்லாள் என்று பொருள் கொள்ள கலைஞர் கணவனும் மனைவியுமாக நிகழ்த்துகின்ற இல்லறம் என்று பொருள் கொண்டிருப்பது சிறப்பானதாகும். புகழுக்குரிய மனைவி அமையாதவிடத்து கணவனும், புகழுக்குரிய கணவன் அமையாதவிடத்து மனைவியும் தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு தலைநிமிர்ந்து நடக்க முடியாது என்னும் அவர் கருத்து இல்வாழ்வுக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும்.

பெண்வழிச் சேறலில் சில குறட்பாக்களுக்கான உரைகளில் கலைஞர் வள்ளுவர் வார்த்தைகளுக்குப் புறத்தே போய்ப் பொருளு ரைக்கிறார். இவ்வதிகாரத்திற்கான பரிமேலழகர் உரை இன்றைய காலகட்டத்தில் ஆணாதிக்க சமுதாயம் ஒன்றின் கருத்து வெளிப் பாடாக தெரிந்தபோதும், அதுவே வள்ளுவர் காலத்து வாழ்வியல் முறை என்றே கொள்ளவேண்டும். இன்றும் அவ்வாழ்க்கை முறை யின் சிலபகுதிகள் நம்மிடையே விளங்குவதை மறுத்தற்கில்லை.

கலைஞர் உரையின் ஒவ்வொரு குறள்களையும் எடுத்து ஆராயின் அது ஒரு தனி நூலாகவே நீளும். அத்தகைய ஒரு ஆய்வு இங்கு தேவையற்றதாகும். திருக்குறளுக்கு மிக அண்மை யில் வெளிவந்த உரை என்ற வகையில் கலைஞர் ஆக்கத்தின் மீதான பார்வையின் ஆரம்பத்தை இத்தோடு முடித்துக் கொண்டு மீதியை உங்கள் சிந்தனைக்கே விடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# பரிமேலழகரும் பாரதிதாசனாரும்!

தாழ்வுற்று, அறிவு வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்ற தமிழினத்திற்குக் கவிதைகளால் உணர்ச்சியூட்டியவர் மகாகவி பாரதியார். அவரை ஆசானாய்க் கொண்டு தமிழினத்தின் ஏற்றமும் எழுச்சியுமே மூச்சாய்த் தாங்கி வாழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். சாதிப் பிரிவுகளாலும் சமயப் பிணக்குகளாலும் கூறுபட்டு வீறுகெட்டு நின்ற தமிழினத்திற்குக் கவிதைகள் மூலம் நாடி நரம்புகளில் தன்மான மிடுக்கேற்றியவர் அவர். தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை உயிரினும் மேலாக மதித்தவர் பாவேந்தர். மொழி உணர்வின்றி வாழ்ந்தோர்க்கு இனமான உணர்வைஉண்டாக்கி, அவர்தம் எழுச்சி வரலாற்றின் ஆரம்ப அத்தியாயத்தை எழுதி வைத்ததில் தந்தை பெரியாருக்கு நிகரான பங்கு புரட்சிக்கவிஞருக்குண்டு. வடவர் மதமும் கலையும் தமிழர் மொழி, கலை, பண்பாடு, ஒழுக்க நெறி களுக்குக் கேடுவிளைத்து அவற்றை அழித்துவிடும் தன்மை வாய்ந் தவை என்று எடுத்துக்கூறி, இறுதி மூச்சுவரை அவை தமிழர்பால் ஊடுருவுவதை எதிர்த்து நிற்பதையே அவர் பணியாய்க் கொண்டி ருந்தார். இவ்வகையில் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் முதலாம் உரையாசிரியர்கள் பலர் வடவர் சமயக் கருத்தின்வழி நின்று உரை வரைந்ததனால் வள்ளுவர் உண்மைக் கருத்து வெளிக் கொணரப்படவில்லை என்று கருதினார். ஆரியர் கருத்துக் கள் அறிவுக்கும் இயற்கை முறைக்கும் பொருந்தாதவை என்பதால் தமிழர் பண்பாட்டின் வழிநின்று "வள்ளுவர் உள்ளம்" என்னும் பெயரில் திருக்குறளுக்கு உரைவரையலானார். "நூல் முழுமைக்கும் அவர் உரை எழுதி முடித்தாரா? எழுதியிருப்பின் அதற்கு என்ன



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ந்தது?' என்பன தெளிவற்றனவாகவே இருக்கின்றன. எண்பத்தைந்து குறள்களுக்கான உரைகளும் விளக்கங் களுமே இன்று கிடைத்துள்ளன.

"எந்நாளில் நூல் தோன்றுகிறதோ, அந்நாளில் மக்களிடம் பரவியிருந்த பண்பாட்டின் அடிப்படையிற்றான் நூற் கருத்துக் களும் அமையும்'' என்று கூறும் பாவேந்தர், திருவள்ளுவர் திருக் குறள் பெரும்பாலும் எண்ணூற் கொள்கையின் அடிப்படையில் உருவானதாக எண்ணுகிறார். அக்கொள்கைகளை அடியொற்றியே அவர் திருக்குறளுக்கான தன்னுரையை அமைத்துள்ளார்.

"அக்காலத் தமிழர்கள் இந்த உலகம் என்றைக்கு உண்டானது என்று ஆராய்வது பயனற்றவேலை என்பர். உலகம் ஆதியினின்று -முதன்மையினின்று தோன்றிற்று என்றார். அந்தக் கருத்தின் -பண்பாட்டின் அடிப்படையில்தான் அக்கால நூற்களும் அமைந்தன. உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை அடிப் படையாகக் கொண்டு நூல் அமையாது. இதுதான் சாங்கியத்தின் அடிப்படையில் குறள் உண்டாயிற்று எனப்பட்டது. சாங்கியம் மத மன்று. அது எவராலும் உண்டாக்கப்பட்டது அன்று. அக்கருத் துக்களின் தொகுதியே எழுதாக்கிளவி எனப்பட்டது. எழுதிய பின் எண்ணூல் என்றார்கள். சாங்கியக் கருத்துக்கள் இயற்கையோடு இயைந்தவை. பகுத்தறிவுக்கு ஒத்தவை. சாங்கியக் கருத்துக்கள் - பண்பாடுகள் எவராலும் எவரைத் தம்பக்கம் இழுக்கவும் படைக்கப் பட்டன அல்ல.''

மேற்கண்டவாறாக எண்ணூல் பற்றிக் கூறும் பாவேந்தர் திருக்குறளின் 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தை 'உலகின் தோற்றம்' எனக் குறிப்பிடுகிறார். "கடவுள் வாழ்த்து' (என்னும் பெயர் சூட்டல்) இடையில் ஏற்பட்ட வேலை'' என்கிறார்.

* * *



படிப்பகம்

www.padippakam.com

முதற்குறளுக்கு அவர் பின்வருமாறு உரைசொல்வார்.

அகர முதல- அகரத்தைமுதலாக உடைய
எழுத்து- எழுத்துக்களும்
எல்லாம்- அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களும் அச்சொற்களாற் பெறப்படும்பொருள்களுமாகிய எல்லாம்
ஆதி- முதன்மையினின்று தோன்றியவை
உலகு பகவன் முதற்று - மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத் தக்கவர்.

"ஆதியாவது எல்லாப் பொருளும் தோன்றுதற்கிடமாவது. வடவர் இதை மூலப்பிரகிருதி என்பர். பகல் எனப் பொருள்படும் பகவு, அறிவு அல்லது உணர்வு எனப் பொருள்படும். பகவன் என ஆண்பாலாற் சொல்லப்படினும் பகவு (அஃதாவது உணர்வு) என்றே கொள்ள வேண்டும்" என விளக்கம் தருகிறார் பாவேந்தர்.

முதற்குறளின் கருத்துரையைப் பின்வருமாறு தருகிறார் அவர்.

"உலகும் உயிர்களும் மற்றுள்ளவைகளும் ஆதி என்பதினின்று தோன்றியவை. ஆயினும் உலக மக்கள் பெறத்தக்க பேறு மெய்யுணர்வு ஒன்றே"

இவ்வாறே இரண்டாவது குறளுக்கு "தூய அறிவுடையவனாகிய பகவனுடைய நல்ல அடியைத் தொழாமற் போவாராயின் படித்ததனால் ஏற்பட்டபயன் என்ன?" என்று பொருளுரைக்கிறார்.

"மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியாற் பயனில்லை" என்பது இதன் கருத்துரையாகும்.

"நற்றாள் தொழுதலாவது தத்துவ உணர்வு பெறுவது" என்றும் "அந்நிலையையே எண்ணூல் வீடு என்னும்" என்றும், "இது உருவ வழிபாட்டின்போது நிகழ்த்தும்திருவடி தொழுதலைக் குறிக்காது" என்றும் கூறுவார் அவர்.



படிப்பகம்

www.padippakam.com

"மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் ஆகியன யாவும் மெய்யுணர்வினையே குறிப்பதாகவும், அவை உயர்திணையாகச் சொல்லப்படுவது வழக்கு" என்றும் சொல்கிறார் பாவேந்தர்.

* * *

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேரா தார்.**

என்னும் குறளுக்கு மனத்தை ஒருவழிப்படுத்தினார் துன்புறுதல் இல்லை என்று கருத்துரைக்கிறார்.

"ஈண்டு பிறவி என்பது மாண்டு பிறப்பதையன்று, நொடி தோறும் மிகப்பலவாக வேறுபட்டுவரும் மனக் குறிப்பையே" என விளக்குகிறார் அவர்.

முதல் அதிகாரத்திற்குப் பரிமேலழகரின் கடவுள் நம்பிக்கைக்கும் சமயக் கருத்துக்களுக்கும் மாறாக மெய்யுணர்வை முதன்மைப்படுத்தி பாவேந்தர் தீட்டியுள்ள உரைகள் வலிந்து அமைக்கப்பட்டவாய் விளங்குகின்றன.

* * *

வான் சிறப்பு அதிகாரத்தின் இறுதிக்குறளுக்கு ஆன பரிமேலழகர் உரை பொருட்சிறப்பிலது என்று கூறி, அதற்கு மணக்குடவர் உரையே சிறப்பானது என்பார் பாவேந்தர்.

**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின்ற மையா தொழுக்கு.**

இக்குறளுக்கு "எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறா தொழுகும் ஒழுக்கும் வானையின்றி அமையாது' எனப்பொருளுரைத்தார் பரிமேலழகர். இங்கு "வானின்றமையா தொழுக்கு' என்பதற்கு 'மழையில் லாவிடில் மழையொழுக்கு இராது" என்றார். அவர் பொருள் சிறவாமை நோக்கினார் அல்லர்.



படிப்பகம்

www.padippakam.com

பாரதிதாசன், மணக்குடவரை ஒட்டி 'ஒழுக்கு - ஒழுக்கம்' எனக்கொண்டு பின்வருமாறு பொருள்கூறுவார்.

"உலகம் நீரின்றி நிலைபெற முடியாதென்றால் ஒழுக்கம் எப்படிப்பட்டவர்க்கும் மழையில்லாமல் நிலைபெறாது"

* * *

"நீத்தார் பெருமை" என்னும் அதிகாரம் நீத்தார் ஆக்கி அருளிய நூல்களின் பெருமைபேசுவது என்பது பாவேந்தர் கருத்தாகும். இங்கு நீத்தார் தமிழ்ச்சான்றோரையே குறிக்கும் என்கிறார் அவர்.

**"ஐந்தவித்தான்ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**

**இந்திரனே சாலும் கரி"** என்னும் குறளுக்கு, "புலன்களின் மேற் செல்லவோட்டாமல் அடக்கிய தமிழ்த் துறவியினது அறப்பனுவலுக்கு போதிய சான்று, அகன்ற விசும்பில் உள்ளவரின் கோமானாகிய இந்திரனாற் செய்யப்பெற்றதென்னும் ஐந்திர நூலா? இல்லை" என்றவாறு பொருளுரைக்கிறார்.

இவ்வாறு பொருள் கொண்டதற்கான காரணத்தை இலக்கணச் சான்றுகளுடன் பின்வருமாறு கூறுகிறார்.

"ஆற்றல் என்றால் ஆற்றலால் விளைந்த அறப்பனுவல்'. இவ்வாறு ஆனது தொழிலாகு பெயர். இந்திரன் என்றது இந்திரனாற் செய்யப்பபெற்றதாய் உரைக்கும் ஐந்திரம் என்னும் நூலை. -திருவள்ளுவர்படித்தான் என்பதில் 'திருவள்ளுவர்' அவர் அருளிய திருக்குறளுக்கு ஆனதுபோல் இவ்வாறு ஆனது ஆக்கியோன் ஆகுபெயர்"

* * *

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

"உலகின் கண் உண்மை நிறைந்த நூலைச் செய்த தமிழ்ச் சான்றோரின் பெருமையை பொய்மை உடைமையால் மறைந்தொழிந்த மொழிகள் (பாடைகள்) எடுத்துக் காட்டிவிடும்"



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்மொழி இன்றுவரை அழியாதிருப்பதற்குத் தமிழ்ச் சான்றோர் உண்மை நிறைந்த நூல்களை இயற்றியதும், ஆரியம் மறைந்தொழிய அம்மொழி வாணர்களாற் படைக்கப்பட்ட பொய்மை உடைய நூல்களே காரணம் என்றும் கூறுகிறார் பாரதிதாசனார். அவர் கருத்து ஏற்கத்தக்கது அன்று.

உலக மறையான திருக்குறள் கூறும் நீத்தாரை, தமிழ்ச் சான்றோர் என ஒரு குறுகியவட்டத்துள் வைத்துப்பொருள் கூறு வது, அந்நூலின் உலகப் பொதுமைக்குப் பங்கம் செய்வதாகும்.

* * *

இல்வாழ்க்கை அதிகாரத்தில் இடம்பெறும்

**சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்**
**நிறை காக்கும் காப்பே தலை**

என்னும் குறளுக்கு பின்வருமாறு பொருளுரைக்கிறார் பாவேந்தர். "தமிழ் மகளிர் தம்நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்துவ தோர் நிறையை காப்பதோர் காவலே உலகில் சிறந்தது. பிற வந்தேறிகள் தம் மனைவியைரைச் சிறை வைத்தலால் காக்கும் காப்பு என்ன பயனைச் செய்யும்".

காலம், மதம், மொழி, பால் இனவேறு பாடுகள் கடந்த ஒரு ஒப்பற்ற நீதிநூலுக்கு, "தமிழர் ஆரியர் வந் தேறுகுடிகள்" என்றவாறாக மக்களைப் பிரித்துப் பேசும் இத்தகைய உரைகள் ஒரு போதும் சிறப்பளிக்கப் போவதில்லை.

* * *

**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்**

"மன்னவன் தான் செய்யும் பொருளை முறைதப்பச் செய்யுமாயின், அவனாட்டுப் பருவமழை இன்றாம் வகை மேகம் பொழிதலைச் செய்யாது"



படிப்பகம்

www.padippakam.com

"பரிமேலழகர் கூறும் இப்பொருள் "வேள்விக்கு மழை கட்டுப்படும் என்று கூறி, மக்களை ஏய்க்கும் ஓரினத்தாரின் கொள் கையை வலியுறுத்துவது. மன்னவன் முறைகோடிச் செய்தால், அதன்காரணமாக மழைபெய்யாது போகுமானால் முகில்அறிவுடைப் பொருளா? அறிவுடைப் பொருள் என்பதற்கு என்ன சான்று? இருக்க முடியாது. ஆகவே, இது பொருந்தாப் பொருள்" என்னும் பாவேந்தர் அறிவுக்கும் காலத்திற்கும் பொருந்தும் உரையினைப் பின்வருமாறு வரைந்துள்ளார்.

"அரசன் செய்யத்தக்க செயல்களை முறை தவறாகச் செய்வானாயின் (ஏரி குளம் முதலிய) நீர்த்தேக்கங்கள் சீர்கேடு அடைதலாலே வானம் பெய்தலைத் தேக்குதல் செய்யமாட்டா".

இரண்டு இடங்களிலும் கோட என்பது கோடி என நின்றது என்கிறார் பாவேந்தர்.

ஏரி குளங்களைத் தூர் எடுத்து ஆழப்படுத்துவது, பெய்யும் மழையைத் தேக்குவதற்கேயாகும்.

தொண்டை நாட்டில் இன்றும் கேணியையும் கிணற்றையும் உறை என்று குறிப்பிடும் வழக்காற்றை ஆதாரமாகக் காட்டுகிறார் பாவேந்தர்.

* * *

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்**
**காவலன் காவான் எனின்.**

இங்கு 'ஆபயன்- பசுக்களாற் கொள்ளும் பயன்' என்றும் 'அறுதொழில்கள் -ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்' எனக்கொண்டும் பின்வருமாறு உரை கண்டார் பரிமேலழகர்.

"காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவானாயின், அறனில்லாத அவனாட்டுப் பசுக்களும் பால்குன்றும் அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்"

அக்காலச்சமயக் கோட்பாடுகளுக்கும் மக்கள் நம்பிக்கைக்



படிப்பகம்

www.padippakam.com

கும் பொருந்துமாறு பரிமேலழகர் கண்ட இவ்வுரைக்கு மாறாக அறிவுக்கும் காலத்திற்கும் ஏற்புடைத்தான உரையினை வரைந்துள்ளார் பாரதிதாசனார்.

"அரசன் தான் காத்தற் தொழிலைச் செவ்வனம் செய்யான் எனின் ஆறுதுறையும் நடவா-நாட்டுக்கு ஆகிக்கொண்டு வந்த பயன் ஆகாமலே அளவிற் குன்றிவிடும்"

"தமிழர் ஆண்ட நாளில் அரசியல் ஆறு துறைகளாக வகுத்து, ஆட்சிநடத்தப்பட்டது அறுதொழிலோர் என்பது உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு வரைவு ஆகிய ஆறு தொழிலுக் குரியோர். அவர்தாம் ஆறு அமைச்சர்."

"ஆபயன், பசுவினது பயன் எனப்பொருள் கொள்கிறார் பரிமேலழகர். இவ்வாறு ஆறாம் வேற்றுமைத்தொகைப் பொருள் கொள்வதாயின் ஆப்பயன் என மெய்யெழுத்து மிகுந்து வந்திருக்க வேண்டும். ஆதலின் ஆபயன் (ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என விரியும்) வினைத்தொகை" என்னும் பாரதிதாசனாரின் வாதம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. தமிழ் இலக் கணப்படி ஆபயனுக்குப் பரிமேலழகர் கொண்டபொருள் தவறான தேயாம்.

* * *

கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை என்னும் அதிகாரங் களுக்குப் பாரதிதாசனார் வலிந்துபொருள் கொள்வது தெற்றெனத் தெளிவாகிறது. ஆயினும் சில குறள்களுக்கான உரைகளில் அவர் நுண்மாண்நுழைபுலம் வெளிப்படுகிறது. பரிமேலழகரை நிகர்த்த தமிழிலக்கண இலக்கியப் பெரும்புலமை உடையவரான பாரதிதாச னாரின் நூல் முழுமைக்குமான உரை கிடைத்திருக்குமானால், சில நூறு குறள்களுக்காவது அறிவுக்கும் காலத்திற்கும் பொருந்தும் உரையினைப் பெற்றிருப்போம் என்று நம்பலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# மரபும் பகுத்தறிவும்

பண்டுதொடங்கி இதுநாள்வரை திருக்குறளுக்கு உரை எழுதியோர் இருபெரும் பிரிவுகளுக்குள் அடங்குவர். ஒரு சாராரை மரபுவழி உரைகாரர் என்றும் மறு சாராரைப் பகுத்தறிவு உரைகாரர் என்றும் பெயரிட்டு அழைப்பது பொருத்தமாகும். சிலசில குறட் பாக்களைப் பொறுத்தமட்டில் உரைகளில் சிறுசிறு வேறுபாடுடைய வர்களாகக் காணப்பட்டாலும் மக்கள் பண்பாடு, சமயக் கோட்பாடு, அவர்களின் வழிவழி நம்பிக்கைகள், சடங்குகள் முதலிய வற்றை ஒட்டிச்சென்று உரை எழுதியோர் மரபுவழி உரைகாரர் ஆவர். காலத்திற்குப் பொருந்தாதன என்று கருதி வழிவழி நம்பிக்கைகள், சடங்குகள் சமயக்கோட்பாடுகள் முதலியவற்றை நிராகரித்து அறி வுக்கு முதன்மை கொடுத்து உரைஎழுதியோர் பகுத்தறிவு உரை காரர் ஆவர். இவ்வகையில், பண்டைய உரையாசிரியர்களான மணக்குடவர், காலிங்கர், பரிதியார், பரிப்பெரு மாள், பரிமேலழகர் முதலியோரும் புத்துரைகளரான பேராசிரியர் முனைவர், மு.வ. அவர் களும் மரபுவழி உரைகாரர்களாகவும் புலவர் குழந்தை, நாவலர் இரா.நெடுஞ்செழியன், கலைஞர் மு.கருணாநிதி, பாவேந்தர் பாரதி தாசன் ஆகியோர் பகுத்தறிவுஉரைகாரர்களாவும் காணப்படுகின்றனர்.

தமிழறிஞர் கி. வா. சகந்நாதனார், திருக்குறளார் முனுசாமி போன்றோர், முதல்வகையுளும் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, மொழிநூலறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் முதலியோர் இரண்டாம் வகையுளும் அடங்குவர்.

சிலசில குறட்பாக்களுக்கான உரைகளில் மரபுவழி உரை காரர் பகுத்தறிவு உரைகாரர் போலவும், பகுத்தறிவு உரைகாரர் மரபுவழி உரைகாரர் போலவும் செயற்பட்டிருப்பின் அது புறநடை



படிப்பகம்

www.padippakam.com

யாகக் கொள்ளப்படவேண்டியதே. தேர்ந்தெடுத்த சில குறட்பாக் களுக்கான உரைகளில் இருதிறத்தாரும் வேறுபட்டு நிற்கு மாற்றை ஒப்பிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

* * *

அகனமர்ந்து செய்யாள் உறையும்முகனமர்ந்து
நல்விருந்தோம்புவான் இல்.

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரை யினாள்.

முதற்குறளுக்கு 'திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகமினினாய்த் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லின்கண்' என்று பொருள் கூறுவார் பரிமேலழகர். இவர் செய்யாள்-திருமகள் என்கிறார். இவ்வாறே இரண்டாம், மூன்றாம் குறள்களில் இடம் பெறும் செய்யவள் தாமரையினாள் ஆகியனவும் திருமகளையே குறிப்பதாக அவர் உரை எழுதியுள்ளார். ஏனை உரையாசிரியர்களான மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார், பேராசிரியர் மு.வ. ஆகியோரும் அவ்வார்த்தைகள் திருமகளையே குறிப்பதாகக் கொள்கின்றனர்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'நல்ல விருந்தி னராக வீடுதேடி வருபவரை முக மலர்ச்சியோடு போற்றி வரவேற்கின் றவனுடைய வீட்டில் செல்வம் என்னும் திருமகள் மகிழ்ச்சியோடு வாழ்வாள்' என்று பொருள் சொல்கிறார். கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் செய்யவள் செல்வம் என்னும் திருமகள் என்றே பொருள் கொள்கிறார்.



படிப்பகம்

இரண்டாவது திருக்குறளுக்குப் பண்டை உரையாசிரியர்களும் பேராசிரியர் மு.வ. அவர்களும் 'அழுக்காறுடையானைத் திருமகள் தன் தமக்கையாகிய மூதேவிக்குக்காட்டி நீங்கும்' என்றவாறாக உரை எழுதியுள்ளனர். இவர்கள் தவ்வை திருமகளின் தமக்கையாகிய மூதேவி எனச் சொல்கின்றனர்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'பொறாமை உடையவனைச் செல்வத்தின் உருவகமாகக் கற்பனையாகக் கூறப்படும் திருமகள். வறுமையின் உருவகமாகக் கற்பனையாகக் கூறப்படும் மூத்தமகளுக்கு அடையாளம் காட்டிவிட்டு. அவனைவிட்டு நீங்கிவிடுவாள்' என்று உரை எழுதுகிறார்.

'செல்வத்தைத் திருமகள் என்றும் செய்யவள் என்றும், தாமரையினாள் என்றும் உருவகப்படுத்திக் கூறுவதும் வறுமையை மூதேவி என்றும் தவ்வை என்றும் முகடி என்றும் உருவகப்படுத்திக் கூறுவதும் நூல்வழக்காகும்' என்றும் விளக்கம் கூறுகிறார் நாவலர்.

'செல்வத்தை இலக்குமி என்றும், வறுமையை அவளது அக்காள் மூதேவி என்றும் வர்ணிப்பதுண்டு. பொறாமைக்குணம் கொண்டவனை அக்காளுக்கு அடையாளம்காட்டிவிட்டு, தங்கை இலக்குமி அவனைவிட்டு அகன்று விடுவாள்' என்று இக்குறளுக்கு உரை கூறுவார் கலைஞர்.

செய்யாள், செய்யவள், தாமரையினாள் என்னும் பெயர்கள் இந்துசமயச் சார்புடையவை என்பதே தமிழறிஞர் கருத்தாகும். செய்யாள், செய்யவள் என்னும் பெயர்கள் சிவப்பு நிறத்தவள், சிறப்பானவள் என்னும் இருபொருள் தருவனவாகும். சிவந்த இதழ்களையுடைய செந்தாமரை மலரின்கண் வீற்றிருக்கும் காரணத்தால் திருமகளைச் சிவந்த நிறமுடையவளாகப் போற்றுவது வழக்கமாகும். "செய்யோள் சேர்ந்த நின்மாசிலகம்" என்று பரிபாடல் கூறும். திருமகளைக் குறிக்குங்கால் செய்யாள், செய்யவள் என்னும் பெயர்களைச் சிறப்பானவள் என்னும் பொருளில் எடுத்தாளுதல் வழக்கில்லை.

www.padippakam.com

**'வெள்ளிய கரியன செய்ய வேறுள**
**கொள்ளைவான் கொடிநிரைக் குழாங்கள்**
**தோன்றுவ.'** (மந்.சூழ்.படலம்)

என்னும் கம்பன் கவிதையின் அடிகளுக்கு 'வெள்ளை, கறுப்பு, சிவப்பு முதலாய பலவேறு நிறத்தவான கொடிகள் பறந்தன' என்று உரை சொல்லுவர் புலவர்.

தாமரைக் கண் வீற்றிருப்பதனாற் பிரமனை தாமரைக் கண்ணான் என்றும் திருமகளைத் தாமரையினாள் என்றும் தமிழிலக்கியங்கள் போற்றும்

**கழனிபடு நடவையில் கமலத்து அணங்கு ஓர்**
**கை அணை முகந்து செல்ல.**

என்னும் அடிகளில் திருமகளைக் கமலத்து அணங்கு என குமரகுருபரர் கூறுகிறார். 'நளினப்பொகுட்டில் வீற்றிருக்கும் நங்கை' என்றும் அவளையே அவர் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிற் பாடுகிறார். எனவே செய்யாள், செய்யவள், தாமரையினாள் என்னும் பெயர்கள்திருமகளைக் குறிக்க இந்துமதக் கருத்துக்களின் அடிப்படையில் எழுந்தவை என்பதே வலுவுடையதாகும்.

* * *

**செவி உணவிற் கேள்வி உடையார்**
**அவி உணவின் ஆன்றோரோடொப்பர் நிலத்து.**

**இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்**
**அமையார் தோள் அஞ்சுபவர்.**

**புறத்தலின் புத்தேள் நாடுண்டோ நிலத்தொடு**
**நீரியைந் தன்னார் தொடர்பு.**

**தேவர் அனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழுகலான்.**



படிப்பகம்

www.padippakam.com

செவியுணவாகிய கேள்வியினை உடையார் நிலத்தின் கண்ணராயினும் அவியுணவினை உடைய தேவரோடு ஒப்பர்' என்று முதற்குறளுக்கு உரைவரைந்தார் பரிமேலழகர். இவர் "அவியுணவு-தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுப்பன" என்கிறார். ஏனைப் பண்டை உரையாசிரியரும் அவியுணவின் ஆன்றோர். வேள்வித்தீயில் அவிப் பணம் கொள்ளும் தேவர் என்றே பொருள் கூறுகின்றனர்.

'செவியுணவாகிய கேள்வியறிவினை மிகுதியாக உடைய வர்கள் உலகத்தில் நோற்றலின் காரணமாகக் குறைந்த அளவு உணவினையுடைய நிறைந்த அறிவினையுடையவர்க்கு ஒப்பான வராவார்கள்' என்று உரைஎழுதுவார் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

இவர் அவி உணவு - குறைந்த அளவு உணவு என்றும். ஆன்றோர்-நிறைந்த அறிவினையுடையவர் என்றும் பொருள் கொள்கிறார்.

இரண்டாவது குறளுக்கு தேவரைப் போல இன்புற்று வாழி னும் பெருமையிலராவர். மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர் என்றவாறு பண்டை உரையாசிரியரும் பேராசிரியர் மு.வ. அவர்களும் கருத்துரைப்பர்.

'மனைவியின் மூங்கிலையொத்த தோள்களுக்கு அஞ்சி நடப்பவர்கள் எப்பொழுதும் அயராது பணியாற்றும் பெரியோர் களைப்போல வாழ்ந்தாலும் பெருமைக்குரியவர்கள் ஆகமாட்டார்கள்' என்று உரைஎழுதுகிறார் நாவலர். இவர் இமையார் - எப்பொழுதும் அயராது பணியாற்றும் பெரியோர்கள் எனப்பொருள்கொள்கிறார்.

கலைஞர் மனைவியின் அழகுக்காக அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் தங்களைத் தேவாம்சம் படைத்தவர்களாகக் கற்பனை யாகக் காட்டிக்கொண்டாலும் அவர்களுக்கு உண்மையில் எந்தப் பெருமையும் கிடையாது என்றவாறாக உரை எழுதுகிறார். இவர் இமையார் தேவர்கள் என்றே கொள்கிறார்.

தேவர்கள் கண்கள் இமைத்தலிலர் ஆதலால் இமையார்



படிப்பகம்

www.padippakam.com

(இமையவர், இமையோர்) எனப் பெயர் கொண்டனர்.

**கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்**
**வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி**
**நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்**
**அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு!**

**(நளவெண்பா)**

தமயந்தியின் சுயம்வரத்திற்குத் தேவர்களும் நளனைப் போலவே வடிவுகொண்டு வந்து அமர்ந்திருந்தனரென்றும், அங்கே நளனின் அடிகள் நிலத்தில் ஊன்றியிருந்தமையாலும் கண்கள் இமைத்துக் கொண்டிருந்தமையாலும் அவன் அணிந்திருந்த மாலை வாடிக்காணப்பட்டமையாலும் அவனைத் தேவரினின்றும் வேறுபடுத்தித் தமயந்தி அறிந்துகொண்டாள் என்றும் நளவெண்பா கூறுகிறது.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையவர் தம் விருந் தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்னும் தமிழ்விடு தூது அடிக ளில் தேவாமிர்தமே இமையவர்தம் விருந்தமிழ்தம் எனக் குறிக்கப் படுகிறது.

ஆனால், நாவலரோ இமையார் இமைப்பொழுதும் அயராது பணியாற்றும் பெரியோர் எனக்கூறித் தன் பகுத்தறிவு வாதத்திற்கு அரண் சேர்ப்பது போற்றற்குரியதாகினும் அப்பொருள் வழக்காற்றில் இல்லாதது என்பதே உண்மையாகும்.

* * *

**வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்**
**பூரியர்கள் ஆழும் அளறு.**

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான் புக்கழுந்தும் அளறு.**

"உயர்ந்தோர், இழிந்தோர் என்னாது விலை கொடுப்போர் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள் அக்குற்றத்தை



படிப்பகம்

www.padippakam.com

அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம்'' என்றவாறு முதற்குறளுக்கு உரை கூறுவார் பரிமேலழகர்.

இவ்வாறே, ஏனைப்பண்டை உரையாசிரியரும் பேராசிரியர் மு.வ. அவர்களும் அளறு நரகம் (நிரயம்)என்றேகொண்டனர்.

"பொதுமகளிர் அறிவில்லாத கீழ்மக்கள், வீழ்ந்து அழுந் தும் குழைசேற்றுக் குழியாவர்'' என்று இக்குறளுக்குக் கருத்துரை தருகிறார் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

இரண்டாவது குறளுக்கு "தன்னிச்சையாகச் செயற்படும் பேதை எக்காலத்திலும் துன்பமெனும் சகதியில் அழுந்திக்கிடக்க நேரிடும்'' என்று உரைவரைந்தார் கலைஞர்.

நாவலரும் கலைஞரும் **அளறு - சகதி** எனப் பொருள் கொள்கின்றனர்.

"அளறு என்பதை நரகம் என்றோ மேல் உலகம் என்பதைச் சொர்க்கம் என்றோ வள்ளுவர் கொள்ளவே இல்லை. அளறு என் பதற்கு பெருந்துன்பத்தில் ஆழ்தல் என்றுதான் பொருள் கொண்டுள் ளார். துன்பங்களை மிகுதியாகத் தரும் ஒன்றை அளறு என்றும் நரகம் என்றும் சொல்லுவது நூல் மரபாகும்.''

இவ்வாறு பகுத்தறிவு உரைகாரர் சார்பில் விளக்கம் தருகிறார் நாவலர்.

இரு பகுதியினர் கொள்ளும் பொருள்களும் அவரவர் கருத்தின்வழி எழுந்து நின்று வேறுபாடுடையவாய் விளங்கு கின்றன.

* * *

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.**

இக்குறளுக்கு "கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்


படிப்பகம்

www.padippakam.com

தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு'' என்று உரை வரைந்தார் பரிமேலழகர்.

இதற்கு மார்க்கண்டேயரையும் நந்திகேசுவரரையும் உதாரணம் காட்டுவர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

''தவம் செய்வதன் மூலம் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்களுக்குக் கூற்றுவனை (இறப்பை) வென்று நிற்றலும் கூடக் கைகூடும்'' என்று உரை வரையும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். ''கூற்று என்றாலும் கூற்றம் என்றாலும் உயிர் வேறு உடல் வேறு என்று கூறுபடுத்துகின்ற ஒன்று- அதாவது சாவு என்று தான் பொருள்படும். அதனை ஆண்பாலாக உருவகப்படுத்தி கூற்றுவன் என்று சொல்வதும் உண்டு. எருமைக்கடா மீது ஏறி, உயிரைப் பறிக்க வருகின்றவன் எமன் என்பதெல்லாம் வடநூலார் கட்டிய கற்பனைக் கதையாகும். கூற்று என்பதற்கு எமன் என்று பொருள் கொள்வது பொருந்தி வராது'' என்று விளக்கம் சொல்கிறார்.

இக்குறளுரையில் கூற்றம் என்பதைப் பகுத்தறிவு உரைகாரர் சாவு எனக் கொண்டும் மரபுவழி உரைகாரர் சாவை நிகழ்த்தும் எமன் எனக்கொண்டும் வேறுபட்டு நிற்கின்றனர்.

* * *

**உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்துள்**
**அலகையா வைக்கப் படும்.**

**அருஞ்செவ்வி இன்னாமுகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய் கண்டன்ன துடைத்து.**

''உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோர் பொருளைத் தன் புல்லறிவான் இல்லை என்று சொல்லுவான் மகன் என்று கருதப்படான் வையத்துக் காணப்படுவதோர் பேய் என்று கருதப்படும்'' என்றவாறு முதற்குறளுக்குப் பொருள் உரைப்பார் பரிமேலழகர்.

பரிமேலழகரைப் போலவே ஏனைப் பண்டை உரையாசிரியர்


படிப்பகம்

www.padippakam.com

களும் பேராசிரியர் மு.வ. அவர்களும் அலகை என்பதை பேய் என்றும் பசாசு என்றும் கூறுகின்றனர்.

விளக்கவுரையில் உலகத்தார்உண்டென்ப தில்லெண்பானை "தன்யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை என்று கூறினார் வள்ளுவர்" என்கிறார் பரிமேலழகர். இதனால் "அலகை ஆற்றலும் வடிவும் உடையது" என்னும்கொள்கை உடையவர் பரிமேலழகர் என்பது தெளிவாகிறது.

கலிங்கத்துப் பரணியும் பேய்களைப்பயங்கர வடிவுடையனவாகவும் பேசும் ஆற்றலுடையவையாகவும் விளக்கமாகச்சித்தரிக்கிறது.

"அறிவால் உயர்ந்தோர்கள் காரணகாரிய விளக்கத்தோடு உண்டு என்று நிலைநாட்டும் ஒன்றை. ஒரு காரணமும் காட்டாமல் இல்லை என்று சொல்கின்ற ஒருவன் உலகில் அச்சத்தின் உருவெளித் தோற்றமாகக் கருதப்படுவான்" என்று இக்குறளுக்குப் பொருள் கூறும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் "அச்சத்தின் உருவெளித் தோற்றத்தைத்தான் பேய் என்றும், அலகை என்றும் கூறுவது. இது நூல்வழக்கு ஆகும். பேய்என்றோ அலகை என்றோ உயிருள்ள பொருள் எதுவும் உண்மையில் இல்லை' என்று விளக்கம் தருகிறார்.

கலைஞர் இதற்கு. "ஆதாரங்களைக் காட்டி உண்மை என்று கூறப்படுகின்ற ஒன்றை வேண்டுமென்றே மறுத்துரைப்பவரைப் பேய்களின் பட்டியலில்தான் வைக்கவேண்டும்" என உரை வரைகிறார். பேய் என அவர் யாதினைக் கருதுகிறார் என்பது தெளிவிலதாக இருக்கிறது.

இங்கே மரபுவழி உரைகாரர் பேய் அலகை என வள்ளுவர் குறிப்பிட்டது உயிரும் ஆற்றலும் வடிவுமுடைய ஒரு பொருள் எனக்கொண்டும் பகுத்தறிவு உரைகாரர் அது 'அச்சம் தரத்தக்க வடிவம்' எனக்கொண்டும் வேறுபட்டு நிற்கின்றனர்.

* * *


படிப்பகம்

www.padippakam.com

**அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலுமென் நெஞ்சு**

**பருவரலும் பைதலும் காணான் கொல்காமன்**
**ஒருவர் கண் நின்றொழுகுவான்.**

"இக்கனவிய குழையை உடையாள் இப்பொழிற்கண் உறை வாளோர் தெய்வமகளோ அன்றி ஒரு மயில் விசேடமோ. அன்றி ஒரு மானுட மாதரோ இவளை இன்னள் என்று துணிய மாட்டாது என் நெஞ்சு மயங்கா நின்றது" என்று முதற்குறளுக்கு உரைகூறுவார் பரிமேலழகர்.

ஏனைப்பண்டை உரையாசிரியர்களும் பேராசிரியர் மு.வ. அவர்களும் அணங்கு-தெய்வப் பெண் என்றே பொருள் கூறுவர்.

"கனத்த காதணிகளையுடைய இப்பெண் வாட்டும் ஒரு அழகின் வடிவமோ? அல்லது ஒரு அழகான மயிலோ? அல்லது ஒரு மங்கையோ? இவள் இன்னவள் என்று அறியமாட்டாமல் என் உள்ளம் மயங்குகிறதே" என்று உரை கூறுவார் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

கலைஞர் "எனை வாட்டும் அழகோ! வண்ணமயிலோ! இந்த மங்கையைக்கண்டு மயங்குகிறதே நெஞ்சம்" என்று உரைசொல்வார்.

நாவலரும் கலைஞரும் "அணங்கு" "மயக்கம் தரத்தக்க அழகின் வடிவம்" என்று கொள்கின்றனர்.

இரண்டாவது குறளுக்கு "காமம் நுகர்தற்குரிய இருவரிடத்தும் ஒப்பநிற்றல் ஒழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள் அவ்விடத்துப் பசப்பானாய பருவரலும் படர்மிகுதியும் அறியான் கொல்லோ" என்றவாறு உரைஎழுதுவார் பரிமேலழகர்.

இவர் காமனை காமக் கடவுள் என்று கூறுகிறார். பண்டை உரையாசிரியர் ஏனையவரும் காமதேவன் என்றும் காமன் என்றும் கூறி. அவனை ஒருதேவனாகவே போற்றுகின்றனர். நாவலர் "காதலன்பை நுகர்தற்குரிய ஆண். பெண் என்ற இருபாலரிடத்



படிப்பகம்

www.padippakam.com

திலும் ஒப்பநில்லாமல் காதலரிடத்தே நின்று வருத்துகின்ற காமன் என்னுடைய துன்பமிகுதியையும் பசலைநோயையும் அறியமாட்டானோ?' என்று இக்குறளுக்கு உரை சொல்லுகிறார். காமன், அணங்கு பற்றியதன் கருத்தைப்பின்வருமாறு விளக்குகிறார்.

"காமன், ஆண்பாலாகக் கூறப்படும் காதல், அதாவது மகளிரை வருத்தும் ஆண்பாற் காதலை காமன் என்றும் ஆடவரை வருத்தும் பெண்பாற் காதலை அணங்கு என்றும் கூறுவது நூல் மரபாகும்."

நாவலர் விளக்கத்திற்கு மாறாக பண்டை உரையாசிரியர் உரை வகுத்தவற்றுக்குக்கேற்ப முன்னாளில் தமிழகத்தில் காமன் கடவுளர்களில் ஒருவனாகப் போற்றப்பட்டான் என்பதே இலக்கிய ஆதாரமுடையதாகும்.

"காதல் விளைக்கும் தேவனைக் காமன் என்றும் காமவேள் என்றும் தமிழர் அழைத்தனர். தாம் கருதிய காதலனைக் கணவனாகப் பெறுவதற்கும், பிரிந்த கணவனை மீண்டும் அடைவதற்கும் காமன் கோயிலிற் சென்று மங்கையர் வழிபடும் வழக்கம் அந்நாளில் இருந்தது. கோவலன் மாதவி என்னும் நடிகையின் மையலில் மூழ்கித் தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்திருந்தபோது, காமவேள் கோயிலிற் சென்று தொழுதால் கணவன் மீண்டும் வந்துசேர்வான் என்று அக்கற்பரசியிடம் அவள் உயிர்த்தோழி எடுத்துரைத்தாள். "கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில் காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு தாமின்புறுவர் உலகத்துத் தையலார்," என்று கூறினாள் தோழி. இதனால், காவிரிப் பூம்பட்டினத்தில் அந்த நாளில் காமன் கோயில் இருந்ததென்றும் குலமாதர் அங்கு சென்றுவழிபடும் முறை இருந்த தென்றும் நன்றாக விளங்குகின்றது."(தமிழின்பம்)

பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் இவ்விளக்கம் பண்டை உரையாசிரியர்கள் கொண்ட பொருளுக்கு அரண் செய்து நிற்பது புலனாகிறது.

* * *



படிப்பகம்

www.padippakam.com

**மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.**

"தன் அடியளவானே எல்லாஉலகத்தையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும் மடியிலாத அரசன் முறையானன்றி ஒருங்கே எய்தும்" என்றவாறு இதற்குப் பொருளுரைத்தார் பரிமேலழகர். மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர், பேராசிரியர் மு.வ. ஆகியோரும் "முன் ஒருநாள் அசுரேசனிடத்துச் சென்று, மூவடி வேண்டி அளந்தவனாகிய திருமால் தாவிக்கொண்ட அனைத்து உலகினையும் சோம்பல் இல்லாத மன்னன் ஒருங்கே எய்தும்" என்றவாறே உரை எழுதிச் செல்கின்றனர்.

"சோம்பல் இல்லாதவர் அடையும் பயன் சோர்வில்லாத ஒரு மன்னன் அவன் சென்ற இடமனைத்தையும் தனது காலடி எல்லைக் குள் கொண்டு வந்ததைப் போன்றதாகும்" என்று இதற்கு உரைவகுத்தார் கலைஞர். மரபுவழி உரைகாரர் புராணக் கதைவழி நின்று இக்குற ளுக்குப் பொருள் கூறக், கலைஞர் தன் பகுத்தறிவு வழி நின்று உரைவரைந்திருக்கும் தன்மை சிறப்புக்குரியதே.

மேற்காட்டியவாறாக, மரபுவழி உரையாசிரியர்களும் பகுத் தறிவு உரையாசிரியர்களும் தத்தம் கருத்தின்வழி நின்று சில குறள் களுக்குப் பொருள் கூறியிருப்பது, அவற்றை ஒப்பிட்டு நோக்கு வார்க்கு களிபேருவகை பயக்க வல்லதாகும். இத்தகைய ஒப்பு நோக்குகள் திருக்குறளுக்கு இன்னும் சில உரைகள் வெளிவர வழி வகுக்கலாம். இருதிறத்து உரைகாரர்களும் மோதிக்கொள்ளும் இடங்கள் ஒப்புயர்வில்லாத் திருக்குறளை ஆக்கியளித்த வள்ளுவ னின் ஆற்றலை எண்ணி எண்ணி வியக்குமாறு செய்கின்றன. "எப் பாலவரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி' என்னும் பாராட்டு திருக்குறளுக்கு என்றும் பொருந்துவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# தாமரைக் கண்ணான்

**தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு.**

இக்குறளுக்கு, "ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கண் துயிலும் துயில்போல வருந்தாமல் எய்தலாமோ அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மாலுலகம்" என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

"தம்மால் விரும்பப்படுவோரது மெல்லிய தோளின்கண் துயிலும் துயிலின் இனிதோ இந்திரனது சுவர்க்கம்" என்று பொருளுரைத்தனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

"தாமும் தாமும் விரும்பும் இன்பம் போலே இருக்குமோ வைகுண்டத்தில் இன்பம்" என்று எழுதினார் பரிதியார்.

காலிங்கர் "நெஞ்சே, நாம் விரும்புதற்கு உரிமையுடையோர் தமது மென்தோள் மேவித் துயிலும் துயிலின் இனிமைபோல இனிதோ தான் இஃது அன்று; யாதெனில் ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறைகூறும் அயனுலகு ஆண்டு உறும் இன்பம்" என்றார்.

இவ்வுரைகளில், "தாமரைக் கண்ணான் உலகு" என்பதற்கு திருமால் உலகாகிய வைகுந்தம் என்று பொருள் கொள்கின்றனர் பரிமேலழகரும் பரிதியாரும்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் "இந்திரனுலகாகிய அமராவதி"யை இது குறிப்பதாகக் கொள்கின்றனர்.

காலிங்கர் "தாமரைக் கண்ணான்" என்பது தாமரையிடத்



படிப்பகம்

www.padippakam.com

தான் என்றது என விளக்கம் சொல்லி, ``படைப்புக் கடவுளாகிய பிரமாவின் உலகு-அயனுலகு`` என்கிறார். இங்கே ``கண்`` என்பதை ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபாகக் கொள்கிறார் அவர்.

'பரமனை மதித்திடாப் பங்கயாசனன்'

'ஓவிலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில் வாழ்அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் நின்னினும் பெரிதோ - (வில்லி.பார)

அந்தாமரைமேல் அயன்-(தனிப்பாடல்)

மேற்காட்டிய செய்யுளடிகளில் படைப்புக் கடவுளாகிய அயன் ``பங்கயாசனன்`` என்றும் ``பூவில் வாழ் அயன்`` என்றும், ``அந்தாமரைமேல் அயன்`` என்றும் குறிக்கப்படுகிறார். இவ்வகையில், ``தாமரைக் கண்ணான்`` என்பதற்குத் தாமரையின்கண் வீற்றிருப்பவனாகிய ``அயன்`` எனக் காலிங்கர் கொண்டபொருள் இலக்கிய வழக்கின்பாற்பட்டது என்பது தெளிவாகிறது. விளக்கத்தில் மேலும் தாமரைக்கண்ணான் உலகு ``மாயவன் உறையும் வைகுந்த உலகம் என்றும் ஆம்`` எனக்கூறியிருப்பதால் பரிமேலழகரும் பரிதியாரும் கொண்டபொருளுடன் உடன்பாடுடையவராகவும் காலிங்கர் காணப்படுகிறார்.

ஆடவர் கண்கள் வீரம் விளைக்கும் வேளைகளிலும் கோபம் மிகும் நேரங்களிலும் சிவந்து விளங்கும் தன்மையவாய் இருப்பதால் செங்கண்கள் என்று சொல்லப்படும். சிவந்து விளங்கும் செந்தாமரை மலரை அக்கண்களுக்கு உவமையாக்கி தாமரைக்கண்கள் என்று இலக்கியங்கள் போற்றுவது வழக்கமாகும். தாமரைக் கண்கள் உவமைத் தொகையாகும்.

தமிழ் இலக்கணப்படி தாமரைக்கண்ணான் காரண இடுகுறிப்பெயர் என்றும் சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com

"காரணங் கருதிய பொழுது அக்காரணங்களையுடைய பல பொருளுக்குஞ் செல்வதாயும் காரணம் கருதாத பொழுது இடுகுறி யளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாயுமுள்ள பெயர் காரண இடுகுறிப் பெயர் ஆகும்" என்பார் நன்னூலார். (நன். சூத். 62. ஆறுமுகநாவலர் உரை)

காரணம் கருதும் பொழுது ஆடவர் கண்கள் அனைத்துமே தாமரைக் கண்கள் என்று கூறத்தக்கவையே. இவ்வகையில் பிரமா, விட்டுணு, உருத்திரன், இந்திரன், இராமன், இராவணன், சூரன், சேயோன் முதலிய அனைவரும் தனித்தனி "தாமரைக் கண்ணான்" என்று குறிக்கத்தக்கவர்களே.

'தாமரைக்கண்ணான் உலகு' -இந்திரனுலகென்றுரைப்பாருமுளர். தாமரைக்கண்னான் என்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃதுஉரையன்மை அறிக" என மணக்குடவர், பரிப் பெருமாளை மறுப்பார் பரிமேலழகர். இது தவறானதே. தாமரைக் கண்ணான் காரணப்பெயராய் இந்திரனைக் குறிக்கும் என்பதை இலக்கணப் பெருங்கடல் எனத்தக்கவரான பரிமேலழகர் சிந்தை கொளத் தவறியது ஏனோ என்பது புதிராகவே இருக்கிறது.

"இச்சுவைதவிர வேறோர் இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்றார் ஆழ்வார்களில் ஒருவர். இந்திரனுலகாகிய அமராவதியை இன்பத்தின் நிலைக்களனாகச் சொல்வது இலக்கிய மரபாகும். வள்ளுவரும் "காதலியின் தோள் மேவித் துயிலும் இன்பத்தை, அமராவதியில் கிட்டும் இன்பத் திற்கு ஈடாகுமோ?" என்று கேட்டு குறட்பாவை ஆக்கியிருக்கலாம். இவ்வகையில் மணக்குடவரும் பரிப்பெருமாளும் சொன்ன உரைகள் தவறுடையவை அன்று என்பதில் ஐயமில்லை.

இப்பெயர் காரணம் கருதாத பொழுது இடுகுறியளவாய் நின்று திருமாலைக் குறிப்பதாகக் கொள்வார் பரிமேலழகர்.

செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ (நளவெண்பா)

சிறியதோர் முறுவலுந் தெரியச் செங்கணான் (கம்.கும்.வதைப்படலம்)


படிப்பகம்

www.padippakam.com

தாமரைக் கண்ணான் என்நெஞ்சினூடே. (திருவாய்மொழி7,3,1)
திருமகள் போல் வளர்த்தேன் செங்கண்மால்தான்
கொண்டு போனான் . (பெரியதிரு 6.6.4)

மேற்படி செய்யுளடிகளில் செங்கணான் தாமரைக்கண்ணான் என்னும் பெயர்கள் திருமாலையே குறிப்பதால். பரிமேலழகர் கருத்துக்கேற்ப அவை திருமாலுக்கான இடுகுறிப் பெயர்களெனக் கொள்வதில் தவறேதுமில்லை. எனவே, தாமரைக் கண்ணான் இடுகுறியளவாய்த் திருமாலுக்கும் காரணப்பெயராய் அனைத்து ஆடவர்க்கும் உரிய காரண இடுகுறிப்பெயராகும்.

இறைவன் தன்மையை இறைவிமேல் ஏற்றிக்கூறும் கவி மரபும் உண்டு. "நஞ்சுண்டு கறுத்த கண்டி" என்றும் "முக்கண்ணி" என்றும் உமையை இலங்கியங்கள் போற்றியுள்ளன. இவ்வாறே தாமரைக் கண் வீற்றிருக்கும் திருமகளுக்கு இறைவராகிய திருமாலைத் தாமரைக் கண்ணான் என வள்ளுவர் சொல்லியிருக்கலாம் என்றும் கொள்ளலாம். இவ்விடத்தே தாமரைக் கண்ணான் திருமாலுக்கான காரணப் பெயராகிறது.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "தாமரைக் கண்ணான்" என்பதை உவமைத் தொகையாகக் கொண்டு பின்வருமாறு உரை கூறுவார்.

"தாமரைபோன்ற கண்ணினையுடைய தலைமகனால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது மென்மையான தோள்களின்மேல் தலைமகன் துயின்று இன்பம் பெறுவதைக்காட்டிலும் இந்த உலகில் இன்பந்தருவது வேறு ஏதேனும் உண்டோ?"

கொள்கைக்கேற்ப வலிந்துசெய்யும் உரையாக இது காணப்படுகிறது.

முனைவர் மு.வ. அவர்கள் "தாமரைக் கண்ணனுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில்போல் இனிமை உடையதோ?" என உரை எழுதுகிறார்.


படிப்பகம்

www.padippakam.com

இங்கே, "தாமரைக்கண்ணன்" என்பது தாமரைபோற் கண்ணனா? தாமரைக் கண் வீற்றிருப்பவனா? இதுயாரைக் குறிக் கின்றது? என்னும் ஐயங்களுக்கான விடைகிடைத்திலது.

கலைஞரும் இவ்வாறே, "தாமரைக் கண்ணன் உலகம்" என்றெல்லாம் சொல்கிறார்களே அது என்ன! அன்புநிறைந்த காதலி யின் தோளிற் சாய்ந்து துயில்வது போல அவ்வளவு இனிமை வாய்ந்ததா?" என்று உரை கூறுகிறார்.

இங்கும் தாமரைக் கண்ணான் மேலான ஐயம் தீர்ந்திலது.

இதுகாறும் கூறியவற்றால் எடுத்தாண்ட குறளுக்கு பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதியார், பரிப்பெருமாள் ஆகியோர் உரைகள் அனைத்துமே சிறப்பானவையாம் என்பது தெளிவாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தோன்றல்

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் றோன்றாமை நன்று.**

"பிறக்கின் புகழுண்டாகப் பிறக்க. அஃது இலார் பிறக்குமதின் பிறவாமைநன்று" இவ்வாறு மேற்கண்ட குறளுக்குப்பொருள் சொல்வார் மணக்குடவர். பரிப்பெருமாளும் இவ்வாறே உரை கூறிப் போந்தார்.

பரிமேலழகர் "மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க. அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று." என்று உரை எழுதினார். விளக்கத்தில் "மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்பதும் பெற்றாம்" என்று குறிப்பிடுகின்றார்.

பிறக்கும்போதே புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும் என்னும் பரிமேலழகர் கருத்து சிந்திக்க வேண்டியதாகும். பிறப்பெடுப்போர் அனைவரும் அவர்கள் வளர்க்கப்படுகின்ற முறையிலும், பெறுகின்ற கல்வி ஒழுக்கங்களினாலுமே சான்றோர்களாகவும் அறிஞர்களாகவும் வீரர்களாகவும் உருவாகின்றனர். பிறந்தபின் அமைகின்ற புறச்சூழ்நிலைகளே ஒருவரின் எதிர்கால நடத்தையின் படிக்கற்கள் ஆகின்றன. இதுவே இன்றைய சமூகவியலாளர்கள் கூறும் கருத்துமாகும்.

இலட்சத்தில், பத்து இலட்சத்தில், கோடியில் ஒருவரே பிறக்கும் போதே புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க முடியும். எடுத்துக் காட்டாக, சைவசமய குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தரைக் கொள்ளலாம். மூன்று வயதில் பாவாரம் சூட்டி



படிப்பகம்

www.padippakam.com

முக்கண்ணனைப் போற்றிய அவர், பதினாறு அகவைக்குள் பாடி அளித்த தேவாரங்கள் பல்லாயிரம், கருவிலே திரு உடையராய் உருவான இவர் இயற்கை அளித்த அற்புத அறிஞன். காலத்துக்கு காலம் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் இத்தகையோரை இயற்கை அளிப்பதுண்டு. இதுசாதாரணமானிட வாழ்வின் உண் மைக்குப் புறநடையானது. எனவே மானிடராய்ப் பிறக்கும் அனைவரும் இத்தகையராய்ப் பிறக்கவேண்டும் என்று பரிமேலழக ரும் மணக்குடவரும் பரிப்பெருமாளும் கூறுவது பொருந்தாத தாகும்.

இத்தவறு இவர்கள் மூவரும் தோன்றுக என்பதற்குப் பிறக்க என்று தவறாகப் பொருள் கொள்வதனாலேயே ஏற்படுகிறது.

காலிங்கர் "ஒருவர் தம்புகழ் பரப்புவதாகப் பழியினை நீக்கிப் புகழ் பெறுதலே தோற்றமாவது. அஃதிலார் நானிலத்தின் கண் தாம் ஒரு மக்கள் உருவுகொண்டு தோன்றுதலின் இறந்துபடுதலே பெரிதும் நன்மையுடைத்து" என்று உரை சொல்வார்.

பரிதியார் "பிறந்தால் புகழுடனே வாழவேண்டும். அந்த நெறியில்லாதார் பிறப்பதிற் பிறவாமல் இருப்பதே நன்று" என்று உரை சொல்கிறார். இவர் தோன்றில் என்பதற்குப் பிறந்தால் என்றும் தோன்றுக என்பதற்கு வாழவேணும் (வாழ்க) என்றும் பொருள் கூறுகிறார். பிறந்தவர்கள் தமக்குப் புகழ் அளிக்கத்தக்க நெறியில் வாழவேண்டும். அந்த நெறியில் வாழும் நோக்கிலார் பிறப்பதிற் பிறவாமல் இருப்பதே நன்று" என்று அவர்கூறும் கருத்து சிறப்பு டையதாகும். பிறப்பெடுத்தோர் அனைவருக்கும் புகழ்பொருந்தும் நெறியில்" வாழவேண்டும் என்னும் நோக்கு அமைய வேண்டும் என்பதே அவர்தரும் கருத்துரையாகும்.

முனைவர் மு.வ. அவர்கள் "ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பில்லாதவர் அங்குத் தோன்றுவதைவிட தோன்றாமல் இருப்பதே நல்லது" என்று கூறுகிறார்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "ஒருவர் தாம்



படிப்பகம்

www.padippakam.com

புக விரும்புகின்ற துறையில் புகழோடு விளங்க முடியும் என்றால் அந்தத் துறையில் தோன்ற வேண்டும். அதற்கான அறிவுத் திறனும் ஆற்றல் திறனும் வாய்ப்பும் இல்லாதவர்கள் அந்தத் துறையில் புகுவதைவிடப் புகாமல் இருப்பதே நல்லது'' என்று உரை கூறுகிறார். நாவலரும் மு.வவும் வள்ளுவர் கருத்தை ஒரு துறைக்குட் சிறைப்படுத்தி விட்டனர்.

''பிறந்தால் எல்லா நிலைகளிலும் புகழ்பொருந்த வாழ வேண்டும். அந்த நோக்கிலார் பிறப்பதிலும் பிறவாமல் இருப்பதே நன்று'' என்னும் பரிதியார் கருத்து மு.வ. நாவலர் கருத்தினும் விரிவான பொருளைத் தந்து நிற்கிறது.

''முழுவாழ்விலும் (பலப்பல நிலைகளிலும் பலப்பல சந்தர்ப்பங்களிலும், பலப்பல துறைகளிலும்) புகழ் பொருந்த வாழவேண்டும். அப்படி வாழவேண்டும் என்னும் நோக்கிலார் பிறப்பதிற் பிறவாமல் இருப்பது நன்று.'' என்னும் பரிதியார் கருத்து சிந்தித்துப் பார்ப்போர்க்கு சிறந்து காணப்படும் தன்மை புலனாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# பெய்யெனப் பெய்யும் மழை

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.**

இக்குறளுக்கு, "பிற தெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்" என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

"தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய், எல்லாத் தெய்வமும் தன்கணவனென்றே கருதி, அவனை நாடோறும் தொழு தெழுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்" என்று உரை எழுதிப் போந்தனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

"குல தேவதையைக் கும்பிடாமல் தன் பத்தாவைத் தெய்வ மென்று தொழுதபடியால் அவள் சொல்ல மழை பெய்யும்" என்றார் பரிதியார்.

"வொறொரு கடவுளையும் வணங்காதவளாய்த் தன் கணவ னையே நாடோறும் வணங்கி எழுகின்றாள் யாவள்; மற்றிவள் இவ்வு லகத்து மழைவளங் கூர்ந்த காலத்து வானைக் குறித்து 'வந்து பெய்வாயாக' என்று சொன்ன அளவிலே, வந்து பொழியும் மழை" என்றார் காலிங்கர்.

"வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக்கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய்யென்றால் மழைபெய்யும்" என்று தெளிவுரை அமைத்தார் முனைவர் மு.வ. அவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

மேலவர் உரையாசிரியர் அனைவரும் "தன் கணவனைத் தொழுதெழுகின்ற பெண் பெய்யென்று வேண்ட மழை பெய்யும்" என்னும் கருத்துடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

திராவிட இயக்கச் சார்புடையவர்களும் பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் என்று போற்றப்படுபவர்களுமான பாவேந்தர் பாரதி தாசன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு.கருணாநிதி போன்றோர் இக்கருத்துக்கு மாறுபாடுடையவர்களாகவே காணப்படு கின்றனர்.

"வான்புகழ்கொண்ட மேலான ஒருவர் என்ற காரணத்திற் காக வேறு எவரையும் பின்பற்றி நடக்காமல் தன் கணவனை மட்டும் எண்ணி, அவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி நடப்ப வள் பெய்யவேண்டுமென்று விரும்புங்காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள் ஆவாள்"

-இவ்வாறு மேற்கண்ட குறளுக்கு உரை எழுதினார் நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

பாவேந்தர் உரையும் கலைஞர் உரையும் நாவலரை ஒத்தே அமைந்துள்ளன. மூவரும் "கணவனைத் தொழுது எழும்" கற்புடைப் பெண் "பெய்யென்று சொல்ல மழை பெய்யும்" என்பது பகுத்தறிவுக்குப் பொருந்தாது என்று கருதிய காரணத்தால் "பெய்யெனப் பெய்யும் மழை என்னும் தொடருக்கு" பெய்யவேண்டிய காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள்" என்று பொருள் எழுதினர். இவர்கள் 'பெய்யெனப் பெய்யும் மழையை' கொழுநன் தொழுதெழுவாளுக்கு உவமையாக்கி உரைத்தனர். ஆனால், இன்னொரு திராவிட இயக்கச் சார்பாளரான மொழி நூலறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் இக்குறளுக்குப் பழம் பெரும் உரையாசிரியர் கருத்துரைகளே பொருத்தமானவை என்பார்.

"வறன் ஓடின் வையத்து வான்தரும் கற்பினாள்"

- கலித்தொகை



படிப்பகம்

www.padippakam.com

"வானம் பொய்யாது வளம் பிழையாது
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடெனும்" - சிலம்பு

"வான்தரு கற்பின் மனையறம்" - மணிமேகலை
"மழை தரும் இவள்" - மணிமேகலை

மேற்காட்டிய இலக்கியக் கூற்றுக்களை எடுத்துக்காட்டி "கற்புடைப் பெண்டிர் பெய்யென்றால் மழைபெய்யும்" என்பது பண்டைத் தமிழர் நம்பிக்கை என்று வாதிடுவார் பாவாணர்.

நம்பிக்கைகள் பகுத்தறிவுக்குப் பொருந்துபவையாகவோ அன்றேல் பொருந்தாதவையாகவோ இருக்கலாம். ஆனால், ஒரு காலத்தில் எழுந்த நூலை, அக்காலத்து மக்களின் நம்பிக்கை, பண்பாடு, சமயக்கோட்பாடு, நூலாசிரியர் மனப்போக்கு ஆகியவற் றோடு ஒட்டியே நோக்க வேண்டுமென்பதில் யாருக்குமே மாறுபாடு இருக்க முடியாது.

மாபெரும் சிந்தனையாளர்களின் நூல்களிற் கூட பகுத்தறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகள் இடம்பெறுவது உண்டு. ஞாயிறு, புவி, திங்கள், ஆகியன ஒரு நேர்கோட்டில் வரும் போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது. ஞாயிற்றின் ஒளி, புவியின் மறைப்புக் காரணமாக திங்கள் மீது வீழாது தடுக்கப்படுகிறது. இவ்வேளை புவியின் நிழல் திங்கள் மீது படிந்துபின் படிப்படியாகவே மறைந்து விடும். இதனைஅறிவியல் வளர்ச்சி பெறாத காலத்தில் திங்களைப் பாம்பு விழுங்குவதாகவும் பின் படிப்படியே வெளிக்கக்குவதாகவும் மக்கள் எண்ணியிருந்தனர். பகுத்தறிவுக்குப் பொருந்தாத இந் நம்பிக்கை

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண்டற்று.**

என்னும் வள்ளுவர் குறளிற்கூட ஏறிவிட்டது. சிறந்த சிந்தனையாளரும் மெய்யுணர்வுமிக்கவருமான வள்ளுவரும் இக்



படிப்பகம்

www.padippakam.com

கருத்தை ஏற்றுக்கொண்டிருந்தாரா அன்றேல் ஏற்றிலரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அலர் பரவும் வேகத்திற்கு, திங்களைப் பாம்பு விழுங்கும் கதை, வாய் வழியாக ஊரெங்கும் பரவுதலை உவமை கூறினார் என்றே கொள்ளவேண்டும்.

சங்க காலத்து மக்களின் நம்பிக்கை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், நாவலர் நெடுஞ் செழியன், கலைஞர் கருணாநிதி போன்றோரின், பகுத்தறிவுக் கொள் கைக்கு ஏற்ப அமைந்திருந்ததில்லை. ஆதலின் பழம்பெரும் உரை யாசிரியர் கருத்துக்களே எடுத்தாண்ட குறளுக்குப் பொருந்துவன என்பது பாவாணர் கருத்தாகும். இன்றும் நாம் பேச்சு வழக்கில் ஒரு அரசின் கொடுங்கோற் போக்கைப் பார்த்து "இத்தகைய அரசு இருந்தால் எப்படி மழைபெய்யும்?" என்கிறோம். தீய போக்குடைய ஒருவனைப்பார்த்து "இவனிருந்தால் மழை பெய்யுமா?" என்போம். பெண்ணுக்கே உரித்தான அடக்கமும் ஒழுக்கமுமில்லாத ஒருத்தியை நோக்கி, "இவள் இருக்கும் வரை பூமிக்கு மழை இல்லை" என்போம். எனவே, கற்புடைப் பெண்டிரும், செங்கோல் அரசும், நல்ல குடிமக்களும் மழைக்குக் காரணமானவர்கள் என்னும் நம்பிக்கை பண்டைத்தமிழ் மக்களிடம் இருந்ததென்பதும், அந்நம்பிக்கைகளின் வெளிப்பாடு இன்னும் முற்றாக நம்மிடையே அழிந்து விடவில்லை என்பதும் தெளிவாகும்.

ஆகவே, எடுத்தாண்ட குறள் மேற்படி நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுந்ததென்பதும், அதற்குப் பழம் பெரும் உரையாசிரியர்களும் முனைவர் மு.வ. அவர்களும் அமைத்த உரைகளே சிறப்பானவை என்றும் கொள்வதே பொருத்தமாகும்.

'செந்தீ முதல்வர் அறம் நினைத்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறைநெறியால் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச்செலவும்-இம்மூன்றும்
திங்கள் மும்மாரிக்கு வித்து'

என்னும் திரிகடுகப்பாடல் இவ்விடத்தே நோக்கற்பாலதாம்.



படிப்பகம்

www.padippakam.com

# எச்சம்

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்.**

"இவர் நடுவு நிலைமை உடையவர். இவர் நடுவு நிலைமை இலர் என்னும் விசேடம் அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்." இவ்வாறு இக்குறளுக்குப் பொருள்சொல்வார் பரிமேலழகர். "தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலையாகலின் இரு திறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின." என்று விளக்கமும் கூறுகின்றார். இங்கே எச்சம் என்பதற்கு மக்கள் என்று பொருள் காண்கிறார் அவர்.

தக்கார்க்கு மாத்திரம் நன்மக்கள் உளராவர் என்பதும் தகவிலார்க்கு நன்மக்கள் இலராவர் என்பதும் நடைமுறை வாழ்வியல் உண்மைக்கு முரணான கூற்றாகும். உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரின் மூத்த புதல்வன் தேவதாசுகாந்தி நன்மகனாக விளங்கவில்லை என்று அடிகளே சத்தியசோதனையிற் குறிப்பிட்டுள்ளார். தகவிலராய பெற்றோர்க்குச் சேற்றிற் செந்தாமரைபோல நன்மக்கள் பலர் வாய்த்திருக்கிறார்கள். இக்கருத்து முரண்பாடு எச்சம் என்பதற்கு மக்கள் என்று பரிமேலழகர் தவறாகப் பொருள் கொள்வதாலேயே ஏற்படுகிறது.

எச்சம் என்பதற்கு ஆரவாரத் தொழில் எனப்பொருள் கொள்கிறார் மணக்குடவர். ஒருவர் செய்யும் தொழிலைக் கொண்டு அவர் தக்கவரா தகவிலரா என்பதைத் தெரிந்து கொள்வது இயலாத காரியமாகும். எனவே "செவ்வையுடையார், செவ்வையிலர் என்பது அவரவர் ஆரவாரத் தொழிலினாலே காணப்படும்" என்னும் மணக்குடவர் உரை இக்குறளுக்குப் பொருத்தமற்றதாகவே தெரிகிறது. பரிதியார் "போன சென்மத்திலும் இந்தச் சென்மத்திலும் நடுவு



படிப்பகம்

www.padippakam.com

நிலமை பெற்றவராம் என்று அறிக. அவர் புதல்வர் சற்குணத்தால்`` என்று உரையெழுதிப் பரிமேலழகரை ஒட்டிச் செல்பவராகவே காணப்படுகிறார். காளிங்கர்உரை. எச்சம் என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள் சொல்கிறது. ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் தக்கவரா, தகவிலரா என்பதைக் கணிக்க முடியுமாயினும் ஒழுக்கத்தை எச்சத்தின் பொருளாகக் கொள்வது பொருத்த மற்றதாம்.

பரிப்பெருமாள் ``செவ்வையுடையார் செவ்வையிலர் என்பது அவரவர் ஒழிபினானே காணப்படும்`` என்று உரை எழுதி யுள்ளார். ஒழிபு மக்கள் முதலான பொருள்கள் என்று கூறும் அவர் தன் கருத்தைத் தெளிவுறச் சுட்டிச் சென்றார் அல்லர். தற்கால உரையாசிரியர்களாகிய அறிஞர் மு.வ. அவர்களும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் எச்சம் என்பதற்கு ஒரே பொருளையே கொண்டிருக்கின்றனர். ``நடுவு நிலைமை உடையவர் நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்`` என்று இருவரும் உரைசொல்லியுள்ளனர். இதுவே இக்குறளுக்குப் பொருத்தமான தாகத் தெரிகிறது.

**மனந்தூயார்க் கெச்சம் நன்றாகும் இனந்தூயார்க்**
**கில்லை நன்றாகா வினை.**

என்னும் குறளிலும் பரிமேலழகர் ``மனம் தூயராயினார்க்கு மக்கட் பேறு நன்றாகும், இனம் தூயராயினார்க்கு நன்றாகாத வினையாதும் இல்லை`` என்றே உரை சொல்லியுள்ளார். பரிதியார், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோரும் எச்சம் என்பதற்கு மக்கட் பேறு என்றே இங்கும் தவறான பொருள் கண்டுள்ளனர். மு.வ. அவர்களும் நாவலர் அவர்களும் இவ்விடத்திலும் புகழ் என்றே பொருள் கொண்டுள்ளனர்.

**எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ**
**வொருவரா னச்சப் படாதவன்.**



படிப்பகம்

www.padippakam.com

என்னும் குறளில் எச்சம் புகழைக் குறிப்பதாகச் சொல்லும் பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோர் ஏனோ மற் றைய குறள்களில் தவறான பொருளைச் சொல்லிச்செல்கின்றனர்?

"எச்சம் என்பது செய்தவர் இறந்து போகத் தான் இறவாது நிற்பது" என்பார் பரிமேலழகர். இது ஒழிபு என்றும் சொல்லப்படும். புதல்வர், பொருள், நிலம், பழி, புகழ், செல்வம் முதலியன எச்சத்தின் பாற்படுவனவாயினும் தொடக்கத்திற் காட்டிய குறளிற் புகழும் பழியுமே எச்சமாகக் கொள்ளப்பட வேண்டும்.

**வசை என்ப வையத்தார்க் கெல்லாம்**
**இசைஎன்னும் எச்சம் பெறாவிடின்.**

என்று வேறோர் குறள் சொல்வது நோக்கற் பாலதாம்.

"எவர்எவர் தத்தம் மறைவின் பின் மக்களாற் போற்றிப் பெருமைப்படுத்தப் படுகிறார்களோ அவர்கள் தக்கோராகவும் எவர் எவர் தத்தம் மறைவின் பின் மக்களாற் பழித்துச் சிறுமைப் படுத்தப் படுகிறார்களோ அவர்கள் தகவிலராகவும் காணப்படுவர்." என்பது சிறந்த ஒரு கருத்தாகும்.

ஆகவே, எடுத்தாளப்பட்டுள்ள குறளுக்கு மு.வ. அவர் களும், நாவலர் அவர்களும் கூறும் உரையே சிறப்புடைத்தாம் தன்மை இனிது விளங்குவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# பிறவாழி

**அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

இக்குறளுக்கு பரிமேலழகர் "அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க் கல்லாது, அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது" என்று உரை எழுதியுள்ளார்." அறம், பொருள், இன்பம் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான் ஏனைப் பொருளும் இன்பமும் பிறவெனப் பட்டன." என விளக்கம் கூறி, பொருளையும் இன்பத்தையுமே வள்ளுவர் பிறவாழி என்று சுட்டிக் காட்டியதாகக்கொள்கிறார் அவர்.

காலத்தாற் பரிமேலழகருக்கு முந்தியவரான உரையாசிரியர் மணக்குடவர் இக்குறளுக்குரைக்கான விளக்கத்தில் "இது காமமும் பொருளும் பற்றிவரும் அவலம் கெடும்" என்றது என்பார். ஆகவே பொருள் காமம் காரணமாக ஏற்படும் துன்பத்தையே "பிறவாழி" என்று குறித்தாகக்கொள்கிறார் மணக்குடவர். பரிப்பெருமாள் என்னும் உரையாசிரியர் கருத்தும் மணக்குடவரையும் பரிமேலழகரையும் ஒட்டிச் செல்வதாகவே காணப்படுகிறது.

காலிங்கர் "அறமாகிய பெருவெள்ளமாய் அனைத்துயிர் கட்கும் அழகிய தண்ணளியை உடையவனாகிய இறைவனது தாளிணையை வணங்கி வழிப்பட்டார்க்கல்லாது மற்றியாவர்க்கும் பிறவிப் பௌவத்தைக் கடத்தல் அரிது" என்று உரை எழுதுகிறார். "பிறவி ஆழி" என்பதே பிறவாழி என்று குறிக்கப்பட்டதாக அவர் கருதுகிறார். இதேகருத்தையே சமண உரையாசிரியர்களும் கொண்டிருந்தனர். "பிறவியாகிய கடலைக்கடந்து கரையேறுவதற்கு தருமசக்கரத்தைத் தாங்கிய அருகனுடைய திருவடித்துணை இன்றியமையாதது" என்று அவர்கள் பொருள் கொள்ளுவர். காளிங்கரும்



படிப்பகம்

சமண உரையாசிரியர்களும் "பிறவாழி" என்பதற்குப் பிறவிக்கடல் என்று பொருள் கொண்டது தவறானதாகவே தெரிகிறது.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேரா தார்**

என்று இதேஅதிகாரத்தில் வேறொரு குறளில் இக்கருத்தை வள்ளுவர் தெளிவுறக் குறித்திருப்பதால் பிறவாழி என்பதற்குப் பிறவி ஆழி என்று பொருள் கொண்டது பொருத்தமுடைத்தன்று என்பது விளங்கும்.

நாத்திகப் பார்வையுடன் திருக்குறளுக்கு உரையெழுதிய சிறந்த தமிழறிஞரான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் இக்கருத்தை மறுத்தே எழுதியுள்ளார். "பிறகடல்கள் என்பதனைப் பிறவாழி என்று சுட்டிக்காட்டுவதால் அறவாழி என்பது அறச் சக்கரம் என்று பொருள்படாது." என்று சமணர் கருத்தைப் பலமான நியாயம் காட்டித்தூக்கி எறிகிறார் அவர்.

"பிறவாழி என்பது அறமல்லாத பிற கடல்கள் என்று கூறி, அவை துன்பக்கடல், துயரக்கடல், தீமைக்கடல் போன்றவையாம் என்கிறார். "சான்றோர்களைப் பொதுவாக அறக்கடல், அன்புக்கடல், அருட்கடல், அறிவுக்கடல், பண்புக்கடல், என்று கூறுவது உலக மரபு. இவ்வகையில் அறவாழி அந்தணன் என்ற சொற்றொடர் வைதிகர்களின் கடவுளை உணர்த்தாது சான்றோரையே உணர்த்தும்' என்று கூறி, தான்சார்ந்த பகுத்தறிவு இயக்கத்தின் கருத்துக் கிணங்கப் பின்வருமாறு உரைசொல்கிறார். "அறக் கடலாக விளங்கும் செந்தண்மையுடைய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரைப் பின்பற்றி அவரோடு பொருந்தி நிற்பவர்களுக்கு மட்டுமே அல்லாமல் மற்றவர்களுக்கு மற்றத் துன்பக் கடல்களை நீந்திக் கரைசேருவது என்பது அரிதான செயலாகும்"

பரிதியார் என்னும் சைவ உரையாசிரியர் "தருமமென்னும் சமுத்திரமாகவுள்ள பரமேசுவரன் பாதத் துணையில்லாதார் பாவக் கடலை நீந்த மாட்டார்" என்று உரை எழுதுகிறார். பிறவாழி



படிப்பகம்

www.padippakam.com

என்பதற்குப் பாவக்கடல் என்றே அவர் பொருள் கண்டுள்ளார். நாவலரும் பரிதியாரும் இக்கருத்துப் போராட்டத்தில் மிக நெருக்கமுடையவர்களாகவே காணப்படுகின்றனர். ஆங்கில மொழியில் திருக்குறளுக்கு உரை எழுதியவரான எல்லீசர் என்னும் மேலை நாட்டறிஞர் கருத்தும் பரிதியார் கருத்தாகவே தெரிகிறது. "அறவாழி என்பதற்கு எதிரானது பிறவாழி. அறவாழி அறக்கடல் என்றால் பிறவாழி பாவக்கடல் என்பது அவர் கருத்து. எனவே அறமே உருவான இறைவன் திருவடிகளே பாவக்கடலைக் கடப்பதற்கு ஏற்ற சாதனம் என்று பொருளுரைத்தார் எல்லீசர்".(அலையும் கலையும்)

பிறவாழி என்பதற்குப் பரிதியாரும் எல்லீசரும் நாவலரும் கொண்ட பொருள்களே சிறப்புடையவாகும்.



படிப்பகம்

# இருமை

**இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற் றுலகு.**

"பிறப்பும் வீடும் என்னும் இரண்டினது கூறுபாட்டை ஆராய்ந்து, இவ்விடத்தே துறவறத்தை மேற்கொண்டவரது பெருமை உலகத்தில் மிக்கது" இவ்வாறு இக்குறளுக்குப் பொருளுரைத்தார் மணக்குடவர். மணக்குடவரைத் தழுவித் திருக் குறளுக்கு உரையமைத்தவரான பரிப்பெருமாளும் அவர் உரை யையே தமதாகவும் குறித்துச் சென்றார்.

தனக்கு முற்பட்ட உரையாசிரியர் கருத்துக்களை நுணுகி ஆராய்ந்து, செவ்விய உரையொன்றைத் தந்து தமிழிலக்கிய உல கில் சிறப்பிடம் பெற்றவரான பரிமேலழகரும் இதே பொருளையே கூறிச் சென்றார். மூவர் உரையாசிரியரும் "இருமை என்பதற்குப் "பிறப்பும் வீடும்" என்றே பொருள் கொண்டனர்.

சைவசமயத்தைச் சார்ந்தவரான பரிதியார் "புண்ணிய பாவத்தின் வழியறிந்து தன்மத்தின் வழிநின்றார் பெருமையினால் உலகம் விளங்கும்" என்று பொருளுரைத்தார். இவர் "புண்ணியமும் பாவமுமே" இருமை எனக் குறிக்கப்பட்டதாகக் கொள்கிறார்

காலிங்கர் "கீழ்ச்சொன்ன பரிசே இம்மை மறுமை இரண்டி னது குற்றத்தன்மையைத் தெரிந்து, மிக்கிருந்துள்ள அறப்பயனா கிய வீட்டின்பத்தை மேவியுள்ளாரது பெருந்தன்மையை மிகுத்துக் கூறியது இவ்வுலகு" என்று உரை சொல்கிறார். இவர் இருமைக்கு இம்மை மறுமை என்று பொருளுரைக்கின்றார். இதுவே இருமைக்கு அறிஞர் அனைவரும் கொள்ளும் மரபுவழிப் பொரு ளாகும்.

உரையாசிரியர் அனைவரும் இருமைக்கு எழுதிய கருத்

www.padippakam.com

துக்களை நன்கு ஆராய்ந்தார் அறிஞர் மு.வ. அவர்கள். பிறப்பும் வீடும், புண்ணியமும் பாவமும், இம்மையும் மறுமையும் பொருத் தமான கருத்துக்களாகவே தெரிந்தன. சொல்லப்பட்ட கருத்துக்களிற் பொருந்தாதன தள்ளி, சிறந்தவொன்றைத் தேர்ந்துகொள்ள அவரால் முடியவில்லை. இதனால், தன் தெளிவுரையைக் கீழ்க் கண்டவாறு அமைத்தார் அவர்.

"பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவை களின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, அறத்தை மேற்கொண்ட வரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது."

இரண்டிரண்டாகச் சொல்லப்படும் யாவும் இருமைக்குள் அடங்குவன என்னும் கருத்தை மு.வ. முன்வைக்கின்றார்.

கடவுள் இருவினைப்பயன், விதி, மறுபிறப்புக் கொள்கை களில் நம்பிக்கை அற்றவரான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர் கள் தான்சார்ந்த பகுத்தறிவு இயக்கத்தின் பார்வையில் இக் குறளுக்குப் பின்வருமாறு பொருள்சொல்கிறார்.

"நன்மை தீமை எனும் இரண்டின் பாகுபாடுகளை ஆராய்ந்தறிந்து இவ்வுலகத்தில் மிகுதியான அறத்தை மேற்கொள் ளும் சீரியோரின் சிறப்பே உலகில் மிகச் சிறந்தது ஆகும்."

வள்ளுவர் இருமை என்று குறித்தது நன்மையும் தீமையுமே என்பது நாவலர் கருத்து. இக்குறளுக்கான விளக்கத்தில் "இருமை என்பது பாவ புண்ணியம். பிறப்பு வீடு. இப்பிறப்பு மறு பிறப்பு போன்ற கற்பனைக் குறிப்புக்களைக் குறிப்பதாகாது. உலகி யல் வாழ்வில் ஒருவரால் நன்மை, தீமைகளைப்பற்றித்தான் ஆராய்ந் தறிய இயலுமே அல்லாமல் கண்ணாலும் கருத்தாழத்தாலும் அறிய இயலாத கற்பனை வீடுபேற்றைப் பற்றி ஆராய்ந்து பார்க்க இய லாது" என்று குறிப்பிடுகிறார் அவர். மதக்கோட்பாடுகளின் அடிப் படையில் இருமைக்கு உரைக்கப்பட்ட கருத்துக்கள் அவைஎன்று கருதுவதால் அவை யாவும் கற்பனையே என்று சாடுகிறார் நாவலர்.



படிப்பகம்

நாவலரின் சாடுதல் நூலாசிரியரான வள்ளுவர் உள்ளக் கிடக்கைக்கே முரணானது என்ற காரணத்தால் அதனைத் தவிர்த்து இருமைக்கு நன்மை தீமை என்று அவர் பொருள் உரைத்த தன்மை பற்றி நோக்குவாம் சிறப்புடையதாகும்.

"உலகியல் வாழ்வில் ஒருவரால் நன்மை தீமைகளைப் பற்றித்தான் ஆராய்ந்தறிய இயலும்" என்னும் அவர் கருத்து அனைவராலும் ஏற்கத்தக்கதே. பாவம்-புண்ணியம், இம்மை-மறுமை, பிறப்பு-வீடுபேறு எனச் சமயவாதிகள் குறிப்பிடும் பேறுகளுக்கும் அடிப்படை நன்மையும் தீமையுமே ஆம். அதுவுமன்றி இருமை என்னும் சொல்லின் பொருளுக்கு ஏற்ப இரண்டு மைகள் அமைந்திருப்பதாலும் நாவலர் கொண்டபொருள் யாவருக்கும் ஏற்புடைத்தாக அமைந்துள்ளது.

இதுகாறும் காட்டியவற்றால் இருமைக்குப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், மு.வ ஆகியோர் உரைத்த கருத்துக்களிலும் பார்க்க நாவலர் கருத்தே சிறந்து விளங்குகிறது.

www.padippakam.com

# நத்தம்

**நத்தம் போற்கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது.**

இக்குறளுக்கு மணக்குடவர் "ஆக்கம் போலக் கேடும் உளதானாற்போல, சாதலும் வல்லவற் கல்லது அரிது" என்று உரை சொல்வார். மணக்குடவரை அடியொற்றிக் குறளுக்கு உரை செய்த வரான பரிப்பெருமாள் இதனையே தம்முரையாகவும் குறித்துச் சென்றார். "நத்தம் கேடும் உளதாகும் போல் சாக்காடும் வித்தகர்க் கல்லால் அரிது" என்று கொண்டுகூட்டி இருவரும் பொருள் உரைத்தனர். வித்தகர் இறந்துபட்ட போதிலும் புகழை நிலை நிறுத்திச் செல்வர் என்பது இதன் கருத்துரையாகும். இங்கு நத்தம் என்பதற்கு இருவரும் ஆக்கம் என்று பொருள் கொண்டனர்.

பரிமேலழகர் "புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழு டம்பு உளதாகும் சாக்காடும் சதுரப்பாடு உடையார்க்கல்லது இல்லை" என்று உரை எழுதினார். "நந்து என்னும் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்றாய். பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று. போல் என்பது ஈண்டு உரை யசை". இவ்வாறு விளக்கம் சொல்லும் பரிமேலழகர் "நத்தம் (ஆகும்) கேடும் உளதாகும் சாக்காடும் வித்தகர்க்கல்லால் அரிது." என்று கொண்டு கூட்டிப் பொருள் சொல்கிறார்.

போல் என்பது உவமை உருபாகும். இதனை அசைச் சொல் எனப் புறக்கணித்துப் பொருள் சொல்வதன் மூலம் வள்ளுவர் கூறிய உவமை நயத்தைக் கெடுத்துப் பொருள் உரைக்கும் குறைக்கு ஆளாகிறார் பரிமேலழகர்.

முனைவர் மு.வ. அவர்கள் பரிமேலழகரைத் தழுவியே இக் குறளுக்குத் தெளிவுரை செய்தார்.



படிப்பகம்

www.padippakam.com

"புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்விற் கேடும் புகழ் நிலை நிற்பதாகும் சாவும் அறிவிற் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை."

நாவலரும் "புகழைப் பெருக்குவதன் மூலம் துயர் அடைவதும் புகழை நிலைநிறுத்திச் சாவை அணைப்பதும் ஆகிய செயல்களை ஆற்றல் மிக்கவர் மட்டுமே செய்ய இயலும்: மற்றவர்களாற் செய்ய இயலாது." என்று உரை சொல்வதன் மூலம் பரிமேலழகரை ஒட்டிச் செல்பவராகவே காணப்படுகிறார்.

பரிமேலழகரும் மு.வவும் நாவலரும் நத்தம் என்பதற்கு ஏறத்தாழ புகழுடம்பு மேம்படுதல் என்னும் பொருள் உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

பரிதியார் "சங்கு ஆயிரம் சூழ்ந்த வலம்புரிபோல கிளையானது தன்னைச் சூழ வாழ்வதே கீர்த்திமானுக்குக் கைவரும்" என்று உரை எழுதியுள்ளார். இவ்வுரை குறளுக்குப் பொருத்தமற்றதாகவே அமைந்துள்ளது. ஆயினும், நத்தம் என்பதற்கு வலம்புரிச் சங்கு என்று பரிதியார் கொண்ட பொருள் நம் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதாகும்.

"வலம்புரிச் சங்கானது தன்னிலை குலைந்து பிறர் கைப்படினும் தன் பெருமை குன்றாதது போல இல்லறமியற்றும் நல்லறிவாளர் தாம் வாழுமிடத்தும் கெடுமிடத்தும் தம்புகழ் விளங்கக் கெடுவதோர் கேடும் அதுவே அன்றி மற்றிறந்து படினும் விரிபுகழ் விளைக்கும் அல்லது மற்றுளோர்க்கு என்றும் அரிது." இவ்வாறு உரை எழுதினார் காளிங்கர். "நத்தம் உளதாகும் கேடும் சாக்காடும் போல் வித்தகர்க்கு அல்லால் அரிது." என்று கொண்டு கூட்டிப்பொருள் செய்கிறார் அவர். இக்குறளில் வள்ளுவர் எடுத்தாண்ட உவமைச்சிறப்பை வெளிக்கொணர்ந்த பெருமை காளிங்கரையே சாரும்.

வலம்புரிச் சங்கு பிறர் கைப்பட்டுக் கேடுற்று. உயிரிழந்த போதும் அருமையும் பெருமையும் மிக்கதாகவே கணிக் கப்படும். அதுபோல் நல்லறிவாளர் வாழும்போதும் கேடு அடைந்த போதும்



படிப்பகம்

www.padippakam.com

அதுவே அன்றி இறந்த போதும் பெருமை உடையவர் களாகவே போற்றப்படுவர்.

இங்கே நத்தம் என்பது உவமானம். வித்தகர் உவமேயம். போல் என்பது உவமை உருபு. கேடுற்ற போதும் இறந்துபட்ட போதும் பெருமை குன்றாதிருத்தல் பொதுத்தன்மை.

வித்தகர் பெறுகின்ற கேடும் சாவும் பெருமையுடைய வையாக அமைகின்றன. இதுவே காளிங்கர் தரும் கருத்துரை யாகும்.

"சங்கு சுட்டாலும் வெண்மைதரும்" என்னும் முதுமொழி இங்கு கவனிக்கத்தக்கது.

சிறுசிறு குறைகள் காணப்படுகின்ற போதும் ஊன்றிக் கவனிப்போர்க்கு இக்குறளுக்கான உரைகளிற் காளிங்கர் தந்ததே சிறந்து விளங்கும் தன்மை தெளிவாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# குடம்பை

**குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு.**

"கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற் போலும் உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு" என்று மேற்கண்ட குறளுக்குப் பொருள் உரைத்தனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். இவர்கள் இருவரும் குடம்பையைக் கூடு என்று கொண்டனர்.

"முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு" என்று உரை சொல்வார் பரிமேலழகர். இவர் குடம்பையை முட்டை என்று கொண்டார்.

பரிதியார் "பட்சி முட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும். ஆகையினால் யாக்கை உள்ள பொழுதே தன்மம் செய்வான்" என்று எழுதிச் சென்றார். இவருரை இக்குறளுக்கு, முழுமையாகப் பொருந்துவதாக இல்லை.

"இவ்வுலகத்துக் குருவி முதலிய பறவையனது தான் வாழும் கூடு தன்னையின்றித் தனித்து ஆங்கு ஒழியப் பறந்து போகிய அத்தன்மைத்தே, மற்றுயாதோ எனின் உடம்போடு உயிரின் கண் உளதாகிய உறவுபாடு" என்பார் காலிங்கர். இவரும் குடம்பைக்கு கூடு என்றே பொருள் கொண்டார்.

உடம்பிலிருந்த உயிர் ஒருதடவையே நீங்கும். வெளிச் சென்ற அவ்வுயிர் மீண்டும் உடம்புட் புகுதல் இயலாது. ஆனாற் பறவை கூட்டினின்று பலமுறை வெளிச்செல்வதும் திரும்பிவந்து அங்கு தங்குவதும் இயல்பானது. இவ்வகையிற் பார்ப்பின் உடம்பிற்குக் கூடும் உயிருக்குப் பறவையும் பொருத்தமான உவமைகளாய் அமையவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

உடம்பும் உயிரும் இவ்வுலகுக்கு ஒரே நேரத்தில் வருவன. உயிர் முதலிற்றோன்றி தனக்கான உடம்பைப் படைத்துக் கொள் வதோ அன்றேல் உடம்பு முதலிற்றோன்றி தனக்கான உயிரை ஆக்கிக்கொள்வதோ இல்லை. முட்டையும் அதனுள் உயிரும் ஒரே காலத்தில் உருவாவன. ஆனாற் கூடு பறவையினால் தனக்காக ஆக்கிக் கொள்ளப் படுவதாகும். இவ்வகையிலும் உடம்பிற்குக் கூடும் உயிருக்குப் பறவையும் பொருத்தமானவையாக இல்லை.

முட்டையிலிருந்து வெளிவந்த குஞ்சு மீண்டும் அம் முட்டையுட் புகுதல் ஆகாது. அக்குஞ்சு முட்டையை நீத்துப் பிரிந்து சென்ற தன்மையைப் போன்று உயிரும் உடம்பை விட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிடும்.

ஆகவே, உடம்பிற்கு முட்டையும் உயிருக்குப் பறவை யுமே பொருத்தமான உவமைகளாய் அமைந்துள்ளமை விளங்குவ தாகும்.

குறளுரைக்கான விளக்கத்தில் தன் கருத்தைத் தெளிவுறக் கூறுகிறார் பரிமேலழகர்.

"தனித்து ஒழிய" என்றதனான் முன் தனியாமை பெற்றாம். அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல். அதனால் அஃது உடம்பிற்கு உவமை யாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற் போகலின் புள் உயிர்க்குவமை ஆயிற்று. இனிக் குடம்பை என்பதற்கும் கூடு என்று உரைப்பவரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும் அதன்கண் அதுமீண்டு புகுதல் உடைமையானும் உடம்பிற்கு உவமையாகாமை அறிக"

முனைவர் மு.வ. அவர்கள் "உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத் திற்குப் பறவை பறந்தாற்போன்றது" என்று தெளிவுரை செய்தார்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் "உடம்போடு உயிருக்கு இருக்கும் உறவானது, தான் வாழ்ந்த கூடு தனியே



படிப்பகம்

www.padippakam.com

இருக்க அதனை விட்டுவிட்டு, வேறு இடத்திற்குப் பறவையானது பறந்து போய்விடுவது போன்றதாகும்'' என்றே எழுதியுள்ளார்.

முனைவர் மு.வ. அவர்களும் நாவலர் அவர்களும் உடம்புக்கும் உயிருக்கும் முறையே கூடும் பறவையும் பொருந் தாமைபற்றிப் பரிமேலழகர் கூறிய விளக்கத்தைப் பொருட்படுத்திய தாகத் தெரியவில்லை. நுணுகிய சிந்தனைத் திறனுக்கும் தமிழ் புலமைக்கும் எடுத்துக் காட்டான அவர்கள் பரிமேலழகரின் கருத் துக்களையிட்டு மௌனம் சாதித்தது ஏனோ என்பது புரிய வில்லை. (எடுத்துக்கொண்ட பொருளான) உவமேயத்தை விளக்கும் உவமானம், எப்போதும் உவமேயத்தைவிட சிறப்பானதாய் விளங்க வேண்டுமென்னும் தமிழிலக்கணக் கொள்கையை இருவரும் கவனத்திற் கொண்டார்கள் அல்லர். உவமை பற்றிக்கூறுமிடத்து ''மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும் பான்மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்று தமிழ் அணியிலக்கண நூலான தாண்டி யலங்காரம் பேசும்.

இதன்படி மணக்குடவரும், பரிப்பெருமாளும், காலிங்கரும், மு.வவும், நாவலரும் உடம்பிற்கு உவமையாகக் கூட்டைக் கூறியது குறைபாடுடையதே.

ஆகவே, உடம்பிற்கு உவமையாக முட்டையைக் கொண்டு, பரிமேலழகர் எடுத்தாண்ட குறளுக்குத் தந்த உரையே சிறந்து விளங்கும் தன்மை பெறப்படும்.

இக்குறளுரை பரிமேலழகரின் தனித்துவம்மிக்க உரைத் திறனுக்கான சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

''நூலிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி'' என்னும் கவியடிகள் அவரின் புலமைக்குத் தக்க சான்றாகும்.


படிப்பகம்

www.padippakam.com

# கேடு

**சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.**

"சினத்தைத் தன்னாற்றல் உணர்த்துவதோர் குணம் என்று தன்கட் கொண்டவன் அவ்வாற்றல் இழத்தல் நிலத்தின் கண் அறைந்தவன் கை அந்நிலத்தை உறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது" என்று மேற்கண்ட குறளுக்குப் பொருளுரைத்தார் பரிமேலழகர். விளக்கவுரையில் இக்குறளில் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது என்றார். இங்கே கேடு என்பதற்கு "ஆற்றல் இழத்தல்" என்று பொருள் கொள்கிறார் அவர்.

"சினத்தைப் பொருளாகக்கொண்டவன் கெடுதல் நிலத் தெறிந்தான் கை தப்பாமற்பட்டது போலும்" என்றுரை எழுதிச் சென் றனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். இருவரும் நிலத் தறைந் தான் என்பதை நிலத்தெறிந்தான் என்று பாடம் கொண்டு உரை சொல்லினர். இவர்கள் கேடு என்பதை கெடுதல் என்று கொண்டனர்.

பரிமேலழகர் சினத்தின் மூலம் தன்னாற்றலை உணர்த்துப வன் கட்டாயம் அவ்வாற்றலை இழந்துவிடுவான் என்கிறார். அதற்கு உவமையாக நிலத்தின்கண் அறைந்த கை தப்பாது அந் நிலத்தை உறுதல் கூறப்பட்டது.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் சினத்தைப் பொருளா கக் கொண்டவன் கட்டாயம் கெடுவன் என்கின்றனர். அதற்கு உவமையாக நிலத்தெறிந்தவன் கை தப்பாமல் (அந்நிலத்திற்) பட்டது கூறப்பட்டது.

கேடு என்னும் பதத்திற்கு பரிமேலழகர் கொண்ட கருத்தை விட மணக்குடவரும் பரிப்பெருமாளும் கொண்ட கருத்தே சிறப்புடைத்தாகத் தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

காளிங்கரும் மணக்குடவரையும் பரிப்பெருமாளையும் போன்று நிலத்தெறிந்தான் என்றே பாடம்கொள்கிறார். கருத்துரையும் அவர்கள் இருவரையும் ஒத்தாகவே அமைந்துள்ளது.

"இம்மை மறுமை ஆகிய இரண்டினையும் கெடுப்பதாகிய சினத்தைப் பொருளெனவே கைக்கொண்டவனது கேடானது சிறிதும் தப்பாது என்பது எங்ஙனமேனில் ஒருவன் தனக்கு நிலத்தை இலக்காகக் குறித்துக்கொண்டு மற்று அந்நிலத்தின்கண் எறியின் (உய்த்த) கை பிழையாது போலும்."

நிலத்தெறிந்தான் என்று பாடம் கொண்ட காரணத்தால் மூவர் உரையும் சரியானவை என்றே கொள்ளவேண்டும்.

பரிதியார் உரையும் இவர்கள் மூவரையும் ஒட்டியே செல்கிறது.

"கோபத்தைப்பொருளென்று கொண்டார்க்குக் கேடு வராது தப்பாது. அஃது எப்படியென்றால் நிலத்தில் அடித்த கை தப்பாது போலும்."

அடித்த கை என்று உரைப்பதால் பரிதியாரும் பரிமேழகர் போல் நிலத்தறைந்தான் என்றே பாடம் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

முனைவர் மு.வ. அவர்கள் "(தன்வல்லமை புலப்படுத்தச்) சினத்தைப் பொருள் என்று கொ்ணடவன் அழிதல் நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாதது போல்ஆகும்." என்று பொருள் கொள்கிறார்.

பரிதியாரும் மு.வவும் "நிலத்றைந்தான் கை பிழையாதற்று" என்னும் இரண்டாம் அடிக்குக்கூறும் பொருள் தெளிவற்றதாகவே இருக்கிறது. அது நிலத்தெறிந்தான் கை என்பதற்கு ஏனை உரையாசிரியர் கூறிய பொருளை ஒத்தே அமைகிறது. நிலத்தறைந்தான் என்பதற்கும் நிலத்தெறிந்தான் என்பதற்கும் தெளிவான வேறுபாடு உண்டு. ஓங்கிநிலத்தில் அடிப்பதை நிலத்தறைந்தான் என்றும் குறிப்பாக நிலத்தைத் தொடுவதை நிலத்தெறிந்தான் என்றும் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் "சினத்தைத் தனக்குரிய பண்பாகக்கொண்டவன் கெடுதல் என்பது நிலத்தை நோக்கிக் கையால் அறைந்தவனின் கையானது எப்படித் தப்பாது துன்புறுமோ அப்படியே தப்பாது ஆகும்." என்று உரை சொல்லியுள்ளார்.

இவரே வள்ளுவர்தம் உள்ளக் கிடக்கையையும் உவமைச் சிறப்பையும் வெளிக்கொணர்ந்து உரைசொன்ன சிறப்புக் குரியவராகிறார்.

"சினத்தைப்பண்பாகக் கொண்டவன் கட்டாயம் கெடுவான் என்பதே வள்ளுவர் கூற எடுத்துக்கொண்ட கருத்தாகும். நிலத்தறைந்தான் கை இதை விளக்க வள்ளுவர் படைத்துத் தந்த உவமானமாகும். நிலத்தில் ஓங்கி அடித்த கை நோவடைந்து துன்புறுவது போல சினத்தைப்பண்பாகக் கொண்டவன் கட்டாயம் கெடுவான். இதுவே மேற்கொண்ட குறளின் கருத்துரையாகும். இங்கே, நிலத்தறைந்தான் கை உவமானம். சினத்தைப் பொருளாகக்கொண்டவன் உவமேயம். தப்பாது கேடுறுதல் பொதுத் தன்மை.

பரிமேலழகர் கேடு என்பதற்கு ஆற்றல் இழத்தல் என்றும் அறைந்தான் கை பிழையாதற்று என்பதற்கு அறைந்தவன் கை அந்நிலத்தை உறுதல் தப்பாதவாறு என்றும் பொருள் கொண்டது சிறப்புடைத்தாய் அமையவில்லை என்பது அவருரையையும் நாவலர் உரையையும் ஒப்பிட்டு நோக்கின் விளங்குவதாகும்.

பரிதியாரும் மு.வவும் நிலத்தறைந்தான் கை நோவுற்றுத் துன்புறும் என்பதைத்தம் உரையில் வெளிக்கொணரத் தவறிவிட்டனர். ஆகவே எடுத்தாண்ட குறளுக்கு நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அமைத்த உரையே சிறந்து காணப்படும் தன்மை இனிது விளங்குவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆபயன்

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்**
**காவலன் காவான் எனின்**

"பசுக்கள் பால் குறையும், அந்தணர் வேதம் ஓதார் அரசன் காவானாயின்" என்று மேற்கண்ட குறளுக்குப் பொருள் உரைத்தனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

"காத்தற்கு உரிய அரசன் உயிர்களைக் காவானாயின் அறனில்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும். அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்." என்று சிறிது விரித்துப் பொருள் சொன்னார் பரிமேலழகர்.

"ஆவின் பயன் குன்றும். வேதநீதியும் கெடும் மன்னவன் செங்கோல் குன்றின்" என்பது பரிதியார் தந்த உரை.

காளிங்கர் "உலகத்து முந்நிரைப் பசுக்களானவை கறவையும் கன்றுமாகப் பயன்பட்டு வருகிற பயனும் குன்றும் மற்று அதுவேயும் அன்றி அறுவகைத் தொழிலுக்கு உரியராகிய அந்தணரும் அருமறை ஓதலும் மறந்து விடுவர். என்னை எனின் வையம் காவலன் ஆகிய மன்னவன் செங்கோல் முறையால் பாதுகாவாது கொடுங்கோன்மை செய்து ஒழுகின்" என்றார்.

பழைய உரையாசிரியர் ஐவர் கருத்துரைகளும் ஒத்ததாகவே அமைந்துள்ளன. இவர்கள் யாவரும் இந்துமதக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இக்குறளுக்கு உரை சொல்லியுள்ளனர்.

விளக்க உரையில் பரிமேலழகர் பின்வருமாறு சொல்வார். "ஆபயன்-ஆவாற் கொள்ளும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையானும் அது கொடுத்தற்குரியார் மந்திரம், கற்பம் என்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே வானம் பெயல் ஒல்லாது என்பதாயிற்று."

முற்காலத்தில் இந்து மதத்தைச் சார்ந்த மன்னர்கள் மக்கட் பேறு, மழை பகைமன்னருடனான போரில் வெற்றி பெறுதல் முதலான நோக்கங்களுக்காக வேள்விகள் நிகழ்த்துவர். இவ் வேள்விகள் வழிவழியாக இவர்கள் பின்பற்றி நின்ற இந்து மதத்தின் முக்கிய சடங்குகளில் ஒன்றாகும். எந்த "நோக்கத்திற்காக வேள்வி நிகழ்த்தப்படுகிறதோ அந்த நோக்கம் ஈடேறும் என்பதில் அவர்கள் உறுதியான நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர்.

வேள்வியின் போது குண்டத்தில் எரியும் தீயிடைச் சொரி யப்படுபவை அவிப்பொருட்கள் என்று சொல்லப்படும். வேள்விக்கான அவிப்பொருட்களில் முக்கியமானது நெய்யாகும். நெய்குறைவுறும் போது வேள்விநிகழ்த்துதல் அரிதாகும். இதனால் அந்தணர் வேதம் ஓதலும் அரிதாகிறது. மழை பெய்தலும் குறைவு படுகிறது. இது காரணமாக, அந்நாளில் பசுக்கள் பால் குன்றாதிருத்தல் நாட்டின் மூல வளங்களில் முக்கியமான ஒன்றாகக் கணிக்கப்பட்டது.

தற்கால உரையாசிரியர்களில் ஒருவரும் சிந்தனையாளரு மான முனைவர் மு.வ. அவர்களும் பழைய உரையாசிரியர் ஐவரையும் ஒட்டியே தம்தெளிவுரையை அமைத்துள்ளார்.

"நாட்டைக்காக்கும் தலைவன் முறைப்படி காக்காவிட்டால் அந்நாட்டில் பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும். அந்தண ரும் அறநூல்களை மறப்பர்."

இந்துமதக் கோட்பாடுகளின் அடிப்படையில் முன்னோர் கூறிய கருத்துக்களுக்கு அரண் செய்வதாகவே அவருரையும் அமைந்துள்ளது.

மேற்காட்டிய அறுவர் உரையாசிரியர்களும் ஆபயன் என்பதற்கு பசுக்களாற் பெறும் பயன் என்றும் அறுதொழிலோர் என்பதற்கு அறுவகைத் தொழிலுக்கு உரியராகிய அந்தணர் என்றும் பொருள் கொண்டனர்.

தற்கால உரையாசிரியர்களில் ஒருவரான நாவலர் இரா.



படிப்பகம்

www.padippakam.com

நெடுஞ்செழியன் அவர்கள் "அறுவர் உரையாசிரியர் கருத்துரைக்கும் மாறுபட்ட கருத்துடையவராகவே காணப்படுகிறார். நாவலர் ஒரு நாத்திகர் என்பதும் மதக்கோட்பாடுகள், சடங்குகளுக்கு எதிரானவர் என்பதும் நாம் அறிந்ததே. வடமொழியாளர் வேதங்களும் தருமசாத்திரங்களும் வள்ளுவர் கருத்துக்கு முரண் ஆனவை என்பது அவர் உறுதியான கருத்தாகும். ஆயினும் வள்ளுவர் கடவுட் கொள்கையிலும் மதச் சடங்குகளிலும் நம்பிக்கை உள்ளவர் என்பது அவர் நூல்மூலம் தெளிவாகும் உண்மையாகும். நூலாசிரியர் கொள்கைகளுக்கு மாறுபட்ட கண்ணோட்டத்தில் நாவலர் அவர்கள் குறளை நோக்கியிருந்தாலும் அவர் தரும் தெளிவுரை காலத்திற் கேற்ப நாம் ஏற்கத்தக்க சிறப்புடையதாக அமைந்திருக்கிறது.

குறளுக்கு உரையமைக்கும்போது நூலாசிரியரின் உள்ளக் கிடக்கையும் அவர் வாழ்ந்த காலத்துச் சமயக் கோட்பாடுகளும் சடங்குகளும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவாயினும் எடுத்தாண்ட குறளுக்குப் பழைய உரையாசிரியர்கள் உரையமைக்கும் பொழுது இந்துமதக் கோட்பாடுகளைத் தழுவியது தேவையற்ற தாகவே தெரிகிறது.

"அரசன் முறைப்படி நாட்டைக் காக்கவில்லையானால் குடி மக்களின் முயற்சியால் ஆகும் பயன் குன்றிப்போகும். அறுதியிட்ட முக்கிய தொழிலையுடையோர் தம் தொழிலுக்குரிய நூல் அறிவை யெல்லாம் மறந்துவிடுவர்".

இவ்வாறு தெளிவுரை சொல்லும் நாவலர் ஆபயன் என்பதற்கு ஆகும் பயன் என்றும் அறுதொழிலோர் என்பதற்கு முக்கிய தொழில்களையுடையோர் என்றும் பொருள் கொள்கிறார்.

நாவலர் தன் கருத்தை பின்வருமாறு விளக்கிச் சொல்கிறார். "ஆபயன்-வினைத்தொகை. ஆவின் பயன் என்று பொருள்தரும் ஆப்பயன் என்பது பாடமல்ல. அது பொருந்திவராது. அறு தொழில்- வினைத்தொகை அறுதி செய்யப்பட்ட தொழில் வரையறை செய்யப்பட்ட தொழில் எனப்பொருள்படும். அறுதி செய்யப் பட்ட தொழில்களாவன கல்வி கற்பித்தல், உழவுத் தொழில் செய்தல்,



படிப்பகம்

www.padippakam.com

நெசவுத் தொழில் செய்தல், சிற்பத் தொழில் செய்தல், தச்சுத் தொழில் கொல்லுத்தொழில் செய்தல் போன்ற முக்கிய தொழில்கள் செய்தல் போன்றவை".

நாவலர் ஆபயன் என்பதற்கு ஆகும் பயன் என்றும் அறுதொழிலோர் என்பதற்கு முக்கிய தொழிலை உடையோர் என்றும் பொருள் கொள்வது இலக்கணப்படி சரியானதே. அவர் உரை காலத்திற்கும் அறிவிற்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளது.

ஆகவே அமைந்த ஏழு உரைகளிலும் மேற்கண்ட குற ளுக்கு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அமைத்த தெளி வுரையே சிறப்புடையதாய் விளங்கும் தன்மை இனிதே அறியப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# அறப்பெற்றானை

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்**

நீவம் என்னும் அதிகாரத்தில் இடம்பெற்ற இக்குறளுக்கு "தன்னுயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை அது பெறா தனவாகிய மன்னுயிர்கள் எல்லாம் தொழும்" என்று பொருளு ரைத்தார் பரிமேலழகர்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் "தன்னுயிரானது தான் என்று கருதும் கருத்து அறப் பெற்றவனை ஒழிந்தனவாகிய நிலை பெற்ற உயிர்கள் எல்லாம் தொழும்" என்று தம்முரையை அமைத்துச் சென்றனர்.

இங்கே, "தன்னுயிர் தானறப் பெற்றானை" என்பதற்கு "தன் னுயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை" என்று பரிமேலழ கரும், "தன்னுயிரானது தான் என்று கருதும் கருத்து அறப் பெற்றவனை" என்று மணக்குடவரும் பரிப்பெருமாளும் பொருள் கொள்கின்றனர். பரிமேலழகர் கொண்ட கருத்து மணக்குடவர், பரிப் பெருமாள் கருத்திற்கு நேர் எதிரானதாகக் காணப்படுகிறது. இது பரிமேலழகர் "அறப்பெற்றானை" என்பதற்கு "உரித்தாகப் பெற்ற வனை" என்று தவறான பொருள் கொள்வதாலேயே ஏற்படுகிறது. அறுதல் என்னும் பதம் விடுபடல், நீத்தல், நீங்குதல், துறத்தல் முதலிய பொருள்களைத் தரக்கூடியது. இதற்கு உரித்து என்று பரிமேலழகர் பொருள் கொண்டது எவ்விதத்தில் பொருந்துவதோ தெரியவில்லை.

இக்குறளுக்குப் பரிதியார் "தன் ஆத்மா ஈடேறப் பார்ப் பானை, இவனாலே நாமும் ஈடேறுவோம் என்று சகல ஆத்மாவும் தொழும்" என்று கருத்துரை குறித்து வைத்தார். தன்னுயிர், தான் என்னும் முனைப்புக்களிலிருந்து விடுபட்டவனே ஆத்ம ஈடேற்றத்



படிப்பகம்

www.padippakam.com

திற்குத் தக்கவன் என்பது சைவநெறிக் கோட்பாடாகும். இதனாற் றான், சைவநெறிக் கருத்துக்களுக்கு அமைய குறளுரை வழங்கிய வரான பரிதியார் "தன்னுயிர் தானறப் பெற்றானை" என்பதற்கு "தன் ஆத்மா ஈடேறப்பார்ப்பானை" என்று கருத்துரை தந்து சென்றார்.

ஆகவே, பரிதியாரும் மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகி யோர்தம் கருத்து உடையவரே என்பது உய்த்து அறியற்பாலதாம். இக்குறளுக்கான காளிங்கர் உரை கிடைத்திலது.

"தவவலிமையால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்று நீங்கப்பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெரு மையைஉணர்ந்து) தொழும்" என்று இதற்குப் பொருள் சொன்னார் முனைவர் மு.வ. அவர்கள்.

நாத்திகப்பார்வை உடையவரான நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் "தவச் சிறப்பினால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்றுக்கள் நீங்கப்பெற்றவனைப் பிற நிலைபெற்ற மக்கள் எல்லோரும் போற்றிப்புகழுவார்கள்." என்று தெளிவுரை செய்துள் ளார். தவம் என்பது மனவடக்கமே என்பது நாவலர் கருத்து.

இருவர் உரையும் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார் கருத்துக்களை ஒட்டிச்சென்று சிறப்புற்று விளங்குவது தெளிவா கும்.

எது எவ்வாறாயினும், நாவலர் அவர்களும், கலாநிதி மு.வ. அவர்களும் "அறப்பெற்றானை" என்பதற்கு "நீங்கப் பெற்றவனை" என்று பொருள் கொண்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

"தான், தன்னுயிர் (நான், எனது) என்னும் மமதைகளில் இருந்துவிடுபட்டவனை மற்றைய உயிர்கள் எல்லாம் தொழும் என்பதே வள்ளுவர் கூறவந்த கருத்தாகும். மறுதலையாக, "தவத் தைக் கைக்கொண்டு தான், தன்னுயிர் என்னும் முனைப்புக்களிலி ருந்து விடுபடின் மற்றைய உயிர்கள் தொழும் நிலைக்கு உயர லாம்" என்றும் சொல்லலாம். பரிமேலழகர் இக்கருத்தை எடுத்துச் சொல்லத் தவறி, வேறோர் கருத்தை வலிந்து திணிக்கும் குறைக்கு ஆளாகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

இதுகாறும் காட்டியவற்றால் எடுத்தாண்ட குறளுக்குப் பரிமேலழகர் அமைத்த உரை தவறானது என்பதும் மணக்குடவரும் பரிப்பெருமாளும் பரிதியாரும். (இவர்களைத் தழுவி) முனைவர் மு.வவும் நாவலரும் அளித்த உரைகளே சிறப்பானவை என்பதும் இனிது விளங்குவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# நாடுதல்

**நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு.**

இக்குறளுக்குத் "தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் தானேயடையுஞ் செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர். ஆதலால் தேடி வருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா." என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் "தேட வேண்டாத வளத்தினையுடைய நாட்டை நாடு என்று சொல்லுவர். தேடினால் வளந்தருகின்ற நாட்டை நாடு அல்ல என்று சொல்லுவர்" என்றனர்.

முயற்சியால் தேடிச் சேர்ப்பதன் மூலமே தனிமனிதனோ, ஒரு குடும்பமோ, அன்றேல் ஒரு நாடோ வளம்மிக்கதாக அமைய முடியும். இயற்கை வளம்மிக்க நாடு கூட குடிமக்கள் முயற்சியின்றிப் பொருள் தேடும் நோக்கற்ற சோம்பலாளர்களாக அமைவார்களாயின் படிப்படியே சீர்குறைந்து கெட்டுப்போய்விடும்.

உண்மை இதுவாயிருக்க, மூவர் உரையாசிரியரும் "முயன்று தேடாது செல்வம்இயல்பாகவே அமையப்பெற்றது நாடு" என்றும் "தேடினால் செல்வம் தரும் நாடு நாடு அல்ல" என்றும் கருத்துரைவழங்கியிருப்பது முரண்பாடுடையதாகஅமைந்துள்ளது.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழியும் "செய்க பொருளை" என்னும் வள்ளுவன் வாக்கும் செல்வம் முயற்சியால் சேர்க்கப்படவேண்டியதே என்ற உண்மையை வலியுறுத்துவனவாம்.

தற்கால உரையாசிரியர்களான முனைவர் மு.வ. அவர்களும் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கூட மேற்படி



படிப்பகம்

www.padippakam.com

கருத்துடையவர்களாகவே காணப்படுகின்றனர். "முயற்சிசெய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர். தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல." என்று தெளிவுரை தந்தார் மு.வ. அவர்கள்.

நாவலர் தெளிவுரையும் "முயற்சி செய்து தேடாமலேயே நல்ல வளத்தைத் தரும் நாடுகளே சிறந்த நாடுகள் ஆகும் என்று அறிவுடையோர் கூறுவார்கள். முயற்சி செய்து தேடினால் மட்டுமே வளத்தைத்தரும் நாடுகள் நல்லநாடுகள் ஆகமாட்டா" என்றே அமைந்துள்ளது.

முயற்சியால் உயர்ந்து நன்னிலை பெற்ற தற்கால நாடு களின் வரலாற்றை நன்கு தெரிந்த மு.வ. அவர்களும் நாவலரும் பழைய உரையாசிரியர் வழிநின்றே இக்குறளுக்குப் பொருள் சொல்லி யுள்ளமை வியப்புக்குரியதாக இருக்கிறது.

இவர்கள் ஐவரினும் வேறுபட்ட உரையை வழங்குகின்றனர் பரிதியாரும் காளிங்கரும். இவர்கள் கருத்து முன்னையோரினும் சிறந்துவிளங்குகிறது.

"புறத்திலே போய் ஒன்றும் தேடாமல் நானாச் செல்வமும் உண்டாயிருப்பது நாடு. அல்லது நாடல்ல" என்றார் பரிதியார்.

"பிறநாடுகளைத்தேவைக்காக நாடவேண்டிய இன்றியமை யாமையின்றி இயற்கையாகவே எல்லா வளமும் தன்னகத்தே உடை யதே நாடு. தேவைக்காக பிற நாடுகளை நாடவேண்டிய நிலையி லுள்ள நாடு நாடல்ல." என்னும் பரிதியார் கருத்து அனைவரும் ஏற்கத் தக்கதும் சிறப்புடையதுமாகும்.

காலிங்கரும் பரிதியார் போன்றே தன்னுரையை அமைத் துள்ளார்.

"நாடு என்று சொல்லுவர் பெரியோர் யாதினை எனின் புறத்து ஒன்றுபோய்த் தேடவேண்டாத பலவகைப்பட்ட விளைவளம் சிறந்த நாடுகளை. மற்று அல்லவை யாது எனின் நிலத்து விளையும் வளம் புறத்துப் போய்த் தேடுமாறு விளையும் நாடு."



படிப்பகம்

www.padippakam.com

இருவரும் "தேவைக்காக பிறநாடுகளில் கையேந்தாது நாட்டிற்குவேண்டும் வளங்களையெல்லாம் தன்னகத்தேயுடையது நாடாகும். இவ்வாறன்றி பிறர்நாட்டு வளங்களிலேயே நித்தமும் தங்கியுள்ள நாடு நாடல்ல" என்னும் கருத்துடையவர் களாகவே காணப்படுகின்றனர்.

இதன்மூலம் நாட்டிற்குநாடு பண்டமாற்றம், கொடுக்கல் வாங்கல் செய்தலைப் பரிதியாரும் காளிங்கரும் மறுப்பதாகக் கொள்ளமுடியாது. அன்றாட வாழ்வுக்காகப் பிறநாடுகளிடம் கையேந்தாத நிலயில் உள்ள ஒருநாட்டை நாடு என்றும் பிறநாடுகளின் தயவிலேயே தங்கியுள்ள நாடு நாடல்ல என்றும் கொள்ளவேண்டும் என்பதே அவர்கள் கருத்தாகும். இவர்கள் இருவரும் நாடுதல் என்பதற்குப் புறத்தே செல்வம் தேடிச்செல்லுதல் என்று பொருள் கொண்டனர். இக்கருத்து காலத்திற்கும் மக்கள் சிந்தனைக்கும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. ஆகவே மேற்படி குறளுக்கு பரிதியாரும் காளிங்கரும் தந்த உரைகளே சிறந்து விளங்கும் தன்மை தெளிவாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# அதுவல்லது

**கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல**
**தில்லை நிலக்குப் பொறை.**

இக்குறளுக்கு, "கடுங்கோலனாய அரசன் நீதிநூல் முதலிய கல்லாதாரைத் தனக்குப்பகுதியாகக் கூட்டா நிற்கும். அக்கூட்ட மல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிது இல்லை" என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

"கடுங்கோலனாகியஅரசன் அறிவில்லாதாரை அமாத்தியரா கக் கூட்டிக்கொள்ளும் அவ்வரசனல்லது நிலத்துக்குப் பாரம் வேறொன்றும் இல்லை"என்று உரை எழுதினர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

பரிதியார் "பூமிக்கு எட்டு மலையும் எழுகடலும் பாரமல்ல. கொடுங்கோல் மன்னவன் பாரம்" என்றார்.

காலிங்கர் "கல்லாதார் ஆகிய மூர்க்கரை அரசனானவன் தனது அன்பினாற் பிணித்துக்கொள்ளும் நீதிக்கேடு யாது. 'மற்று அதுவல்லது இந்த நிலத்து வாழுகின்ற உயிர்கட்குக் கிலேசபாரம் பிறிது ஒன்றும் இல்லை. எனவே மற்று அது உயிர்கட்கு வெரு வந்த செய்தலுள் ஒன்று" என்று எழுதிச் சென்றார்.

இக்குறளுரையில், 'கடுங்கோலரசன் துணையாகக் கொள்ளு கின்ற கல்லாதாரே நிலத்திற்குப் பாரம்" என்கிறார் பரிமேலழகர்.

"கல்லாதாரைத் துணையாகக்கொள்ளுகின்ற கடுங்கோலர சனே பாரம்" என்கின்றனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

பரிதியார் உரை மேற்படி குறளுக்குச் சரியானதாக அமையாவிட்டாலும் அவரும் "கடுங்கோலரசனே நிலத்திற்குப் பாரம்" என்றே சொல்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

காலிங்கர் உரை, குறள் கூறுவதிலும் மேலதிக பொருளைக் கொண்டிருக்கும் குறைபாடுடையதெனினும் அவரும் "கடுங்கோலரசனே நிலத்திற்கும் பாரம்" என்னும் கருத்துடையவர் என்பது கூர்ந்து நோக்கின் புலனாகும்.

இங்கே பரிமேலழகர் "கல்லாதாரை நிலத்துக்கும் பாரம்" என்று சொல்ல மற்றையோர் கடுங்கோலரசர்களே நிலத்துக்குப் பாரம்" என்கின்றனர்.

"கடுங்கோல் அதுவல்ல தில்லை நிலக்குப் பொறை" என்னுமிடத்தில். 'அது' கடுங்கோலையை சுட்டுகிறது - கடுங்கோல் ஆகுபெயராய் கடுங்கோலரசனைக் குறிக்கும்.

"கடுங்கோலாகிய அதைத்தவிர வேறு பாரம் நிலத்துக்கு இல்லை" என்று வள்ளுவர் தெளிவுறக் கூறியிருந்தும் பரிமேலழகர் கல்லாதாரை "நிலத்துக்குப் பாரம்" என்று பொருள் சொல்வதை வலிந்து அவரிழைக்கும் தவறாகவே கொள்ளவேண்டும்.

கல்லாதாரை நிலத்துக்குப் பாரம் என்று கொண்டாலும். அவரினும் அவரைத் துணையாகக் கொள்ளும் கொடுங்கோலரசனே நிலத்திற்கு மிகையாய பாரமாவான். எனவே வள்ளுவன் அவ்வாரசைனத் தவிர்த்து, கல்லாதாரை கூறியதாகக் கொள்வது எப்படிப் பொருந்தும்?

அதுமட்டுமல்லாது அரசனானவன் குடிகள் அஞ்சுவதும் மந்திரி முதலியவர்கள் அஞ்சுவதும் தான் அஞ்சுவதுமானவை செய்யாமை பற்றிப்பேசம் வெருவந்த செய்யாமை அதிகாரத்தில் வள்ளுவர் கல்லாதார்க்கு அவ்வரசனினும் முதன்மை கொடுத்துப் பேச ஏதுகாரணமுமில்லை. தற்கால உரையாசிரியர்களான முனைவர் மு.வ. அவர்களும் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் பின்னை நால்வரைப் பின்பற்றி "கொடுங்கோலரசனே நிலத்துக்குப் பாரம்" என்ற கருத்துடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

"கடுங்கோலாகிய ஆட்சி முறை கல்லாதவரைத் தனக்கு அரணாகச் சேர்த்துக் கொள்ளும். அது தவிர நிலத்திற்கு சுமை



படிப்பகம்

www.padippakam.com

வேறு இல்லை'' என்று தெளிவுரை எழுதினார் முனைவர் மு.வ. அவர்கள்.

நாவலர் ''கொடுங்கோல் மன்னன் கல்லாத முரடர்களைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொள்ளுவான். நிலத்துக்குப் பெருஞ்சுமை அப்படிப்பட்ட அரசனேயாவானே யல்லாமல் வேறு யாரும் இல்லை'' என்று எழுதினார்.

ஆகவே, எடுத்தாண்ட குறளுக்கு பரிமேலழகர் உரைத்த பொருள் தவறான தென்பதும் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் ஆகியோரைத் தழுவி மு.வவும் நாவலரும் தந்த உரைகளே சிறப்பானவை என்பதும் தெளிவாகும்.


படிப்பகம்

www.padippakam.com

# அழுக்கறுப்பான்

**கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம்
உண்பதூம் இன்றிக் கெடும்.**

“பிறனொருவன் மற்றொருவனுக்குக் கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குமவனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக்கெடும்'' இவ்வாறு மேற்கண்ட குறளுக்குப் பொருளுரைத் தார் மணக்குடவர்.

மணக்குடவரைத் தழுவிக் குறளுக்குத் திருந்திய உரை ஈந்து புகழ் கொண்டவரான பரிமேலழகர் "ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம் உடுக்கப் படுவதும் உண்ணப்படுவதும் இன்றிக் கெடும்'' என்றார்.

பரிமேலழகர் போன்றே பரிப்பெருமாள் உரையும் அமைந் துள்ளது.

இங்கே. மணக்குடவர் "ஒருவன் இன்னொருவனுக்குக் கொடுப்பதனைப் பொறாமை கொள்பவனுடைய சுற்றத்தினர் உடையும் உணவும் இன்றிக் கெடுவர்'' என்கின்றார்.

மூவர் உரையாசிரியரும் "சுற்றங்கெடும்''. என்றனரேயன்றி அவன் (அழுக்கறுப்பான்) அடையும் கேடு பற்றிக் கூறினாரல்லர். இது எய்தவன் இருக்க அம்பை நோகும் தன்மைத்தாகும்.

ஒருவன் மனம், மொழி, மெய்களாற் செய்யுங் கேடு அவனையே சூழும். அது அவன் சுற்றத்தினர்க்கோ, பிறர்க்கோ கேடு செய்யும் என்பது வள்ளுவர்க்கே உடன்பாடான கொள்கை அன்று. மதநூல்களும் 'செய்தவன் கேடு அவனையே சாரும்' என்றே கூறு கின்றன. கேடு செய்வானை எச்சரிப்பதற்காக கேடு அவனை மட்டு மல்லாது சுற்றத்தினரையும் சூழும் என்று கூறுவது உலக வழக்கே



படிப்பகம்

www.padippakam.com

ஆயினும் அவனைத் தவிர்த்து சுற்றத்தினரைச் சூழுமென்பது நூல் வழக்கிலோ உலக வழக்கிலோ இல்லாததாகும். இது இவ்வாறிருக்க. செய்தவன் கேடு அவனிருக்கச் சுற்றத்தினரைச் சூழும் என்பது எவ்விதத்திற் பொருந்தும்?

இவ்வுண்மையை உணர்ந்த பரிமேலழகர் விளக்கவுரையில் ''சுற்றங்கெடும். எனவே அவன் கேடு சொல்லாமலேயே பெறப்பட்டது'' என்று கூறிச் செல்கிறார்.

''அழுக்கறுப்பான் சுற்றம்'' என்பதற்கு அழுக்கறுப்பவனது சுற்றம்'' என்று பொருள் கொள்வது தவறானதாகும்.

அழுக்கறுப்பான் சுற்றம் என்பதை (அழுக்கறுப்பானும் சுற்றமும் என்பதன்) உம்மைத் தொகையாகவோ அன்றேல் (''அழுக்கறுப்பான் சுற்றமொடு'' என்பதன்) மூன்றாம் வேற்றுமைத் தொகையாகவோ கொண்டு பொருள் காண்பதே சரியானதாகும்.

கொடுப்ப தழுக்கறுப்பானும் சுற்றமும் உடுப்பதும் உண்பதூம் இன்றிக்கெடும்'' என்று கொள்ளும் போது ஒருவன் இன்னொருவனுக்குக்கொடுப்பதனைப் பார்த்து பொறாமை கொள்பவனும் அவனுடைய சுற்றத்தினரும் உடுக்கஉடையும் உண்ண உணவும் இன்றிக் கெட்டுப்போவர்'' என்பது கருத்தாக அமைகிறது ''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றமொடு உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்'' என்று கொள்ளும்போது'' ஒருவருக்கொருவர் கொடுப்பதனைப் பார்த்து பொறாமை கொள்பவன் சுற்றத்தினருடன் உடுக்க உடையும் உண்ண உணவும் இன்றிக் கெட்டுப் போவான்'' என்று பொருள் கிடைக்கிறது.

இப்படி ''அழுக்கறுப்பான் சுற்றம்'' என்பதை உம்மைத் தொகையாகவோ அன்றேல் மூன்றாம் வேற்றுமைத் தொகையாகவோ கொண்டு காணும் பொருள்மூவரினும் சிறப்புடையதாக அமைகிறது.

தமிழ்ப் பேராசிரியரான முனைவர். மு.வ. அவர்கள் கூட மூவரைப் போன்றே தன் தெளிவுரையைக் கூறியுள்ளார். ''பிறர்க்கு


படிப்பகம்

www.padippakam.com

உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப் படுகிறவனுடைய சுற்றம் உடையும் உணவும் இல்லாமற் கெடும்''

சிந்தனைத் திறனாற் பெரும் புகழ் கொண்டவரான மு.வ. அவர்கள் கூட ''அழுக்கறுப்பான் கேடு கூறாது. அவன் சுற்றத்தினர் கேடு கூறுவது எவ்விதத்தில் நியாயமாகும்?'' என்று சிந்தித்தார் அல்லர்.

இவர்கள் நால்வரினும் வேறுபட்ட உரையை வழங்குகின்றனர் பரிதியாரும் காலிங்கரும்.

''ஒருவருக்கொருவர் செய்யும் உபகாரம் கண்டு பொறாத மனத்தனுக்கும் அவன் சுற்றத்தார்க்கும் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்'' என்றார் பரிதியார். காலிங்கர் உரையும் பரிதியார் உரையாகவே காணப்படுகிறது. எனவே இருவரும் ''அழுக்கறுப்பான் சுற்றம் என்பதனை உம்மைத் தொகையாகவே கொண்டனர் என்பது தெளிவாகிறது இதனால் இவர்கள் உரை முன்னையோரினும் சிறந்த பொருளைத் தந்து நிற்கின்றது.

அறிவுக்கு முதன்மை கொடுத்து எதனையும் நோக்குபவரும் சிறந்த தமிழறிஞருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பின்வருமாறு தன் தெளிவுரையை வரைந்துள்ளார்.

''பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருள் உதவியைக் கண்டு பொறாமை கொள்பவன் மட்டுமல்லாமல் இவனுடைய சுற்றத்தாரும் உடுக்க உடையும் உண்ண உணவும் இல்லாமற் கெட்டுப் போவார்கள்.''

நாவலரும் ''அழுக்கறுப்பான் சுற்றம்'' என்பதைப் பரிதியார் காலிங்கர் வழிநின்று உம்மைத் தொகையாகவே கொண்டுள்ளார். இதனால் இவருரையும் சிறந்த பொருளைத் தந்துநிற்கிறது.

ஆகவே, எடுத்தாண்ட குறளுக்குப்பரிதியாரும் காலிங்கரும் நாவலரும் தந்த உரைகளே தெளிவானவையாம் தன்மை உணரப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

# அவரன்ன ஒப்பாரி

**மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம் கண்டதில்.**

இக்குறளுக்கு "வடிவான் முழுதும் மக்களை ஒப்பர் கயவர்; அவர் மக்களை ஒத்தாற் போன்ற ஒப்பு வேறு இரண்டு சாதிக்கண் யாம் கண்டதில்லை" என்றுஉரைஎழுதினார் பரிமேலழகர்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் "மக்களையொப்பர் கயவர்; அம்மக்களையொக்குமாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்றொன்று கூறப்படுமவற்றில் யாங்கண்டறிவது இல்லை" என்பர்.

"கை, கால் முதலிய புறத்து உறுப்பெல்லாம் கண்ட இடத்து விலங்கு ஒத்தலன்றி மக்கள் ஒப்புடையார் இக்கயவரும். ஆனால் மற்று அம்மக்கள் பண்புடையோர் தமது பண்பு ஒப்புமை சிறிதும் அக்கயவர்பால் யாம் கண்டது இல்லை" என்று உரை வரைந்தார் காலிங்கர்.

புத்துரைகாரர்களில் ஒருவரான முனைவர் மு.வ. அவர்கள் மக்களே போல் இருப்பர் கயவர். அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமை வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் யாம் கண்டதில்லை" என்று தெளிவுரை அமைத்தார்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "கீழ்மக்கள் தோற்றத்தால் முழுதும் நன்மக்களைப் போலவே காணப்படுவார்கள். அவர்களைப் போன்று பண்புகளால் வேறுபட்டு உடலுருவத்தால் ஒத்துத் தோன்றுகின்ற வேறு இருவகைப் பொருள்களை யாம் பார்த்ததே இல்லை" என்று தன்தெளிவுரை நூலில் எழுதியுள்ளார்.

இக்குறளிற் "கயவர் பண்பிற் கீழானவர்கள்" என்பதே வள்ளுவர் கூறவந்த உண்மையாகும்.


படிப்பகம்

www.padippakam.com

மேற்காட்டிய உரையாசிரியர்களிற் காலிங்கர் தவிர்ந்த ஏனையோர் "அவரன்ன ஒப்பாரி யாம் கண்டதில்" என்னும் தொடருக்கு "மக்களும் கயவரும் போலும் வடிவ ஒப்புமையுடைய வேறு இருவகைப் பொருள்களை யாம் கண்டதில்லை" என்றவாறு உரை எழுதினர். இது மக்களேபோலும் கயவர்" என்னும் கூற்றுக்கு மேலும் வலுச்சேர்க்கும் விளக்கமாக "அமைந்திருக்கிறதேயன்றி வேறோர் கருத்தைச்சொல்வதாக இல்லை.

இவ்வாறு, முதலில் ஒரு கருத்தைச் சொல்வதும் பின் அதே கருத்துக்கு வலுச்சேர்ப்பதற்காக அதனை விளக்கிச் சொல்வதும் இக்குறளைப் பொறுத்த மட்டில் வள்ளுவர் வழியாய் இருக்க முடியாது. எடுத்துக்கொண்ட கருத்தைப் புரியத்தக்க முறையில், சுருக்கமாக ஓரேமுறையிற் கூறும் ஆற்றல் அவருக்கு நிறைய உண்டு. இதனாற்றான், ஏழுசீர்கள் கொண்டதான குறள் வெண்பாவைத் தன் நூலிற் கையாண்டு, அவராற் பெரு வெற்றி கொள்ள முடிந்தது.

மேலவர்கள் அனைவரும் "அவரன்ன" என்பதில் உள்ள "அன்ன" உவமை உருபு எனக்கொண்டதால் இவ்வாறு பொருள் கூறநேரிட்டது.

பரிதியார் "பொல்லாதவரும் நல்லவர் போல இருப்பர்; குணத்தினாற் கயவர் என்று காணப்படும்" என்று எழுதினார்.

காலிங்கர், "கயவர் மக்கள் ஒப்புடையார்; ஆனால், மக்களுக்கே உரிய பண்பினை அவர்மாட்டு யாம் கண்டதில்லை" என்றவாறு உரை சொல்லியுள்ளார். இது, இருதிறத்தாரும் உருவத்தில் ஒப்புடையராயினும் கயவர்பண்பிற் கீழானவர்கள்" என்னும் பொருள் தந்துநிற்பதால் மற்றையோர் உரையினும் சிறந்ததாக விளங்குகிறது.

மேற்படி குறளுக்கு, காலிங்கரினும் சிறந்த உரையொன்று கிடைத்துள்ளது. "வடிவால் முழுதும் மக்களைப் போன்றிருப்பர் கயவர். ஆனால் அவர் ஒப்பானவர் பிறரை யாம்கண்டதில்லை" என்று கட்டுரையொன்றில் உரை வரைந்துள்ளார் செருமனிய நாட்டுப் புலவரான சூபனோர் என்பார்.


படிப்பகம்

www.padippakam.com

இவர், "அவரன்ன" என்பதில் உள்ள அன்ன அசைச் சொல்லெனக் கொண்டு, அதனைத் தவிர்க்கிறார். அசைச் சொல் பாக்களில் ஓசைக் குறைவினையும் இலக்கண வழுவினையும் தவிர்ப்பதற்காக வருவது; பொருளற்றது.

'மக்களே போல்வர் கயவர் - வடிவால்
முழுதும் மக்களைப் போன்றிருப்பர் கயவர்.
அவர் ஒப்பாரி யாம் கண்டதில் - ஆனால்,
(பண்பில்) அவரை ஒப்பானவர் பிறரை
யாம் கண்டதில்லை'

என்று அவர் உரைசொல்கிறார். இவ்விடத்தே 'அவர்' இரண்டாம் வேற்றுமைத் தொகையாகும். இதனாற் "கயவர் கீழானவர்" என்பதும் அவரினும் பண்பிற் கீழானவர் பிறரிலர் என்பதும் பெறப்பட்டன.

இக்குறளுரையில், வள்ளுவர் உள்ளக்கருத்தை மிகச் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளார் சூபனேர். மாபெரும் தமிழ்ப் புலவர்கள் வகுத்த உரைகள் அனைத்தினும் பிறமொழியாளரான சூபனேர் உரை சிறந்து நிற்பது நினைக்கும் தோறும் வியப்பளிப்பதாகும்.


படிப்பகம்

# எவ்வம் உரையாமை ஈதல்

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள.**

இக்குறளுக்கு "யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட் சொல்லாமையும், அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும், இவை இரண்டும் உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே" என்று உரை எழுதினார் பரிமேலழகர்.

"இரந்து வந்தார்க்கு இலன் என்னா நின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும் குடிப்பிறந்தான் மாட்டே உளதாம்" என்றனர் பரிப் பெருமாளும் மணக்குடவரும்.

"தன்னிடத்திலே ஏற்றவன் பிறத்தியிலே போய் எனக்கு என்று சொல்லாதவாறு மிடிதீரக் கொடுப்பது குடிப்பிறந்தார்க்கு வர வித்தை" என்று உரை வரைந்தார் பரிதியார்.

காலிங்கர் "மற்றெவ்வாற்றானும் தம்மாட்டு வந்தோர் யாவர்; மற்றவர் 'எமக்கு வகையிலேம்' என்று சொல்லும் இத்துயருறு சொல்லினைச் செவிகேட்பச் சொல்லுதற்கு முன்னமே கொடுத்தல் யாவர் மாட்டுளவோ எனில், குலமரபுடையோன் மாட்டே உளவாம்' என்றார்.

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் "இரந்து வருபவனிடம் தான் வறுமையுடையவன் என்னும் துன்பந்தரும் சொல்லைக்கூறாது கொடுப்பது என்பது உயர்ந்த குடிப்பிறந்தவனிடம் மட்டுமே இருக்கும் பண்பாகும்" என்று தெளிவுரை செய்தார்.

"யான் வறியன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன்



படிப்பகம்

www.padippakam.com

உரைப்பதற்கு முன் அவனுக்குக் கொடுக்கும் தன்மை நல்ல குடிப் பிறப்பு உடையவனிடம் உண்டு'' என்று தெளிவுரை எழுதினார் தமிழறிஞர் மு.வ. அவர்கள்.

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்'' என்பதற்கு, "யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் துன்பத்தைப் பிறர்க்குச் சொல்லாது கொடுத்தல்'' எனப்பொருள் சொன்னார் பரிமேலழகர்.

"இரந்து வந்தார்க்கு இப்பொழுது என்னிடம் எதுவுமே இல்லை எனும் தன் துன்பத்தைக்கூறாது கொடுத்தல்'' எனப் பொருள் உரைத்தனர் பரிப்பெருமாளும் மணக்குடவரும்.

"இரந்து வந்தவன் மீண்டும்மீண்டும் பிறர்பால் போய் யான் வறியன் எனும் துன்பத்தைக்கூறி இரக்காத வகை கொடுத்தல்'' என்பார் பரிதியார்.

காலிங்கர், "இரப்பான் யான் வறியன் எனும் துன்பந்தரும் சொல்லை உரைப்பதற்கு முன்னே ஈதல்'' என்பார்.

விளக்கவுரையில் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் ஆகியோர் கொண்ட பொருள் பற்றிக் குறிப்பிடும் பரிமேலழகர், நால்வர் உரைகளுடனும் உடன்பாடுடைய வராகவே காணப்படுகிறார்.

புத்துரைகாரர்களான பேராசிரியர் மு.வ. அவர்கள் காலிங்க ரையும், நாவலரும் கலைஞரும் மணக்குடவரையும் தழுவித் தத்தம் உரைகளை அமைத்துள்ளனர்.

இக்குறளுக்கான உரைகள் அனைத்துமே நயக்கத்தக்கவை யாகவுள்ளன. உரையாசிரியர் அனைவர் உரைகளும் வேறுபாடுடை யவாயினும் பொருத்தமுடையவாகவும் சிறப்புடைய வாகவும் திகழ்வது எடுத்தாண்ட குறளுக்குரிய தனிச்சிறப்பாகும்.


படிப்பகம்

www.padippakam.com

# வித்துமிடல் வேண்டுங் கொல்லோ?

**வித்துமிடல் வேண்டுங் கொல்லோ மிசைவிருந்பி மிச்சில் மிசைவான் புலம்.**

இக்குறளுக்கு. "விருந்தினரையூட்டி மிக்கவுணவை உண்ணுமவன் புலத்தின்கண் விளைதற்பொருட்டு விதைக்கவும் வேண்டுமோ? (தானே விளையாதோ)" என்று உரை எழுதினர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

"முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனை தான் மிசைவானது விளைபுலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ? (வேண்டா)" என்றவாறு உரை எழுதினார் பரிமேலழகர்.

"விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது கழனிக்கு எருப்போட்டு நீர்தேக்கினதுபோல் ஒன்று நூறாயிரம் விளையும்" என்றார் பரிதியார்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "வந்த விருந்தினரை உண்பித்து மிஞ்சிய உணவைத் தான் உண்பவனது நிலத்தில் விதைத்த விதைக்கு வேலிபோட்டா காக்க வேண்டும்" (ஊராரே கண்காணிப்பாராதலால் வேண்டுவதில்லை) என்று தெளிவுரை செய்தார்.

"விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?" என்று தெளிவுரை தந்தார் தமிழறிஞர் மு.வ. அவர்கள்.

"விருந்தினருக்கு முதலில் உணவளித்து மிஞ்சுவதை உண்டு வாழும் பண்பாளன் தன் நிலத்திற்குரிய விதையைக் கூட



படிப்பகம்

www.padippakam.com

விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தாமல் இருப்பானா?'' என்று உரை வரைந்துள்ளார் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

உரையாசிரியர் அனைவரும் ''மிசைவிரும்பி மிச்சல் மிசை வான் புலம் வித்துமிடல் வேண்டும் கொல்லோ?'' என்று கொண்டு கூட்டி இக்குறளுக்குப் பொருளுரைக்கின்றனர்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், மு.வ. ஆகியோர் ஒரே கருத்துரையே தந்துள்ளனர்.

''விருந்தினர்க்கு உணவளித்து மிஞ்சியதைத் தானும் தன் குடும்பமும் உண்ணும் இல்வாழ்வானின் நிலத்தில் விதை விதைக்க வேண்டியதில்லை. அங்கு உணவு தானே விளையும்'' என்றவாறு அவர்கள் எழுதியுள்ளனர்.

''விதையின்றி நிலத்தில் உணவுதானே விளையும்'' என்பது அறிவுக்குப்பொருந்தாது என்பதை உரையாசிரியர்கள் அறியாரல்லர்.

இத்தகைய உயர்வுநவிற்சிக் கருத்துக்கள் விருந்தோம்பும் பண்புக்கு பெருமை சேர்ப்பதற்காகவே உருவாக்கப்படுகின்றன. உயர்வு நவிற்சி ஒரு கருத்தை மிகைப்படுத்திக் கூறும் அணியென் பதும் இயல்பு நவிற்சியினின்று முற்றிலும் மாறுபட்டது என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியவை யாகும்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தான்கொண்ட பகுத்தறிவுக் கொள்கைக்கேற்ப உரையை ஆக்கியுள்ளார்.

''மிசைவிரும்பி மிச்சின் மிசைவான் புலம் வித்து(க்கு) மிடல் வேண்டுங்கொல்லோ?'' என்று இவர்கொண்டு கூட்டியுள் ளார். மிடல், மிடர் என்பதன் இலக்கணப் போலி எனக்கூறி வேலி எனப்பொருள் கொள்கிறார் நாவலர்.

இதனால் ''விருந்தோம்பி மிஞ்சியதைத் தானுண்ணும் இல் வாழ்வானின் நிலத்தில் விதைத்த விதைக்கு வேலிபோட்டா காக்க வேண்டும்? (ஊராரே காப்பர்)'' என்றவாறாகப் பொருள் சொல்கிறார் அவர்.



படிப்பகம்

www.padippakam.com

கலைஞர் "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ?" என்பதற்கு தன் நிலத்திற்குரிய விதையைக்கூட விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தாமல் இருப்பானா?" என்று உரை எழுதுகிறார்.

முதலில் விருந்தினர்க்கு உணவளித்து அவர்கள் புசித்து மிஞ்சியதைத் தானுண்ணும் இயல்புடைய இல்வாழ்வான் வந்த விருந்தினர்க்கு உணவளிக்க விதைபொருளன்றி வேறொன்றும் இல்லாத நிலையில் அவர்க்கு அவ்விதை பொருளை உணவாக்கி அளியாது நிலத்தில் விதைப்பானோ? ஒருபோதுமே விதைக்க மாட்டான்.

"எத்தகைய வறுமையிலும் உழவன் விதைப்புக்கென்று வைத்திருக்கும் வித்தை உணவாக்கித் தான் உண்ண விரும்ப மாட்டான். விருந்தினர்க்காக அதனையும் உணவாக்கி அளிப்பான் என்பதே இங்கு கலைஞர் கூறும் உரையின் சாரமாகும்.

இந்நூற்றாண்டின் சிறந்த தமிழறிஞர்களில் ஒருவரும் சிவ நெறிச் செல்வருமாகிய அரசஞ் சண்முகனார் என்ற புலவரும் இக் கருத்தையே கொண்டிருந்ததாக அறிகிறோம்.

சேக்கிழார், இளையான் குடிமாற நாயனார் புராணத்தில் இத்தகைய ஒரு விருந்தோம்பலை எடுத்துக்காட்டுவது இங்கு நோக்கற்பாலதாம்.

பொதுவுற நோக்கின் பரிதியார் தவிர்ந்த அனைவர் உரைகளும் ஒவ்வொரு விதத்திற்சிறந்து விளங்குந்தன்மை எம்மனோர்க்கு இன்பம் பயப்பதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# சாவா மருந்து

**விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

இக்குறளுக்கு, "உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினும் தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல் விரும்புதன் முறைமையுடைத்து அன்று". எனப் பொருள் சொன்னார் பரிமேலழகர்.

"விருந்தினர் இற்புறத்தாராகத் தானே உண்டல் சாவாமைக்கு உண்ணும் மருந்தாயினும் வேண்டும் தகுதியுடைத் தன்று" என்று உரை எழுதினர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

"விருந்துபுறத்திலே இருக்கத்தான் உண்பது நன்றல்லது. நஞ்சாகிலுங் கூட விருந்து புசிப்பது நன்று" என்றார் பரிதியார்.

"விருந்து தன் கடைப்புறத்ததாகப் பெற்று வைத்துத் தான் அகத்திலிருந்து உண்டலாகின்ற இது சாவாப் பதந் தருவதாகிய அமரர் உலகத்து அமுதமேயாயினும் விரும்பும் பான்மை நன்றன்று. தானுண்டு சாகின்ற சோற்றினை மற்றில்லறத்திற்கு நல்வழிப்பாடாகிய விருந்து தன் கடைப்புறத்ததாகப் பெற்றுவைத்து மற்றிதனைத் தானுண்டல் எக்கூற்றினிடத்ததோ அறிகிலேன்" என்றார் காலிங்கர்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "வீடுதேடி வந்த விருந்தினர் வெளியே உட்கார்ந்திருக்கத், தான் மட்டும் வீட்டுக்குள்ளே இருந்து உணவு உண்ணுவது என்பது, அப்படி உண்ணுவது சாவாமைக்குக்காரணமாகும் மருந்தே என்றாலும் அந்தச் செயல் விரும்பத்தக்கது அல்ல." எனத்தெளிவுரை அமைத்தார்.

"விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான்


படிப்பகம்

www.padippakam.com

மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத் தக்கது அன்று'' எனத் தெளிவுரை எழுதினார் முனைவர் மு.வ. அவர்கள்.

இங்கே-பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், மு.வ., நாவலர் ஆகியோர் சாவாமருந்து என்பதைச் (சாவாமை சகமருந்து எனப்பகுத்து) சாவாமைக்குக் காரணமாகிய மருந்து எனக் கொள்கின்றனர். இவர்களில் நாவலர் தவிர்ந்த ஏனையோர் இது சாவா நிலையை அளிக்கவல்லதாகிய அமிழ்தத்தைக் குறிப்பதாகக் கொண்டனர்.

பரிதியார் சாவாமருந்து (சாவு சக ஆம் சக மருந்து எனக் கொண்டு) சாவு ஆவதற்கான மருந்து எனப்பொருள் கண்டார். சாவை ஆக்கவல்லதாகிய நஞ்சை இது குறிக்கின்றது. ''நஞ்சாயினும் பிறர்க்குக் கொடுத்து உண்ணவேண்டும்'' என்னும் நாட்டு மொழி வழக்கை ஒட்டிப் பரிதியார் இவ்வாறு பொருள் கொண்டார் போலும்.

பரிமேலழகர் விளக்கவுரையில் ''விருந்தின்றியே ஒருகால் தானுண்டலைச் சாவாம் என்பர் உளராயினும் அதனை ஒழிக வென்றுரைப்பினும் அமையும்'' என்று எழுதியுள்ளார். கைக்கெட்டாது அழிந்து போனவையாகச் சொல்லப்படும் தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர், மற்றும் பெயரறியப்படாதோர் உரைகளில் இத்தகைய கருத்து இடம் பெற்றிருக்கலாம் என்று கருதுவதில் தவறேதும் இல்லை. இவர்கள் எடுத்தாண்ட குறளை,

''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம்.'' என்றும்

''மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'' என்றும்

இரு வசனங்களாகக் கொண்டு பொருள் சொல்லியுள்ளனர். இங்கே ''சாவா மருந்து'', ''சாவாம் சக மருந்து'' எனப் பகுக்கப் பட்டுள்ளது.

சோழவந்தான் அரசஞ் சண்முகனார் என்ற புலவரும் இக் கருத்தையே கொண்டிருந்தார் என்பதைப் பின்வருமாறு பேராசிரியர்


படிப்பகம்

www.padippakam.com

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் "அலையும் கலையும்" நூலிற் கூறுகிறார்.

"அமிர்தத்தைச் சாவா மருந்து" என்னும் நெடிய தொடராற் குறித்தல் வேண்டுமா?

மருந்து என்னும் சொல்லுக்கே அமிர்தம் என்னும் பொருள் இருக்க "சாவாமருந்து" என்பது மிகை அன்றோ? "மருந்தே ஆயி னும் விருந்தோடுண்" என்ற ஆன்றோர் வாக்கில் மருந்து என்பது அமிர்தத்தைக்குறிக்கின்றதன்றோ? சொற்செறிவும் பொருட்சிறப்பும் உடைய திருக்குறளில் மிகையாக ஒருசொல் வருமா? இவ்வாறு தடைகளையெல்லாம் சொல்லிவிட்டு 'சாவா மருந்து' என்பதற்குப் புதியதோர் பொருளுரைத்தார் அவர்.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம்(ஆதலால்) மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' என்று கொண்டாற் பொருள் சிறக்கும்.

'விருந்தாக வந்தவரை வீட்டிற்கு வெளியே விட்டுத் தனித் திருந்து ஒருவன் வயிறார உண்பது தான் வாழ்வதற்காகவன்றோ? அப்படி உண்பது வாழ்வு அன்று; அதுவே சாவாகும்' என்று பொருள் கூறி அதனைப் பலவாறாக விளக்கினார் அரசஞ் சண்முகனார்.

"வீடு வந்த விருந்தினர் வெளியே இருக்க தான் மட்டும் உண்பது ஒரு இல்லறத்தானுக்குரிய வாழ்க்கைமுறை அன்று. இத்தகைய வாழ்க்கை முறை சாவாகும். உண்பது அமிழ்தாயினும் இத்தகைய செயல் கூடாது" என்னும் இக்கருத்தே அனைத்தினும் சிறந்ததாகத் தெரிகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# கணமேயும் காத்தல் அரிது

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

இக்குறளுக்கு, "துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்றமுனிவரது வெகுளி தான் உள்ள அளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது" என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

"குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார் மாட்டு உளதாகிய வெகுளியால் வருந்தீமையைச் சிறிதுபொழுதாயினும் வாராமற் காத்தல்அரிது" என்று உரை வரைந்தனர். மணக் குடவரும் பரிப்பெருமாளும்.

மேலவர் உரையாசிரியர் மூவரும் "பெரியோர் கோபம் சிறு பொழுதே தோன்றி மறைந்தாலும் அதனால் வரும் தீமையினின்று தப்புதல் யாராலும் இயலாது" என்னும் கருத்துடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதற்கு மணக்குடவரும் பரிப்பெருமாளும் முனிவர் ஒருவர் கோபத்திற்காளாகி நகுசன் என்பான் பெரும் பாம்பாகினன் என உதாரணம் கூறுகின்றனர்.

குறள் ஆசிரியரும் பெரியோர் வெகுளியின் ஆற்றலுக்கு எடுத் துக்காட்டாக இந்திரன் கதையைக் குறிப்பிடுகிறார். "அகலிகையைக் களவிற்கூடி கௌதம முனிவரின் கோபத்திற்காளாகி, பார்த்தோர் அரு வருக்கத்தக்க உருவம்பெற்று உலவிய இந்திரன்கதை ஐந்துமவித்த பெரியோர் ஆற்றலுக்குத் தக்கசான்றாகும்" என்கிறார் வள்ளுவர்.



படிப்பகம்

www.padippakam.com

கல்வியிற் பெரியராகிய கம்பர் இராம காதையில் வசிட்ட முனிவர் இராமனுக்கு அறநெறிகளைத் தொகுத்து உரைக்கின்ற இடத்திலே பெரியோர்கள் பற்றிப் பேசுகிறார்.

**அந்தணாளர் முனியவும் ஆங் கவர்**
**சிந்தை யாலருள் செய்யவும் தேவரில்**
**நொந்துளாரையும் நோய் தவிர்ந் தாரையும்**
**மைந்த எண்ண வரம்பு முண்டாங்கொலோ**

(மந்.சூழ்ச்.படலம்)

இங்கு "முனிவர்கள் வெகுளிக்கு ஆளாகித் துன்புற்றவர்களும், அவர்களின் ஆசிக்கு ஆளாகி துன்பம் ஒழிந்து நல்வாழ்வு கண்ட வர்களும் எண்ணிலடங்கார்" என்கிறார் கவிச்சக்கரவர்த்தி.

"சாது மிரண்டாற் காடு தாங்காது" என்னும் முதுமொழி "துறவிகள் வெகுளின் காடுகூடத் தீப்பற்றிவிடும்" என்றுசொல்கிறது.

ஆகவே, பரிமேலழகர் மணக்குடவர் பரிப்பெருமாள் ஆகியோர் அமைத்த உரைகள் மக்களிடையே வாய்வழி வழங்கி வந்த கதைகளையும் நம்பிக்கைகளையும் அடிப்படையாகக்கொண்டவை மாத்திரமன்றி இலக்கியச்சான்றும் கொண்ட சிறப்புக்குரியவை என்பது தெளிவாகிறது.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இத்தகைய புராணக் கதைகளிலே சிறிதும் உடன்பாடிலாதவராயினும் "பெரியோர் கோபத்தின் விளைவினின்று பிறர் யாருமே தம்மைக் காத்துக் கொள்ள இயலாது." அவர்களால் வெகுளப்பட்டோர் தண்டனைக்கு ஆளாவது உறுதி" என்னும் கருத்துடையவராகவே காணப்படுகின்றார். அவர் தெளிவுரை பின்வருமாறு அமைந்துள்ளது.

"பண்பு என்னும் குன்று ஏறி நிற்கும் துறவிகள் போன்ற பெரியோர்களின் சினம் சிறுநொடிப் பொழுதுதான் நிலைத்து நிற்கும் என்றாலும் அச்சினத்தைத் தடுத்தல் என்பது மற்றவர் யாருக்கும் இயலாத செயலாகும்."

பழம்பெரும் உரையாசிரியரான பரிதியார் உரை கருத்துத்


படிப்பகம்

www.padippakam.com

தெளிவற்றதாக இருக்கிறது."சற்குணம் என்னுமலையின் உச்சியிலே நின்றார் கோபம் கணமேனும் காக்கமாட்டார்" இவ்வுரை "பெரியோர் கணப்பொழுது கூடத் தம்மகத்தே இருக்கும்படி விட்டுவைக்காது வெகுளியை அழித்துவிடுவர்" என்றும் "அவர்கள் கணப்பொழுது கூட வெகுளியைத் தம்மகத்தே வைத்திராது உடனேயே (வெளிக் காட்டி) வெகுளப்பட்டோரைத் தண்டித்து விடுவர்" என்றும் இரு பொருள் தந்து நிற்கிறது.

"நல்ல பண்புகளாகிய மலையின் மேல் ஏறி நின்ற பெரியோர் ஒரு கணப்பொழுதே ஆயினும் சினங்கொண்டு காத்தல் அரிது" என்று தெளிவுரை எழுதும் பேராசிரியர் மு.வ. அவர்கள் "பெரியோர் சினங்கொள்வதும் இல்லை. அதனைக்காப்பதும் இல்லை" என்னும் கருத்துடையவராகக் காணப்படுகிறார்.

சினங்கொள்வது இல்லையாமின் அதனைக் காத்தல் பற்றிப் பேச வேண்டிய தேவையில்லை. ஆகவே இவருரை பொருட் சிறப்பின்மை உடையதாய் விளங்குவது தெளிவாகிறது. காலிங்கர், பாவேந்தர், கலைஞர் ஆகியோர் இக்குறளுரையில் ஒத்த கருத்து டையவர்களாய் உள்ளனர்.

"ராசத, தாமத, சாத்துவிகம் என்கின்ற குணங்களும், காம வெகுளி மயக்கம் என்கின்ற குணவிகாரங்களும், அழல் சீதம் இடர் இன்பம் மானம் அவமானம் என்று எண்ணப்படுகின்ற குணம் அனைத்தின் தொகையுமாகிய குன்றைக்கடந்து வீட்டின்பத்து நிலை நின்றோராகிய நீத்தோரை மற்று அவ்வெகுளியானது தன் மாட்டுச் சிறிதுபொழுது நிறுத்திக்கொண்டு நிற்கமாட்டாது" என்பது காலிங்கர் உரை.

இதனால், "பெரியோரை வெகுளியானது சிறிதுபொழுதுகூட ஆட்கொள்ள முடியாது" எனக் கூறுகிறார் காலிங்கர்.

கலைஞர் மு.க. அவர்கள் "குணக் குன்றுகளான பெரியவர் கள் கோபம் கொண்டால், அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது" என்று உரை சொல்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

"காமம் வெகுளி மயக்கம் என்று சொல்லப்படுகின்ற மலைத் தலையில் அசைவின்றி நின்றார். அம்முக்குணங்களில் ஒன்றான வெகுளியை கண் இமைக்கும் நேரம்கூட அவ் வெகுளிப் பட்டார்க் குத் தீமை உண்டாகும்படி வைத்துக் காப்பது அரிது" என்று உரை எழுதுவார் பாவேந்தர்.

மூவரும் "பெரியோர் மாட்டு உண்டான கோபம். அதே கணத்திலேயே மறைந்துவிடும்" என்கின்றனர்.

இவர்கள் உரையினின்று "பெரியோர்க்கு எதுவித காரணமு மின்றி வெகுளி ஏற்படும்" என்னும் கருத்து வெளிப்படுகிறது. இது தவறானது "காரணம்" எதுவுமின்றிக் "காரியம் எதுவுமில்லை" என்பர் அறிஞர். அறநெறிக்கும் தமக்கும் தீமை நிகழின் அது கண்டு பொங்குவதும், தீமை செய்தோரை ஒறுத்தலும் சான்றோர் இயல்பாகும். இப்பண்பையே வள்ளுவர் வெகுளி எனக் குறித்தார் என்னும் உண்மையை அறியாராய் மூவரும் இவ்வாறு உரை எழுதிக் குறைக்கு ஆளாயினர்.

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
அற்றே தவத்திற் குரு

"தவமுடையார்க்கு கொடியாரைத் தண்டிக்கவும். தாம் விரும்புவாரை நல்லாக்கவும் இயலும்" என்னும் வள்ளுவர் கருத்து இவ்விடத்தே சிந்தித்துப் பார்க்கத் தக்கது.

இதுகாறும் கூறியவற்றால் எடுத்தாண்ட குறளுக்கு பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் அமைத்த உரைகளே சிறப்பானவை என்பது தெளிவாகிறது.


படிப்பகம்

www.padippakam.com

## வெளிவரவிருக்கும்
## நூலாசிரியரின் பிற நூல்கள்

வடிவழகி (சரித்திரத் தொடர்கதை)
சிவிகை (கவிதைத் தொகுதி)
தேன்குளம் (கட்டுரைகள்)
தமிழராற்றுப்படை (சிற்றிலக்கியம்)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கிராமத்து ஓவியம்

ஆயிரத்தித் தொளாயிரத்து எழுபதுகள். நான் மரபுக் கவிதையின் வண்டலாற்றுப் பக்கம் உரங்கள் தேடியபோது தீவகத்தின் அனலையில் இருந்து ஒருவர் ஈழநாடு பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்தமை என்னை ஈர்த்துக் கொண்டது. அவர்தான் அனலை ஆறு இராசேந்திரம் அவர்கள். அவரது கவிதைக் கனம் ஆட்கொள்ள வைத்தபோதெல்லாம் அவரைத் தேடினேன். இலக்கியத்துறையின் வெளிச்ச வீடுகளில் இருந்து விலகிய ஒரு வாழ்வின் எதிர் நீச்சல் அவரது எழுதும் கரங்களை வழுத்தினேன் என்பதோடு மட்டும் நின்று கொண்டது. அனலையை கண்டேன் அல்லன்.

கனடியப் புலம் அந்தக் கவைலையை அகற்றியது. அவர் இங்கே இருப்பதை எனது செவிப் பறைகள் மீட்டுத் தந்தன. அவரை அழைத்துச் சந்தித்துக் கொண்டேன். அவரோடு ஒரு இறுகிய நட்புணர்வு வாழ்புபெற்று வளர்கிறது. அவரின் கவிதைகள் மீண்டும் என்னை நனைத்தபோது அந்தக் கிராமத்து ஓவியம் என்னைக் குளிரூட்டியது. அகவல் என்கிற கவிதையின் வடிவில் அகக் கூற்றுக்களை எடுத்தியம்பும் அழகும் வாய்ப்பும் இருப்பதற்கான அடையாளங்களை அவரின் ஆக்கங்களில் இருந்து கண்டு கொண்டேன்.

ஈழநாடு பத்திரிகையில் எழுதினார். சுடரில் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் பிரசுரமாயின. சுடரில் வெளியான காவியமானவள் தொடர்கதை பிரபல்யமானது. அறுபது சிறுகதைகளுக்கு மேலாக பத்திரிகை வடிவங்களை இவரது வாலிபக் காலம் வரைந்தது. ஈழநாடு இலக்கியப் பட்டறையில் இவரது வருங்காலம் அனைத்து இலக்கிய வாதிகளின் நட்புறவுகளோடு வளர்வு பெற்று, எழுத்துத்துறையின் ஆளுமைகள் உரமேறின.

சங்கிலி மன்னனின் காதலியாகத் திகழ்ந்த வடிவழகியின் தியாக வரலாற்றைக் கூறும் சரித்திரத் தொடர்கதையை உருவாக்கி வருகிறார். இவரது கவிதைத் தொகுதியான "சிவிகை" விரைவில் நம்நாடு பதிப்பகம் சார்பாக வெளிவருகிறது.

"புல்லும் பூவிதழும்" என்ற இந்த இவரது திருக்குறள் உரைகளின் ஆய்வுநூல் நம்நாடு பத்திரிகை இலக்கியப் பத்திரிகையாக ஊன்றக் காரணமாகிய கட்டுரைகளின் தொகுப்பு. நம்நாடு வெளியீடாக வெளியிடும் எண்ணத்திற்கு கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்குக் கொடுத்த வாக்குகளில் இருந்து மீறாமல் கனடிய எழுத்தாளர் இணையத்திற்கே அந்தப் புகழைக் கொடுத்திருக்கின்றார். எழுத்தாளர் இணையத்தின் வளர்ச்சியும் கனடிய இலக்கிய உலகின் தேவை என்பதால் அவரின் உணர்வோடு சங்கமமானேன். பல கட்டுரைகள், கவிதைகளை நம்நாடு பத்திரிகையோடு இணைத்து வளரும் இந்த தமிழ்ப் பெரும்பண்ணை நாளைய கனடிய உலகின் இலக்கியக் காலம் என்பது திண்ணம்.

**தீவகம் இராஜலிங்கம்**

படிப்பகம்